

















# வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதல்:

## ஆசியாவிருந்தான சம்பவங்களின் கதைகள்

வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் (IDWF)




**2020 ஏப்பிரலில் முதலில் பதியப்பட்டது**

வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதல்: ஆசியா – ஹொங்கொங் இலிருந்தான சம்பவங்களின் கதைகள்:IDWF

ISBN 978-988-74574-2-8 (web pdf)

வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் (IDWF)

---

**வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் பற்றி -**

வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் (“IDWF”) என்பது வீட்டுப் பணியாளர்களின் அங்கத்துவ அடிப்படையிலான ஓர் உலக ஸ்தாபனமாகும். எல்லா இடங்களிலும் வீட்டுப் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் முன்னேற்றுதல் என்பவற்றுக்கு ஒரு உறுதியான, ஜனநாயக ரீதியான மற்றும் ஒன்றுபட்ட வீட்டுப் பணியாளர்கள் வலையமைப்பைக் கட்டியெழுப்புவது அதன் இலக்காகும். 2020 மார்ச் அளவில், IDWF 500,000 இற்கும் மேற்பட்ட வீட்டுப் பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, 57 நாடுகளிலிருந்து 74 இணைப்பு அமைப்புகளைக் கொண்டிருந்தது. அதில், அநேகமானவை தொழிற் சங்கங்களாகவும், ஏனையவை சங்கங்கள், வலையமைப்புகள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவுகள் என்பவையாக அமைந்திருந்தன.

www.idwfed.org

---

**முகப்பு அட்டைப் படங்கள்**

**இடது மேல் வரிசை: இவான் அப்ரு/உரிமைகள் வெளிப்படுத்தல் ©CC BY –NC-ND – “ நீதியின் விலை” ஆவணப் படத்திற்கான நேர்காணலின் போது பேபி ஜேன் அலஸ், மார்ச் 12, 2019.**
**மேல் வரிசை மத்தி: வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச தினக் கொண்டாட்ட வைபவம், ஜூன் 16, 2019. படம்: FADWU**

**வலது மேல் வரிசை: JALA PRT, இந்தோனேசியா**

**மத்திய வரிசை (இரண்டு படங்களும்): GKS இந்தியா**

**இடது மூன்றாவது வரிசை: kompas.com/RobertusBelarminus**

**மூன்றாவது வரிசை மத்தி: JALA PRT இந்தோனேசியா**

**மூன்றாவது வரிசை வலது: NDWF இந்தியா**

**வடிவமைப்பு மற்றும் ஒழுங்கமைப்பு: m+m ஸ்டுடியோஸ்**

**கவிதையாக்கம் - முர்னி, இந்தோனேசியா, 24.09.2016**

சந்தோஷமும் துக்கமும், மகிழ்ச்சியும் துயரமும் இனிமையும் கசப்பும் என

வாழ்க்கைச் சக்கரம் தொடர்ந்து சுற்றுகிறது

நான் வாழும் வாழ்க்கை கசப்பானாலும்,

எனக்கு கிட்டியவர்களுக்காக

நான் தொடர்ந்து புன்னகைப்பேன்

அனைவருக்காக நீதியைக் காப்பதற்கும், உலகை நேசிப்பதற்குமாக

நான் தொடர்ந்து போராடுவேன்.

முர்னி நீதிமன்றில் முன்னிலையாகிறார்



படம்: www.wowkeren.com

*Roda kehidupan akan terus berputar*

*Suka maupun duka, senang maupun susah*

*Manis maupun pahit*

*Meskipun pahit yang aku jalani*

*Aku akan tetap terus tersenyum*

*Untuk semua*

*Yang ada di dekat ku*

*Aku akan terus berjuang*

*Demi membela keadilan untuk semua orang*

*Dan duniaku tercinta*

## சொற்சுருக்கம்

ADW வீட்டுப் பணியாளர்கள் சங்கம், கம்போடியா

C189 and R 201 சர்வதேச தொழில் ஸ்தாபன உடன்படிக்கை இல. 189 மற்றும் வீட்டுப் பணியாளர்களுக்கான கண்ணியமான வேலை தொடர்பான பரிந்துரை இல.201

C190 and R 206 சர்வதேச தொழில் ஸ்தாபன உடன்படிக்கை இல. 190 மற்றும் தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்தல் என்பவற்றை இல்லாதொழிப்பதற்கான பரிந்துரை இல.206

DWO வீட்டுப் பணியாளர்கள் ஸ்தாபனம்

FADWU ஆசிய வீட்டுப் பணியாளர்கள் சங்கங்களின் ஹொங்கொங் சம்மேளனம்

GKS Gharelu Kaamgar Sangathan, இந்தியா, கர்நாடகாவிலுள்ள வீட்டுப் பணியாளர்களுக்கான ஸ்தாபனம்

IDWF வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம்

ILO சர்வதேச தொழில் ஸ்தாபனம்

JALA PRT Jaringan Nasional Advokasi Pekerja Pembantu Rumah Tangga அல்லது வீட்டுப் பணியாளர்கள் ஆலோசனையுரைத்தலுக்கான தேசிய வலையமைப்பு, இந்தோனேசியா

NDWM வீட்டுப் பணியாளர்களுக்கான தேசிய இயக்கம், இந்தியா

NDWWU பெண் வீட்டுப் பணியாளர்களுக்கான தேசிய சங்கம், பங்களாதேஷ்

SKDWA சண்டிகன் குவைத் வீட்டுப்பணியாளர்கள் சங்கம்

UN ஐக்கிய நாடுகள்

UNITED Philippines பிலிப்பைன்ஸிலுள்ள வீட்டுப் பணியாளர்களின் ஐக்கிய சம்மேளனம்

# உள்ளடக்க அட்டவணை

முன்னுரை........................................................................ 6

அறிமுகம்................................................................... 8

சம்பவங்களின் கதைகள்.......................................................... 10

முர்னி மற்றும் JALAPRT, ஜகர்த்தா, இந்தோனேசியா ............................ 12
ஸ்ரே மம் மற்றும் ADW, போனம் பெஞ், கம்போடியா.................... 14
ரிசா ஆர்.அமஹன் மற்றும் UNITED, மணிலா, பிலிப்பைன்ஸ்........... 16
சுனித்தா எக்கா மற்றும் NDWM, பாட்னா, இந்தியா.................. 18
சபினா குட்டான் மற்றும் GKS, கார்கான், இந்தியா..................... 20
அனோவரா பேகம் மற்றும் NDWWU, டாக்கா, பங்களாதேஷ்.......... 24
மரியா மற்றும் SKDWA, குவைத் நகரம், குவைத்...................... 26
பேபி ஜேன் அலஸ் மற்றும் FADWU, யுயென் லொங், ஹொங்கொங்.. 28

பகுப்பாரய்தல் மற்றும் கலந்துரையாடல்...................................... 31

முடிவுரைத்தல்கள் மற்றும் முன்செல்வதற்கான வழி...........................36

ஆதார மூலங்கள்............................................................ 39
பின்னிணைப்பு: நேர்காணல் வழிகாட்டல் மற்றும் தரவு உறுதிப்படுத்தல் அட்டவணை................................................................ 40

ஸ்தாபனங்களுக்கான தொடர்புகள்............................................41




புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச தினத்தைக் கொண்டாடுகின்றனர், மலேஷியா:2019-6-16

*சபீனா குட்டன் (2000-2014) மற்றும் ஸ்ரே மம் (1990-2020) ஆகியோரின் ஞாபகார்த்தம்*

*அன்பான சகோதரிகளே, வலி அல்லது துயர் இல்லாவிடத்தில் உங்கள் ஆன்மா சாந்தியடையட்டும்.*

*அனைத்து வீட்டுப் பணியாளர்களுக்குமாக உரிமைகள் மற்றும் நீதி, கண்ணியமான வேலை மற்றும் வன்முறை, துன்புறுத்துதல் மற்றும் பாரபட்சம் என்பவையில்லாத வேலை நிபந்தனைகள் என்பவற்றுக்கான போராட்டங்களைத் தொடர்வதற்கு உங்களது தைரியமும், தியாகங்களும் எங்களை ஊக்கப்படுத்துகின்றன.*

## முன்னுரை

பெண்களை அதிகம் பெரும்பான்மையாகக் கொண்ட, வீட்டுப் பணியாளர்கள், வறுமையிலிருந்து தப்புவதற்கும் மற்றும் தங்களுக்கும், தங்களது குடும்பங்களுக்கும் ஒரு கண்ணியமான வாழ்க்கையைப் பெற்றுக் கொள்வதற்காக கடுமையாக உழைக்கின்றனர். ஏனைய வேலையாட்களைப் போன்றே, வாழ்வதற்கான ஓர் ஊதியத்தை ஈட்டுவதற்கும், மதிப்பு மற்றும் கண்ணியத்துடன் நடத்தப்படுவதற்கும், தொழில் மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான வழிவகைகளைக் கொண்டிருப்பதற்கும் அவர்கள் விரும்புகின்றனர்.

இருந்த போதிலும், மிக அதிகமான சந்தர்ப்பங்களில், வீட்டுப் பணி என்பது அரிதாகவே மதிக்கப்படுகின்றதுடன் குறைவாகவே கொடுப்பனவு செய்யப்படுகின்றது. இது ஏனெனில் வீட்டுப் பணி, பெண்களாலேயே மேற்கொள்ளப் படுகின்றதுடன், அது, வீட்டில் தங்களது சொந்தக் குடும்பங்களில் பெண்களால் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவில்லாத பராமரிப்பு வேலையை ஒத்திருப்பதினாலாகும். மற்றையவர்களின் குடித்தனங்களில் மேற்கொள்ளப்படும் வீட்டுப் பணி உண்மையான 'வேலையாக' அரிதாகவே நோக்கப்படுகிறது, பதிலுக்கு அது 'உதவுவதற்காக' அநேகம் பெண்களாலும் மற்றும் பிள்ளைகளாலும் மேற்கொள்ளப்படுகின்ற 'எளிதான' மற்றும் 'இலகுவான' வேலையாகப் கருதப்படுகின்றது. இதன் விளைவாக, வீட்டுப் பணியாளர்கள் 'தொழிலாளர்களாக' அரிதாகவே வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றனர். சட்டத்தின் கீழ் பயனுறுதியான பாதுகாப்பிலிருந்து அவர்கள் விலக்கப்பட்டவர்களாகவும் துஷ்பிரயோகம், அச்சுறுத்தல் மற்றும் சுரண்டல் என்பவற்றின் அதிக இடரேதுநிலை கொண்டவர்களாகவும் உள்ளனர்.

பிறரின் தனிப்பட்ட குடித்தனங்களில் அநேகம் வீட்டுப் பணியாளர்களாக வாழும், நாங்கள், பால்நிலை அடிப்படையிலான வன்முறை உட்பட, துன்புறுத்துதல் மற்றும் வன்முறை போன்றவற்றினால் பாதிக்கப்படுகின்ற அதிக இடரேதுநிலைக்கு முகங் கொடுக்கிறோம். அநேகம், வசதியற்ற மக்கள் குழுக்களிலிருந்து வருகின்ற, பெண்கள் மற்றும் இளம் பெண் பிள்ளைகள், சில சமயங்களில் இளம் பையன்கள் மற்றும் ஆண்களாகிய, நாங்கள் வெளியார் கண்களுக்குத் தெரியாது, தனிமையில், கட்புலனாக வேலைகளைச் செய்கிறோம்.

துஷ்பிரயோகம், அல்லது அதன் அச்சுறுத்தல், எங்களை மித மிஞ்சிய நேரங்களுக்கு வேலை செய்வதற்கும், குறைந்த ஊதியம் அல்லது ஊதியமே அற்ற தன்மையை ஏற்றுக் கொள்வதற்கும் மற்றும் ஆபத்தான பணிகளை மேற்கொள்வதற்கும் வைக்கிறது. விரக்தியில் நாங்கள் வேதனையுற்று, காயப்பட்டு மற்றும் உடைந்து போகிறோம். இன்று, அடிமைத்தனம் உலகில் மிகுந்திருக்கும் ஒரு தொழிலே வீட்டுப் பணியாகும். எங்களில் சிலர் சிறை வைக்கப்பட்டிருக்கிறோம், நாங்கள் வேலை செய்யுமிடத்தை விட்டு ஒரு போதும் வெளியேறுவதற்கு அனுமதிக்கப் படுவதில்லை, மற்றும் எங்களில் சிலர் வல்லுறவு, சித்திரவதை மற்றும் கொலை என்பவற்றுக்கு பலிக்கடாவாக ஆகிறோம்.

வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச சம்மேளனத்தில் (IDWF) ஒருங்கிணைந்திருக்கும் வீட்டுப் பணியாளர்களாகிய, நாங்கள், இத்தகைய துஷ்பிரயோகங்கள் நிறுத்தப்பட வேண்டும் என உறுதியாக உணர்கிறோம். 2011 இல் வீட்டுப் பணியாளர்களுக்கு கண்ணியமான வேலை தொடர்பான சர்வதேச தொழில் தரநியமங்களின் அங்கீகாரத்திற்கும், 2019 இல் தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்துதலை இல்லாதொழிப்பதற்காகவும் நாங்கள் கடுமையாக உழைத்தோம். ஏனைய தொழிலாளர்களைப் போன்றே அதே உரிமைகளை எல்லா வீட்டுப் பணியாளர்களும் அனுபவிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். ஒரு வேலைக்கும் வன்முறை இல்லாத வாழ்க்கைக்கும் அவர்கள் உரித்துடையவர்களாவர். அதிகமான வீட்டுப் பணியாளர்கள் தொடர்ந்தும் மௌனமாகத் துயருறுவதால், இந்த செய்தி பலரும் அறியப்பட்டதாக வருதல் வேண்டும்.

ஆசியப் பிராந்தியம் மிக அதிக எண்ணிக்கையிலான வீட்டுப் பணியாளர்களைக் கொண்டுள்ளது. அங்கே, ஒவ்வொரு ஐந்து வீட்டுப் பணியாளர்களில் நால்வர் பெண்களாவர். அவர்களில் பலர் சிறுவர்கள் - அநேகம் சிறுமிகள், ஆனால் பையன்களும் உள்ளனர். ஆசியப் பெண்கள் பலரும் தங்கள் வீட்டுச் சமூகங்கள் மற்றும் நாடுகளை விட்டு வேலை செய்வதற்காகப் புலம் பெயர்கின்றனர். ஆனாலும், கணிசமான இடரேதுநிலைநிலைகளில், தங்களின் குடும்பங்களுக்கான வருமானத்தை அவர்கள் ஈட்டுகின்றனர். அவர்கள் பெண்களென்பதாலும், மற்றும் அவர்களது இனம், நிறம், குலம், மதம், சமூகத் தோற்றம், சாதி, வகுப்பு அல்லது தேசியம் காரணமாக அவர்கள் பாரபட்சப்படுத்தப்படுகின்றனர். அவர்களது தொழில் தருனர்களை விட குறைவான சமூக மற்றும் பொருளாதார அந்தஸ்து காரணமாக அவர்கள் ஓர் அதிகார துஷ்பிரயோகத்திற்கு முகங் கொடுக்கின்றனர்.

ஆசியா, குவைத் மற்றும் வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச சம்மேளனத்தில் இணைந்துள்ள வீட்டுப் பணியாளர்கள் சங்கங்களாகிய, நாங்கள், ஆசிய வீட்டுப் பணியாளர்கள், அவர்கள் மேற்கொள்ளும் பணி காரணமாக அனுபவித்த மற்றும் பாதிப்புற்ற வன்முறைகள் மற்றும் சிலசமயங்களில் உயிர் அச்சுறுத்தும் துஷ்பிரயோகங்களை விபரிக்கும் அவர்களின் உண்மைக் கதைகளைப் பகிர்ந்து கொள்ளும் சம்பவங்களின் இந்தத் தொகுப்பை உருவாக்கினோம். நீதியை வேண்டி அவர்களுக்கு உதவுவதில் நாங்கள் முகங் கொடுத்த சவால்கள், வெற்றிகள் மற்றும் கஷ்டங்கள் என்பவற்றையும் கூட நாங்கள் இதில் பகிர்ந்து கொள்கிறோம்.

வீட்டுப் பணியாளர்களுக்கெதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பான கதைகளின் இந்தத் தொகுப்பு, வீட்டுப் பணியாளர்கள் பலரும் முகங் கொடுக்கும் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பவற்றுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தி மற்றும் செயற்படுவதற்கு வீட்டுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்தாபனங்கள், வேலை தருனர்கள், அரசாங்கங்கள், மற்றும் ஒரு தொகையான ஏனைய செயற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களை ஊக்குவிக்கும் என நாங்கள் நம்புகிறோம். இந்த சகிக்க முடியாத துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு மற்றும் நிறுத்துவதற்கு பயனுறுதியான சட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தும் பொறிமுறைகள் என்பவற்றுக்காக வேண்டி எங்கள் குரல்களை நாங்கள் எழுப்புகிறோம்.

நொவெலிடா வி.பாலிசொக்
(Novelita V. Palisoc)
ஆசிய IDWF இலிருந்தான நிறைவேற்றுச் சபை (கௌரவ உறுப்பினர்)




பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான 16 நாட்கள் செயல் நடவடிக்கைகள்: **2019-11-25~12-10**

# அறிமுகம்

> “ *எங்கள் வேலையிழத்தல் என்ற பயத்தின் காரணமாக, கதைப்பதற்கு நாங்கள் அஞ்சுவதால், உலகம் முழுவதிலும் வீட்டுப் பணியாளர்கள் பலரினதும் ஒரு மௌனமான கொலையாளியாக பால்நிலை அடிப்படையிலான வன்முறை உள்ளது. இந்தத் துஷ்பிரயோகத்தை நிறுத்துவதற்கு நாங்கள் குரல் உயர்த்த வேண்டும்’’*

**மிரிடெல் விற்பூயி, தலைவர், IDWF**
(Myrtle Witbooi, President, IDWF)

வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் (IDWF), வீட்டுப் பணியாளர்களின் ஓர் அங்கத்துவ அடிப்படையிலான உலக ஸ்தாபனமாக 2013 இல் உருவாக்கப்பட்டது. அது வீட்டுப் பணியாளர்களின் சர்வதேச வலையமைப்பில் வளர்ந்தது. மார்ச் 2020 அளவில், IDWF 500,000 இற்கும் மேற்பட்ட வீட்டுப் பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, 57 நாடுகளிலிருந்து 74 இணைப்பு அமைப்புகளைக் கொண்டிருந்தது. வீட்டுப் பணியாளர் என்பவர் ஒரு தொழில் ரீதியான தொடர்புமுறைக்கு உட்பட்ட வகையில் வீட்டு பணிகளில் ஈடுபட்டுள்ள யாரேனும் ஒரு நபராவர். வீட்டுப் பணியாளர்கள் தொழில் சங்கங்கள், சங்கங்கள், பணியாளர்கள் கூட்டுறவுகள் மற்றும் வலையமைப்புகள் என்பவற்றைச் சார்ந்து அமைந்துள்ளனர். வீட்டுப் பணியென்பதும் தொழில் என நாங்கள் நம்புகின்றதுடன் அனைத்து வீட்டுப் பணியாளர்களும் ஏனை தொழிலாளர்களைப் போன்ற அதே உரிமைகளை அனுபவிப்பதற்குத் தகுதி உடையவர்களாவர். அனைத்திடங்களிலும் வீட்டுப் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, முன்னேற்றுவதற்கு வீட்டுப் பணியாளர்களின் ஒரு வலுவான, ஜனநாயக ரீதியான மற்றும் ஒருங்கிணைந்த உலக ஸ்தாபனத்தை நாங்கள் உருவாக்குகிறோம்.

2009 இலிருந்து, வீட்டுப் பணியாளர்களுக்கான கண்ணியமான வேலை தொடர்பாக சர்வதேச தொழில் தரநியமங்களை உருவாக்குவதை IDWF முனைப்புடன் ஆதரித்தது. 2011 இல், சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் உறுப்பு நாடுகள், அரசுகள், உலகம் முழுவதிலிருந்து தொழிலாளர்கள் மற்றும் தொழில் தருனர்களின் ஸ்தாபனங்களை ஒருங்கே கொண்டு வந்து, உடன்படிக்கை இல.189 (C189) மற்றும் வீட்டுப் பணியாளர்களுக்காக கண்ணியமான வேலையை ஊக்குவிப்பதற்கான பரிந்துரை 190 (R190) என்பவற்றை ஏற்று அங்கீகரித்த போது, அவர்கள் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டினர்.

"….வீட்டுப் பணிகள் அல்லது வேலைகள் தொடர்ந்தும் குறைத்து மதிப்பிடப்படுவதுடன் கட்புலனாகததாகவும் உள்ளது. அது, முக்கியமாக பலரும் புலம்பெயரந்தவர்களாக அல்லது வசதி குறைந்த சமூகங்களின் அங்கத்தவர்களாகவுள்ள பெண்கள் மற்றும் இளம் பெண்களால் மேற்கொள்ளப்படுகிறது" – என C 189, வீட்டுப் பணியாளர்களுக்கெதிரான வன்முறையின் உயர் இடரேதுநிலையை சுட்டிக் காட்டுகிறது. வீட்டுப் பணியாளர்கள், குறிப்பாக பணியில் பாரபட்சம் மற்றும் ஏனைய மனித உரிமைகளின் துஷ்பிரயோகங்களுக்கான ஆபத்துக் கொண்டவர்களாக உள்ளனரெனக் குறிப்பிடுவதுடன் (முன்னுரை), "அனைத்து வடிவிலான துஷ்பிரயோகம், துன்புறுத்துதல் மற்றும் வன்முறை என்பவற்றுக்கெதிராக வீட்டுப் பணியாளர்கள் பயனுறுதியான பாதுகாப்பை அனுபவிப்பதை உறுதிப்படுத்துவதற்கான" நடைமுறைகளை அது கோருகிறது (உறுப்புரை 5).

சர்வதேச மட்டத்தில், 2018 இல், தொழில் உலகில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கெதிரான வன்முறை மற்றும் துன்புறுத்தல் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் வீட்டுப் பணியாளர்களின் கரிசனைகளைத் தெரிவிப்பதற்கு ஒரு தளமளித்தல் மற்றும் தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பவற்றுக்கெதிராக சர்வதேச தொழில் தரநியமங்களை உருவாக்குவதற்கான சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் தரநியம உருவாக்கல் செய்முறைகளுக்கு ஆதரவளித்தல் என்பவற்றுக்கு IDWF பங்களித்தது. ஜுன் 2019 இல், சர்வதேச தொழில் மாநாட்டில், சர்வதேச தொழில் ஸ்தாபன உறுப்பு நாடுகள் உடன்படிக்கை இல் 190 (C190) ஐயும் மற்றும் தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்துதலை இல்லாதொழிப்பதற்கு பரிந்துரை இல.206 (R206) ஐயும் ஏற்று அங்கீகரித்தன.

உள்ளக ரீதியாக, 2018 இல் தென்னாபிரிக்காவிலான IDWF இன் இரண்டாவது மாநாட்டில், IDWF இன் இணைப்பு அமைப்புகள், வரும் ஐந்து வருடங்களுக்கான ஒரு குறிக்கோள் நடவடிக்கையாக, பால்நிலை அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான ஒரு தீர்மானத்தை அங்கீகரித்தன. தீர்மானம், பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் அதிகரித்த புலனாதல் மற்றும் தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்பறுத்துதலை இல்லாதொழிப்பதற்கான ஆதரித்தலைக் கோரியது.

ஆசியாவில், 2017-2018 இல், 12 நாடுகளில் 13 வீட்டுப் பணியாளர்கள் ஸ்தாபனங்கள் மத்தியில் வீட்டுப் பணியாளர்களுக்கெதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பாக IDWF ஒரு மதிப்பாய்வை மேற் கொண்டது. அதன் பிரதான கண்டறிதல்கள் வருமாறு:

- அனைத்து ஸ்தாபனங்களும் அதன் உறுப்பினர்களால் முகங் கொடுக்கப்பட்ட வன்முறை மற்றும் துன்புறுத்துதல் பற்றி முறைப்பாடுகளைப் பெற்றன.
- குற்றமிழைத்தவர்கள் அவர்களின் தொழில் தருனர்கள், தொழில்தருனரின் குடித்தனங்களிலுள்ள மற்றயைவர்கள், தொழில்வாய்ப்பு இடைத் தரகர்கள் அல்லது அவர்களின் சொந்தக் குடும்பங்கள் அல்லது குடித்தனங்களின் உறுப்பினர்களாக அநேகம் இருந்தனர்.
- அவர்களது வேலைத்தலத்தில் உறுப்பினர்களால் அனுபவிக்கப்பட்ட பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளில் மிகவும் பொதுவான வகைகளாக பொருளாதார ரீதியான துஷ்பிரயோகம், உள ரீதியான துஷ்பிரயோகம், உடல ரீதியானதும் மற்றும் பாலியல் ரீதியிலானதுமான துஷ்பிரயோகம், வார்த்தை ரீதியிலான துஷ்பிரயோகம், மற்றும் தகுந்த உணவுக்கான வழிமுறைகளின்மை என்பவற்றை உள்ளடக்கின.
- குறைவான நிகழ்தகவு கொண்ட ஏனைய ஆனால் அதிர்ச்சியளிக்கு வன்முறை வகைகளாக வதைத்தல், மிரட்டுதல், பணியாளரின் அந்தரங்கத்தை மீறுதல், மற்றும் ஊழியத்தை பிடித்து வைத்தல் என்பவை காணப்பட்டன.
- பங்குபற்றிய வீட்டுப் பணியாளர்கள் ஸ்தாபனங்களில் அநேகமானவை பால்நிலை அடிப்படையிலான வன்முறையை ஓர் உயர் முன்னுரிமை கொண்டதாக கருதின. விழிப்புணர்வை எழுப்புதல், வீட்டுப் பணியாளர்கள் மத்தியில் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பவற்றின் மீது கவனம் செலுத்துவதற்கான ஆலோசனை மற்றும் பயிற்சி மற்றும் அதற்கெதிராக போராடுவதற்கு பயனுறுதியான பங்காண்மைகளைக் கட்டியெழுப்புதலின் தேவைகளையும் அவை உறுதிப்படுத்தின.



படம் : JALA PRT

2019 இன் முற்பகுதியில், ஆசியாவில் வீட்டுப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதலின் புலனாதல் தன்மையை அதிகரிப்பதற்கும் மற்றும் அத்தகைய வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு வீட்டுப் பணியாளர்கள் ஸ்தாபனம் (DWO) உதவின என்பதைப் பகிர்ந்து கொள்வதற்குமாக வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாக ஒரு சம்பவக் கதையை விபரிப்பதற்கு IDWF அதன் DWO இணைப்புகளை அழைத்தது. உடல் ரீதியான வன்முறை மற்றும் துன்புறுத்துதலின் பரிமாணத்தை சேர்த்துக் கொள்வதற்காக குவைத்திலுள்ள சன்டிகன் வீட்டுப் பணியாளர்கள் சங்கத்திலிருந்து ஒரு சம்பவம் உட்பட, இந்த சம்பவத் தொகுப்பில் எட்டு சம்பவங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. IDWF இந்த சம்பவங்களின் கதைகளை பின்வரும் ஒரு நோக்கத்திற்காகத் தொகுத்தது:

- வீட்டுப் பணியாளர்களுக்கு எதிராக பால்நிலை அடிப்பமையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதலின் வேறுபட்ட வடிவங்களை இனங் காணுதல்.
- வீட்டுப் பணியாளர்கள் ஏன் பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதலிற்கு ஆளாகும் ஆபத்துடையவர்களாக உள்ளனர் என்பதன் புரிந்து கொள்ளுதலை அதிகப்படுத்துதல்.
- வீட்டுப் பணியளார்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்துதலைத் தடுத்தல் மற்றும் அவற்றை எதிர்த்தலில் உள்ள சிரமங்கள் மற்றும் வெற்றிகரமான மூலோபாயங்கள் பற்றி கண்டறிதல்.

சம்பவக் கதைகள் அனைத்துமே உண்மையான வாழ்க்கை நிலைமைகளை விபரிக்கின்றன. அவை பங்களாதேஷ், கம்போடியா, இந்தியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தான ஆறு வீட்டுப் பணியாளர்கள் தங்களது சொந்த நாட்டிலும், மற்றும் இரண்டு புலம்பெயர் பிலிப்பைனோ வீட்டுப் பணியாளர்கள் முறையே ஹொங்கொங் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் முகங் கொடுத்த வன்முறைகள் பற்றிய கதைகளைக் கூறுகின்றன. அநேகமான கதைகள், பொறுத்துக் கொள்ள முடியாத மிகவும் 'மோசமான சம்பவ' நிலைமைகளையும் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மீது இத்துஷ்பிரயோகங்களின் மோசமான தாக்கங்களையும், ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் தைரியம் மற்றும் மீண்டுவரும் தன்மை என்பவற்றையும் எடுத்துக் காட்டின. அத்தகைய வன்முறைகளை எதிர்த்துப் போராடுவதற்கு சட்டங்கள் எவ்வாறு பிரயோகமாகின்றன, DWOகள் கடந்து வரவேண்டிய தடைகள், மற்றும் அத்தகைய துஷ்பிரயோகங்களுக்கு எதிராக வெற்றிகரமாக செயற்படுவதற்கு அவை உபயோகித்த மூலோபாயங்கள் மற்றும் நடைமுறை ரீதியான நடவடிக்கைகள் என்பவற்றையும் அவை விபரிக்கின்றன.

பெரும்பாலான நாடுகளில் விரிவான சட்டங்கள் மற்றும் இயலும் தன்மையான பொறிமுறைகள் இல்லாத காரணத்தினால், சவால்கள் பாரியவையாக உள்ளன. இவை உள்ள சில நாடுகளில், மக்கள் விழிப்புணர்வு மற்றும் வீட்டுப் பணியாளர்களுக்கு எதிராக பால்நிலை மற்றும் ஏனைய பல பக்கச்சார்புகள் காரணமாக பயனுறுதியான நடைமுறைப்படுத்தலுக்கான அமைப்பு ரீதியிலான உதவி இல்லாமை தொடர்கிறது. துன்புறுத்துதல் மற்றும் வன்முறை நிகழுதலிருந்து தடுப்பதற்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நாடுவதற்கும், இந்த அறிக்கையில் பங்கேற்கும் DWOகள், தகவல் மற்றும் தொடர்பாடல், வலையமைத்தல் மற்றும் ஒழுங்கமைத்தல், பொது நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகங்களிடமிருந்தான ஆதரவு, அர்ப்பணிப்பான மற்றும் உறுதியான DWOகள் மற்றும் அவற்றின் இணைப்புகள், மற்றும் போதுமான நிதியளித்தல் என்பவற்றுக்கான தேவையை வலியுறுத்தின.







இந்த சம்பவத் தொகுப்பு நூலில் தங்களது கதைகளைப் பகிர்ந்து கொண்ட பின்வரும் வீட்டுப் பணியாளர்கள் மற்றும் DWO இற்கு IDWF தனது நன்றிகளைத் தெரிவிப்பதற்கு விரும்புகிறது:

- முர்னி, JALA PRT - இந்தோனேசியா
- ஸ்ரே மம் மற்றும் ADW – கம்போடியா
- ரிசா ஆர் அமஹன் மற்றும் UNITED – பிலிப்பைன்ஸ்
- சுனிதா எக்கா மற்றும் NDWM மற்றும் GKS - இந்தியா
- அனோவரா பேகம் மற்றும் NDWWU – பங்களாதேஷ்
- மரியா மற்றும் SKDWA – குவைத்
- பேபி ஜேன் அலஸ் மற்றும் ADWU – ஹொங்கொங்

நேர்காணல்கள் மற்றும் மீள்பரிசீலித்தல்களுக்காக பிஷ் ஐபி (Fish Ip), அனைத்து வழிகாட்டல்களுக்காக எலிசபெத் டாங் (Elizabeth Tang), ஆராய்ச்சிகளுக்காக சிவ்வஹா லீ (Siewhwa Lee), ஆவண வரைபு, எழுதுதல் மற்றும் தொகுத்தல் என்பவற்றுக்காக யுன்மி வொங் ( Yuenmei Wong), நிலென் ஹஸ்பெல்ஸ (Nelien Haspels) மற்றும் எல்சா ரமோஸ் - கார்பொன் (Elsa Ramos-Carbone) ஆகியோருக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகின்றன.

## முர்னி மற்றும் JALA PRT, ஜகார்த்தா, இந்தோனேசியா
## லிட்டா அங்கிரானி (Lita Anggraini) அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது

*தேசிய ஒருங்கிணைப்பாளர், Jaringan Nasional Advokasi Pekerja Rumah Tangga (JALA PRT அல்லது வீட்டுப் பணியாளர்கள் ஆலோசனைக்கான தேசிய வலையமைப்பு)*





kompas.com

**துஷ்பிரயோகம்**

முர்னி (அவரது உண்மைப் பெயரல்ல), இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவிற்கு வெளியேயுள்ள, ஒரு மலைப் பிரதேசத்தில், போகொர் மாவட்டத்திலுள்ள ஒரு சுன்டனீஸ் குடும்பத்தில், 1995 இல் பிறந்தார். அவரது தந்தை ஒரு விவசாயி என்பதுடன் சுயாதீனமான வகையில் வாகனச் சாரதியாகவும், தாய் குடும்பம் மற்றும் வீட்டைப் பார்க்கும் இல்லத்தரசியாகவும் இருந்தனர். முர்னி, அவரது ஆறு சகோதரங்களில் மூத்தவராவர்.

12 வயதில் ஆரம்ப பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த பின்னர், முர்னியின் மாமியொருவர், அவரது போகொர் கிராமத்திலிருந்து மூன்று மணி நேரப் பயணத்தில் உள்ள கிழக்கு ஜகார்த்தாவிலுள்ள ஒரு மத்தியதரக் குடும்பத்தில் வேலை செய்வதற்காக முர்னியைப் பரிந்துரைத்தார். அவரது தொழில் தருனர், முர்னியின் கனிஷ்ட உயர் பாடசாலைக் கல்விக்காக கொடுப்பனவு செய்வார் என வாக்குறுதி அளிக்கப்பட்டதால், முர்னி இந்த வேலை ஏற்பாட்டுக்கு இணங்கினார். எனினும், முர்னியின் தொழில் தருனர் அதனைச் செய்யவில்லை; உண்மையில், அவர்கள் முர்னிக்கான சம்பளத்தை ஒரு போதும் கொடுத்ததே இல்லை. மேலும், அவருக்கு சிறிதளவான உணவையே அவர்கள் கொடுத்தனர், தங்களைத் தவிர வேறு எவரேனுடனும் தொடர்பு கொள்தல் அல்லது தொடர்பாடுவலிருந்து அவரைத் தடைசெய்தனர். அவர் வீட்டை விட்டு விட்டு வெளியேற முடியவில்லை.

சமையல் செய்தல், சலவை செய்தல் மற்றும் மூன்று மாடி குடும்ப வீட்டைச் சுத்திகரித்தல் வேலைகளுக்கு முர்னி பொறுப்பானவர்; அவரது தொழில் தருனர்கள், செராங் எனுமிடத்திலிருந்து ஒரு பெண், தேகல் எனுமிடத்திலிருந்து ஒரு ஆண் மற்றும் பார்டி எனுமிடத்திலிருந்து மற்றொருவரென மேலும் வேறு மூன்று வீட்டுப் பணியாளர்களையும் வேலைக்கு அமர்த்தியிருந்தார்கள். முர்னியின் பெண் வேலை தருனர் ஒரு ஒப்பனைக் கலைஞர் என்பதுடன் பல ஒப்பனை நிலையங்களைச் சொந்தமாகக் கொண்டிருந்தார். ஆண் தொழில்தருனர் தொழில் செய்யாதவராகவும் மற்றும் அவரது மனைவியின் வியாபார நடவடிக்கைகளுக்கு ஒத்தாசையளிப்பவராக இருந்தார்.

முர்னியின் தொழில் தருனர்கள், அநேகம் அவரை கையில் கிடைக்கும் பொருட்களால் அடித்தனர், வெந்நீரை அவர் மேல் ஊற்றினர், மற்றும் இரும்பால் அவரைச் சுட்டனர். ஏதேனும் எதிர்ப்பு அடையாளம் அல்லது செயல் மேலும் கடுமையான நடவடிக்கைகளால் எதிர்கொள்ளப்படும் என அவர்கள் முர்னியை அச்சுறுத்தினர். வருடங்கள் கடந்து செல்ல முர்னியின் குடும்பம் அவரைச் சந்திப்பதற்கு விஜயம் செய்தனர், எனினும் முர்னி நலமாக உள்ளார் அல்லது தங்களது குடும்ப உறுப்பினர் வேறொருவரின் வீட்டில் முர்னி வேலை செய்கிறார் என்றோ கூறி, அவர்கள் முர்னியைக் கண்டு சந்திக்காதிருப்பதை தொழில் தருனர்கள் உறுதிப்படுத்திக் கொள்வர்.

ஒரு நாள், முர்னியின் பெண் தொழில் தருனர், முர்னி தனது கணவர் மேல் இச்சை கொண்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டினார். முர்னியின் உடைகளைக் களைந்து அவரது பெண்ணுறுப்பில் மிளகாய்களைத் திணித்தும் மற்றும் அடித்தும் அவரைத் தண்டித்தார். முர்னியை வல்லுறவு கொள்வதற்கு நிர்ப்பந்தித்து இரண்டு ஆண் வீட்டுப் பணியாளர்களையும் கூட அவர் தாக்கினார். மற்றொரு சந்தர்ப்பத்தில், வீட்டிலுள்ள பூனைகளின் மலத்தை உண்பதற்கு பெண் தொழில் தருனர் முர்னியைக் கட்டாயப்படுத்தினார். அதன் பயனான, தொற்றிலிருந்து முர்னிக்கு காசநோய் உருவானது.

### துஷ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கை

2016 இல், முர்னி 21 வயதாகிய போது, அவரது பெண் தொழில் தருனர் ஒரு துடைப்பக்கடடையால் அடித்து முர்னியின் வாயில் மோசமான காயத்தை ஏற்படுத்தினார். சாதாரண ஒரு நபர் பொறுக்க முடியாத தன்பங்களின் அளவைக் கடந்த பின், இனியும் தாங்கிக் கொள்ள முடியாதென முர்னி கண்டார். அவரது துஷ்பிரயோக வேலைத் தலத்திலிருந்து தப்பிப்பதற்கு அவர் முடிவு செய்தார். அவர் தொலைக்காட்சி கேபிள் மூலமாக வெளியே கீழிறங்கி, அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு நேராகத் தப்பியோடினார். அவர், மகிவும் போசாக்கற்றவராக, வெறும் 25 கிலோ நிறை கொண்டவராக இருந்தார் என, பொலிஸ் அறிக்கை குறிப்பிட்டது. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருத்தர் முர்னியை கிழக்கு ஜகார்தாவிலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்றார், போகொரிலுள்ள அவரது பெற்றோர்களுடன் தொடர்பை ஏற்படுத்தியும், மற்றும் JALA PRT உடனும், ஜகார்த்தாவிலுள்ள பெண்கள் சட்ட உதவி நிலையம் (IPH APIK) என்பவற்றுடன் அவர் தொடர்பு கொண்டார்.

### DWO இன் மூலோபாயங்கள் மற்றும் நடைமுறை ரீதியான நடவடிக்கைகள்

சட்ட உதவி நிலையத்துடன் இணைந்து, JALA PRT முர்னிக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு ஆதரவுப் பிரச்சாரத்தை ஆரம்பித்தது. அவர்கள் ஊடக மாநாடுகளை நடத்தி, சட்ட உதவியை வழங்கி மற்றும் வழக்கை கூர்ந்து அவதானித்தனர். இதன் ஒரு விளைவாக, முர்னியின் தொழில் தருனர்கள் 2016 இல் நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு, ஒன்பது வருடச் சிறைத் தண்டனை பெற்றனர். முர்னியின் வெற்றி, இந்தோனேஷியாவில் பெண் வீட்டுப் பணியாளர்களின் பாதுகாப்புக்கான போராட்டத்தின் ஒரு மைல்கல்லைக் குறித்தது.

JALA PRT காப்பகத்தில் முர்னி வாழ்வதற்கு லிற்றா (Lita) ஏற்பாடு செய்தார். அந்தக் குடித்தனத்தில் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய மற்றைய மூன்று வீட்டுப் பணியாளர்களும் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் காப்பகத்தில் தங்க முடியுமாக இருப்பதை, பொலிஸ் உத்தியோகத்தர் உறுதிப்படுத்தினார். முர்னியின் பெற்றோர்கள் காப்பகத்தில் அவருடன் தங்குவதற்கு சில சமயங்களில் வந்தனர். ஒரு வளர்ந்தோர் கல்வி மாணவியாக தனது கனிஷ்ட உயர் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்வது முர்னியின் மிகுந்த விருப்பாக இருந்தது. ஒரு ஸ்பா உடல் பிடித்து விடல் சிகிச்சைப் பயிற்சியாளராக வருவது முர்னியின் இலட்சியமாக இருந்தது. இந்தோனேஷிய, கல்வி அமைச்சினால் கற்பித்தல் வழங்கப்படும், JALA PRT பாடசாலையில், முர்னி தனது கனிஷ்ட உயர் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த போது அவரது விருப்பு அனுமதிக்கப்பட்டது.

### சவால்கள் மற்றும் முன் செல்வதற்கான வழி

பெண்களுக்கு எதிரான வன்முறை இந்தோனேசியாவில் பரவிக் காணப்படுகிறது. இந்தோனேசிய தண்டனைக் கோவை மற்றொரு நபர் மீது உடல்ரீதியான தாக்குதலைத் தடை செய்கிறது. 2004 இல், குடித்தனங்களில் வன்முறையை ஒழிப்பதற்கான ஒரு புதிய சட்டத்தை (2004 ஆம் ஆண்டுச் சட்ட இல.23) இந்தோனேசியா ஏற்று அங்கீகரித்தது. இந்தச் சட்டம், உடன் - வாழும் வீட்டுப் பணியாளர்களை குடித்தனத்திற்கான அதன் வரைவிலக்கணத்தில் தெளிவாக உள்ளடக்குகியது. இதன் காரணமாக, தொழில் தருனரின் குடித்தனத்தில் உடல், உள, பாலியல் மற்றும் பொருளாதார ரீதியான வன்முறைகளுக்கு எதிராக அவர்கள் சட்ட ரீதியாக பாதுகாக்கப்படுகின்றனர். ஆனாலும், இந்தச் சட்டத்தை பயனுறுதியான வகையில் அமுல்படுத்துவதில் பல தடைகள் உள்ளன, அதில் முதன்மையானது வீட்டு வன்முறை பற்றி சமூகம் மற்றும் நிறுவனங்கள் போதுமான வகையில் அறிவூட்டப்படுவதற்குத் தவறியமையாகும்.

JALA PRT மற்றும் Komnas Perempuan (பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பான தேசிய ஆணையகம்) மற்றும் பெண்கள் மற்றும் பால்நிலை சமத்துவ ஸ்தாபனங்கள் பல பெண்களுக்கு எதிரான வன்முறையை இல்லாதொழிப்பதற்கான பிரச்சாரத்தைத் தொடர்கின்றன. 2004 இலிருந்து, JALA PRT, வீட்டுப் பணியாளர்களின் பாதுகாப்புச் சட்டமூலம் அல்லது PPRT (Perlindungan Pekerja Rumah Tangga) என்பதன் உருவாக்கம் மற்றும் அதன் நிறைவேற்றுதலுக்கான ஆதரித்தலில் முன்னணியில் இருந்து வருகின்றது. இந்தோனேசியப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் மத்தியில் உள்ள அரசியல் துணிவின்மை காரணமாக இச்சட்டமூலத்தின் முன்னேற்றம் இது வரை மந்தமாகவே உள்ளது. எனினும், 2020 இன் முற்பகுதியில், வீட்டுப் பணியாளர்களின் பாதுகாப்புக்கான இச்சட்ட மூலத்தை கவனத்தில் கொள்வதற்கு சட்டமன்றம் இறுதியில் ஆரம்பித்துள்ளது.

**ஸ்ரே மம் மற்றும் ADW, பொனம் பெஞ் கம்போடியா**

**சோதி யிம் (Sothy Yim) அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது**

**ஸ தலைவர், வீட்டுப் பணியாளர்கள் சங்கம் (ADW)**





புகைப்படங்கள்: **ADW**

**துஷ்பிரயோகம்**

ஸ்ரே மம் (அவரது உண்மைப் பெயரல்ல), 29 வயதுடையவர், ஓர் அநாதை, அவரது வளர்ப்புத் தாயாரால் வளர்க்கப்பட்டவர். 2006 இல், அவர் 16 வயதாக உள்ள போது, கம்போடியத் தலைநகரான பொனம் பெஞ்சிலுள்ள ஒரு குடும்பத்திற்காக, மாதம் 120 அமெரிக்க டொலர்கள் ஈட்டும், கூடவே வாழும் ஒரு வீட்டுப் பணியாளராராக, வேலை செய்வதற்கு ஆரம்பித்தார். அக்குடும்பத்திற்காக மூன்று வருடம் வேலை செய்த பின்னர், குடும்பத் தலைவர், ஸ்ரே அவரின் இளைய மகனைத் திருமணம் செய்ய யோசனை தெரிவித்தார். வறுமையால் உந்தப்பட்டு மற்றும் நோய் வாய்ப்பட்ட தனது தாயாரைப் பராமரிக்கும் பொறுப்பைக் கவனத்தில் கொண்டு, ஸ்ரே திருமணத்திற்கு சம்மதித்தார். திருமணத்தின் பின் ஸ்ரே திருமணம் மற்றும் விழா வைபவங்களுக்கான அலங்கரிப்பாளராக வேலை செய்ய ஆரம்பித்ததுடன், தனது மாமானாரிடமிருந்து இரகசியமாக கைச் செலவுக்கான பணம் பெற்று வந்தார். அவர் இரண்டு மகன்களுக்குத் தாயுமானார்.

2015 இல், ஸ்ரேயின் மாமானார் இறந்து போனார். அதன் பின் அவரது கணவர் பணம் கேட்டு ஸ்ரேயைத் தொந்தரவு தர ஆரும்பித்தார். அவர் முன்னர் ஒரு போதும் பணம் கொடுத்திருக்காததினால், ஸ்ரே பணம் கொடுப்பதற்கு மறுத்தார். அவரது மறுப்பு, அவரது கணவர் மற்றும் மாமியார், ஸ்ரேயை உடல்ரீதியாக துஷ்பிரயோகிக்க ஆரம்பிக்க வைத்தது. அவர்கள், ஸ்ரேயின் கூந்தலை பிடித்து, படிக்கட்டுகளில் கீழே தரதரவென இழுத்துச் சென்றனர்; அநேக சந்தர்ப்பங்களில் அவரது தலை காயங்களால் இரத்தம் தோய்ந்திருந்ததுடன் அவரது கால்கள் மற்றும் தோள்கள் முழுவதிலும் சிராய்ப்புகள் ஏற்பட்டன.

## துஷ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கை

இத்துஷ்பிரயோகம் பற்றி, ஸ்ரே தனது அயலவாரான, ஒரு பொலிஸ் உத்தியோகத்தரிடம் கூறினார். அவரது ஆலோசனைப்படி, ஸ்ரே உள்ளூர்ப் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தார். ஆனாலும், பெரும்பாலும், சமூகத்தில் உள்ள செல்வாக்கின் காரணமாக ஸ்ரேயின் மாமியாருக்கு எதிராக பொலிஸ் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. இருப்பினும், ஸ்ரேவை வழமையாக வேலைக்கு அழைத்துச் செல்லும் முச்சக்கர வண்டிச் சாரதி, அவருக்கு நடக்கும் வன்முறை பற்றி கேள்வியுற்று, அவரை கம்போடிய வீட்டுப் பணியாளர்கள் வலையமைப்பின் (CDWN) தலைவர் சோதி யிம் (Sothy Yim) அவர்களைச் சந்திப்பதற்கு கூட்டிச் சென்றார். இதன் பின் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன.







**DWO இன் மூலோபாயங்கள் மற்றும் நடைமுறை ரீதியான நடவடிக்கைகள்**

மனித உரிமைகளின் முன்னேற்றம் மற்றும் பாதுகாத்தலுக்கான கம்போடியக் கிளையான (LICAHDO) மனித உரிமைகள் ஸ்தாபனத்திடம் அவர்களது உதவியைக் கோரி, CDWN செயலாளர், சோமலி ஹய் (Somaly Hai), உடன் இணைந்து சோதி, அங்கு ஸ்ரேயைக் கொண்டு வந்தார். LICAHDO ஸ்ரேயின் சம்பவத்தை ஆவணப்படுத்தி, நீதிமன்றத்தில் ஒரு குற்றவியல் முறைப்பாட்டைப் பதிவதற்கு அவருக்கு உதவியளித்தது. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சமூக சபையைத் (CCWC) ஸ்ரே தொடர்பு கொள்வதற்கு சோதி உதவினார், இருந்த போதிலும் எவரும் அங்கிருந்து அழைப்புகளுக்குப் பதிலளிக்கவில்லை.

விரைவிலேயே, ஸ்ரேயின் கணவர் விவாகரத்திற்காக விண்ணப்பித்தார். நீதிமன்ற விசாரணைகளுக்கு ஸ்ரே பிரசன்னமாவது சிரமமானது என நிரூபணமானது: ஒரு தடவை ஸ்ரே நீதிமன்றத்தில் மயங்கி வீழ்ந்ததுடன், துஷ்பிரயோக சம்பவங்களை நினைவுபடுத்தி திரும்பவும் சொல்லும்படி கேட்கப்படும் போது அவர் அடிக்கடி உணர்வு மற்றும் மனோ ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டார். ஈற்றில், அவரது கணவரின் போதைப் பழக்கம் காரணமாக, அவரது இரண்டு மகன்களினதும் முழுமையான பாதுகாப்பை நீதிமன்றம் ஸ்ரேயிடம் அளித்தது.

2016 இல் CDWN ஐ விட்டு விலகி கம்போடியாவில், வீட்டுப் பணியாளர்களுக்கான சங்கத்தை (ADW) ஏற்படுத்தும் வரை சோதியும், சோமலியும் தங்களது சொந்தப் பணத்திலிருந்து ஸ்ரேயிற்கு நிதி ரீதியாக ஆதரவளித்தனர். ADW, ஸ்ரேயின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு ஒரு வீட்டுப் பணியாளராக அவரிற்கு ஒரு வேலையை தேடிக் கொடுத்தன. இருந்தபோதிலும், ஸ்ரே அவரது உள ஆரோக்கியப் பிரச்சினை காரணமாக வீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான இயலுமையை இறுதியில் இழந்தார். ஈற்றில் அவர் தனது தாயாருடன் வாழ்ந்ததுடன், குப்பை பொறுக்கும் ஒருவராக வேலை செய்து, உணவு வாங்குவதற்கு மாத்திரம் போதுமான பணத்தை சம்பாதித்தார்.

விவாகரத்து அடைந்து நான்கு வருடங்களின் பின்னரும், ஸ்ரே துஷ்பிரயோகத்தினால் இன்னமும் மனம் பாதிக்கப்பட்டவராகவும், மருத்துவ சிகிச்சையில் அதிகம் தங்கியிருப்பவராகவும் உள்ளார். வறுமை மற்றும் அவரது மருத்துவச் சிகிச்சைக்கான செலவு (மாதாந்த வைத்திய ஆலோசனை மற்றும் மருந்துகளுக்கான மேலதிக கொடுப்பனவுகளுக்கென US$3) என்பவற்றால் நிர்ப்பந்திக்கப்பட்ட அவர், ஈற்றில் அவரது மகன்களின் பாதுகாத்தல் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவரது தாயார் 2019 இன் முற்பகுதியில் காலமானதுடன், அன்றிலிருந்து தனியாக வாழ்வதை சிரமமாக அவர் கண்டார். தற்போது அவர் ஓர் உணவகத்தில், ஓய்வு நாட்களின்றி மாதாந்தம் US$120 ஊதியத்தில் வேலையொன்றைச் செய்கிறார். மாதாந்த சம்பளத்தில் 50 சதவீதம் அவர் தங்கியுள்ள இடத்திற்கான வாடகையாக பாவிக்கப்படுகிறது.

**சவால்கள்**

கம்போடியாவில், வீட்டு வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் பாதிப்படைந்தவர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டம் 2005 இல் ஏற்று அங்கீகரிக்கப்பட்டது, ஆனாலும் நடைமுறைப்படுத்தும் ஒழுங்குவிதிகள் சட்டமாக்கப்பவில்லை மற்றும் முறைப்பாடுகள் செயன்முறைக்காக குறிப்பிட்ட காலக்கட்டமைப்பு முறை இல்லாமையால் சமூகத் தலைவர்கள் அல்லது பொலிசாரினால் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட முடியாதுள்ளது. இதனால், வன்முறையில் பாதிக்கப்பட்டவர்கள் பொலிசிற்குச் செல்லும் போது, ஒரு குற்றவியல் முறைப்பாட்டை மேற்கொள்வதற்கு அவர்கள் அறிவுறுத்தப்படுவதுடன் தண்டனைச் சட்டக்கோவையின் கீழான நடைமுறைகளே உபயோகிக்கப்படுகின்றன. தண்டனைக் கோவை உடல் ரீதியான தாக்குதலை தடைசெய்வதால் வீட்டு வன்முறையில் பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெற்றுக் கொள்வது கடினமாக உள்ளது. ஸ்ரே மம் 2015 இல் குற்றவியல் முறைப்பாடொன்றை மேற்கொண்டார், ஆனால் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்கு அவர் ஒரு போதும் ஆணைப்படுத்தப்படவிலை என்பதுடன் அவரது வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளது. அவரது கோவை ஒரு நீதிபதியிடமிருந்து மற்றோரு நீதிபதிக்கென பல தடவைகள் மாற்றப்பட்டதுடன் அவரது கோவை காணாமல் போய்விட்டதென் 2019 இல் அவரிற்காக முன்னிலையாகும் சட்டத்தரணியிடம் சொல்லப்பட்டது. ஸ்ரே மம் வீட்டுப் பணியாளராக அவர்களுடன் தொழில் வாய்ப்பு பெற்றதின் பின்பே திருமணம் செய்ததாக அவர்களது குடும்பத்தால் பொலிஸ் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கப்பட்டதாக சந்தேகங்கள் அங்கே உள்ளது.

**ரிசா ஆர்.அமஹன் மற்றும் UNITED, மணிலா, பிலிப்பைன்ஸ்**
**ஹிமயா மொன்டிநீக்ரோ (Himaya Montenegro) அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது**

***பிலிப்பைன்ஸின் ஐக்கிய வீட்டுப் பணியாளர்கள் (UNITED)***




பிலிப்பைன்ஸ்: வீட்டுப் பணியாளர்களுக்கான சுற்றுலா வகை நிகழ்ச்சித்திட்டம், UNITED [படம்: Del Bañares Via D. Montenegro]

## துஷ்பிரயோகம்

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான, மணிலாவிலுள்ள ஒரு வேலைவாய்ப்பு முகவரால், ஒரு வீட்டுப் பணியாளராக வேலை செய்வதற்காக, 2018 இன் முற்பகுதியில், கோட்டாபாட்டோ மாகாணத்திலுள்ள, கிட்டபவான் நகரத்திருந்து, ரிசா அமஹன் ஆட்சேர்க்கப்பட்ட போது, அவர் 23 வயதுடையராக இருந்தார். அவர் நோய் வாய்ப்பட்டு மருந்துகள் உட்கொள்பவராகவும் இருந்ததினால், ஒரு மாதத்தின் பின், அவரது தொழில்தருனர் அவரைத் திரும்பவும் வேலைவாய்ப்பு முகவரிடம் அனுப்பி வைத்ததுடன், ஒரு மாற்றுப் பணியாளரிற்கும் வேண்டுகோள் விடுத்தார். அவரது தொழில் தருனர் ரிசாவிற்கு குறைந்தபட்ச ஊதியத்தை விட உயர்வான ஒரு சம்பளத்தை வழங்கியதாலும் அவருக்கு கண்ணியமான தங்குமிடம் மற்றும் போதுமான உணவு வழங்கியதாலும், அவருக்கெதிராக ரிசா, முறைப்பாடெதனையும் மேற்கொள்ளவில்லை.

அவரது வேலையை இழந்த பின், ரிசா ஆர். அமஹன் வேலைவாய்ப்பு முகவரமைப்பினால் ஒரு வாரத்திற்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். வேலைவாய்ப்பு முகவரமைப்பின் ஆண் உரிமையாளரான, டானியல், இழிவான வார்த்தைகளால் ரிசாவை அடிக்கடி அவமதித்ததுடன், ரிசாவை சோம்பேறி, சரசம் புரிபவர் மற்றும் பாலியலை விற்பவரெனவும் குற்றம் சாட்டினார். ரிசாவிற்கு படுக்கை எதுவும் வழங்கப்படவில்லை என்பதுடன் அவர் கான்கிரீட் தரையில், ஒரு தலையணையோ அல்லது போர்வையோ இன்றி தூங்க வேண்டியதாக இருந்தது. முகவரமைப்பு அவரிடம் அறவிட்ட மின்சாரக் கட்டணத்தை அவரால் செலுத்த முடியவில்லையாதலால் அவர் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் அனைத்து விதமான தொடர்பு கொள்வதிலிருந்தும் துண்டிக்கப்பட்டார். இதில் இன்னமும் மோசமானது, அவரிற்கு உணவோ அல்லது தண்ணீரோ கொடுக்கப்படவில்லை என்பதுடன் அவர் அநேகமான வேளைகளில் பட்டினியோடு, உணவின்றி இருந்தார்.

## DWO மூலோபாயங்கள் மற்றும் நடைமுறை ரீதியான நடவடிக்கைகள்

ரிசா தனது உறவினரான, மாரிசெல் ஹேர்மோசாவிடம், வேலைவாய்ப்பு முகவரமைப்பில் அவர் மனிதாபிமானமற்ற வகையில் நடத்தப்படும் முறை பற்றியும் தாமதமின்றி தப்பிச் செல்வதற்கான அவரது விருப்பம் பற்றியும் தெரிவித்தார். அவரும், பிலிப்பைன்ஸிலுள்ள வீட்டுப் பணியாளர்களின் ஒன்றிணைந்த சம்மேளனத்தின் உறுப்பினரான மாரிசெல்லும், தப்பிச் செல்லும் ஒரு திட்டத்தை உருவாக்கினர்.

அது தொழில் மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம் (DOLE) மற்றும் தேசிய புலனாய்வுப் பணியகம் என்பவற்றின் ஒருங்கிணை வுடன் ஏற்பாடு செய்யப்பட்டது. அரசாங்க முகவர்களால் முதலில் அணுகப்பட்ட போது, வேலைவாய்ப்பு முகவரமைப்பின் உரிமை யாளர்கள் ரிசாவின் முறைப்பாடுகளை நிராகரித் ததுடன் ரிசா விடுவிக்கப்படுவதற்கு முன் ஆட் சேர்ப்பு முகவரமைப்பின் ஒரு கட்டணமாக அவர் 6,000 PHP (US$114 இற்கு கிட்டியது) கொடுப்பனவு செய்ய வேண்டுமெனக் கோரியது. எனினும், நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர், டானியல் மற்றும் அவரது மனைவி இறுதியில் ரிசா UNITED உடன் செல்வதற்கு இணங்கினர். DOLE அதிகாரிகள் ரிசா ஒரு முறைப்பாட்டினை மேற்கொள்ள உதவுமாறு UNITED ஐ ஊக்கப் படுத்தினர், ஆனாலும், உரிமையாளர் டானியல், பாரன்கே (மாவட்டம்) இன் ஓய்வுபெற்ற ஒரு அரசாங்க ஊழியர் என்பதைக் காரணம் காட்டி, ரிசா அவ்வாறு முறைப்பாடு செய்வதற்கு மறுத்துவிட்டார். அவர் அதிர்ச்சியுற்றிருந்தார், ஒரு முறைப்பாட்டை மேற்கொள்வதற்கு மறுத்ததுடன், இதிலிருந்து மீண்டு தனது சொந்த ஊருக்கு திரும்புவதற்கு மட்டுமே விரும்பினார்.



## முன்னேற்றம் மற்றும் சவால்கள்

2012 இல், வீட்டுப் பணியாளர்களுக்கு கண்ணியமான வேலை தொடர்பான சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் உடன்படிக்கை 189 ஐ ஏற்று அங்கீகரித்து கைச்சாத்திடும் ஆசியாவின் முதல் நாடாக பிலிப்பைன்ஸ் வந்தது. ஒரு வருடத்தின் பின்னர், 2013 இல், பிலிப்பைன்ஸ் வீட்டுப் பணியாளர்கள் சட்டத்தை (Batas Kasambahay அல்லது வீட்டுப் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனோம்புகைக்கான கொள்கைகளை முன்னெடுத்தல் சட்டம்) அங்கீகரித்தது. ஜனாதிபதி பெனிக்னோ S அக்கியுனோ III சட்டமூலத்தில் கைச்சாத்திட்டு 2013 இன் முற்பகுதியில் அதனைச் சட்டமாக்கியதுடன், 2013 இன் நடுப்பகுதியில் அதன் நடைமுறைப்படுத்தல் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் (IRR) பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அது பயனுரு பெற்றது. அதிலிருந்து, வீட்டு அல்லது குடித்தனப் பணிகளை பிலிப்பைன்ஸில் ஒரு முறைசார் தொழில்துறையாக சட்டம் அங்கீகரிக்கின்றது. சட்டம், நாட்டிலுள்ள வீட்டுப் பணியாளர்களுக்கு தொழில் மற்றும் சமூகப் பாதுகாப்பை விஸ்தரிக்கின்றதுடன் தொழில்தருனர் குடித்தனத்தில் துஷ்பிரயோகங்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கின்றது.

வீட்டுப் பணியாளர்கள் சட்டத்துடன் இணங்கும் வகையில், வீட்டுப் பணியாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை வேலைவாய்ப்பு முகவரமைப்புகள் உறுதி செய்தல் வேண்டும். UNITED இன் கண்ணோட்டத்தில், பாதிக்கப்பட்டவர் ஒரு உத்தியோகபூர்வ முறைப்பாட்டினை பதிவு செய்வதற்கு முடியாது போனாலும் கூட, DOLE மேலும் புலன்விசாரித்திருக்க வேண்டும். எனினும், ரிசா ஒரு உத்தியோகபூர்வ முறைப்பாட்டினை மேற்கொள்ளாத காரணத்தினால், UNITED ரிசாவின் சம்பவத்தை விழிப்புணர்வு ஏற்படுத்தும் பிரச்சாரங்கள் மற்றும் நடவடிக்கைகளில் உபயோகித்ததைத் தவிர, குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுப்பதற்கு அதனால் முடியவில்லை.

பாரன்கே (மாவட்ட) மட்டங்களில், DOLE, சமூக நலனோம்புகை மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் (DSWD), மற்றும் பொலிஸ் ஆகியவை துஷ்பிரயோகத்திற்குள்ளான வீட்டுப் பணியாளர்களின் மீட்பு மற்றும் புனர்வாழ்வு என்பவற்றுக்கு பொறுப்பானவை. எனினும், நடைமுறையில் அநேகமான தொழில் தருனர்கள் மற்றும் தனியார் வேலைவாய்ப்பு முகவரமைப்புகள் மாவட்டங்களில் பாரன்கே உத்தியோகத்தர்களுடன் நெருக்கமாகத் தொடர்புபட்டுள்ளதினால், சட்டத்தை அமுல்படுத்துவதும் மற்றும் துஷ்பிரயோகங்களிலிருந்து வீட்டுப் பணியாளர்களைப் பாதுகாப்பதும் மிகவும் சவாலானது.

வீட்டுப் பணி தொடர்பாக ஆசியாவில் ஒரு குறித்த தேசிய சட்டத்தை அங்கீகரித்த ஒரேயொரு நாடாக பிலிப்பைன்ஸ் உள்ளது. எனினும், UNITED இன் அனுபவத்தில், பிலிப்பைன்ஸிலுள்ள வீட்டுப் பணியாளர்கள், சட்டம் இருந்த போதிலும் இன்னமும் இடர்வாய்ப்புக் கொண்டவர்களாக உள்ளனர். இதற்கான பிரதான காரணங்கள்:

- வீட்டுப் பணியாளர்களின் வேலைத் தலங்கள் தனியார் வீடுகளாக உள்ளன, மற்றும் வேலைத் தலத்தில் உண்மையான நிலைமைகளைக் கண்காணிப்பதற்கான பொறிமுறைகள் பலவீனமானவையாக உள்ளன.

- பாரன்கே (மாவட்ட) மட்டங்களிலுள்ள தொழில் மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களங்கள் சிறந்த முறையில் நிதியளிக்கப்படவில்லை, அதனால் அவை சட்டத்திற்கமைய தங்களது கடமைகளை மேற்கொள்வதற்கு ஆட்கள் மற்றும் நிதி இல்லாதிருந்தன.

- பாதிக்கப்பட்ட பலரும் குறைந்த சுய மதிப்பு மற்றும் சமுதாயத்தில் ஒரு குறைந்த சமூக அந்தஸ்துகளுடான குழுக்களிலிருந்து வந்தவர்களாக இருந்தனர். தொழிற் சங்கங்கள், சங்கங்கள், மற்றும் அரசாங்கத்தின் உதவியின்றி, அவர்களுக்காக நீதியை நாடுவது சிரமமாகும்.

## சுனித்தா எக்கா மற்றும் NDWM, பாட்னா, இந்தியா

***லீமா ரோஸ் ஜோர்ஜ் அவர்களால் (Leema Rose George) சமூகப் பணியாளர், தேசிய வீட்டுப் பணியாளர்கள் இயக்கம் (NDWM) எடுத்துரைக்கப்பட்டது***







சுனித்தா மனவுளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார், ஆனாலும் அவர் மனமுடையவில்லை. சமுதாயத்தில் மாற்றத்திற்கு ஓர் தூண்டுதலாக இருந்தமைக்கான விருது CIMAGE ஆல் மார்ச் 8, 2016 அன்று வழங்கப்பட்டது.

### துஷ்பிரயோகம்

சுனித்தா எக்கா (அவரது உண்மைப் பெயரல்ல) இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் உரான் இனத்தைச் சேர்ந்தவர். அவர் 16 வயதாக இருக்கும் பொழுது, 2014, மார்ச்சில், ஓர் அயலவரால் அவரது சொந்தக் கிராமத்திலிருந்து இந்தியாவின் பீகார் மாநிலத் தலைநகரான பாட்னாவிற்கு, ஒரு குடும்பத்தில் வீட்டுப் பணியாளராக வேலை செய்வதற்கு கூட்டி வரப்பட்டார். அவரது வேலைக்காக ஒரு போதும் கொடுப்பனவு எதனையும் பெறவில்லை. அவரது பெண் தொழில் தருனர் வேலைக்காக வெளியே சென்றவுடன், ஆண் தொழில் தருனர் சுனித்தாவை பாலியில் ரீதியாகத் தொல்லைப்படுத்துவார். நான்கு மாதங்களின் பின்னர், ஒரு சமயம் அவரது ஆண் தொழில் தருனர் சுனித்தாவை மூன்று நாட்களுக்கு மீண்டும், மீண்டும் வல்லுறவுக்கு உட்படுத்தினார். அவர் எதிர்த்து போராடிய போது, கொன்று விடுவதாக அச்சுறுத்தப்பட்டார். இதனை அவர் அத்தொழில் தருனரின் மனைவியிடம் கூறினார், ஆனாலும் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவருமே சேர்ந்து பின்னர் சுனித்தாவை நன்கு நையப்புடைத்தனர்.

### DWO மூலோபாயங்கள் மற்றும் நடைமுறை ரீதியான நடவடிக்கைகள்

ஒரு நாள் அவர் தனது தொழில் தருனரின் பிள்ளையை பாடசாலையிலிருந்து கூட்டி வருவதற்காகச் சென்ற வேளை, வீட்டுப் பணியாளர் தலைவரான, லீனா, என்பவர் சுனித்தாவுடன் எதேச்சையாகக் கதைப்பதற்கு ஆரம்பித்தார். அப்போது சுனித்தா அழ ஆரம்பித்ததுடன் லீனாவிடம் தனக்கு நடக்கும் விடயங்கள் பற்றிக் கூறினார். வேலையை விட்டு விலகுவதற்கு லீனா, சுனித்தாவை நம்பிக்கை கொள்ள வைத்தார். தேசிய வீட்டுப் பணியாளர்கள் இயக்க (NDWM) ஊழியர்கள் சுனித்தாவை தங்களது அலுவலகத்திற்கும் அதனொரு காப்பகத்திற்கும் கூட்டி வந்தனர். அடுத்த நாள், தொழில் தருனரான தம்பதிகள் மற்றும் சுனித்தாவை அக்குடும்பத்தில் வேலை செய்வதற்காக பாட்னாவிற்கு கூட்டிவந்த அயலவர் ஆகியோர்களுக்கு எதிராக பொலிஸில் ஒரு முறைப்பாட்டைச் செய்வதற்கு NDWM உதவியது. சுனித்தா இரண்டு நாட்கள் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு ஒரு மருத்துவப் பரிசோதனைக்கு உடபடுத்தப்பட்டார். எனினும், மருத்துவ அறிக்கை சுனித்தாவிற்கு எதுவும் நிகழவில்லை என்று காண்பித்தது. அது அநேகம் பொலிஸ் மற்றும் வைத்தியர்களுக்கு இலஞ்சம் அளிக்கப்பட்டதினாலாக இருக்கலாம். NDWM சுயாதீனமான மற்றொரு மருத்துவப் பரிசோதனைக்கு கோரியதுடன், இம்முறை அம்மருத்துவ அறிக்கை, சுனித்தா வல்லுறுவுக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தியது. எனினும், உள்ளூர் பொலிஸிற்கு இலஞ்சம் வழங்கப் பட்டிருந்ததினால், இம்முறையும் எவரும் கைது செய்யப்படவில்லை.

NDWM, சுனித்தா உயர் மட்டத்திலான அதிகாரிகளை அணுகுவதற்கு உதவியதுடன் பாலியல் ரீதியான தாக்குதல் மற்றும் வல்லுறவு என்பவற்றுக்கு தண்டனையைக் குறித்துரைக்கும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பாலியல் குற்றங்கள் தொடர்பான உறுப்புரை 376 ஐ உபயோகித்து பீகார் மாநில அரச சட்ட அதிகாரத்திடம் அவரது வழக்கை எடுத்துச் சென்றது. ஈற்றில், பீகாரின் 2014 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டவர் நட்ட ஈட்டுத் திட்டத்தின் கீழ் பீகார் அரசாங்கத்திடமிருந்து நட்ட ஈடாக, இந்திய ரூபாய்கள் 1 இலட்சம் (சுமார் US$1,392 இற்கு சமனானது) சுனித்தாவிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், இன்று வரை, சுனித்தாவிற்கு இழைக்கப்பட்ட குற்றத்திற்காக எவரும் கைது செய்யப்படவில்லை.

நீதிக்கான போராட்டத்தைத் தொடர்வதில் சுனித்தா மிகவும் தைரியமாக இருந்தார். துஷ்பிரயோகத்தினால் அவர் மன உளைச்சல்களுக்கு ஆளானாலும் அதனால் அவர் உடைந்து போய் விடவில்லை. NDWM இன் உதவியோடு, ஒரு வீட்டுப் பணியாளராக இன்னுமொரு வேலையை அவர் பெற்றுக் கொண்டதுடன் தனது 12ஆம் தரத்திற்கான கல்வியையும் பூர்த்தி செய்தார். அவர் தனது வாழ்க்கையில் முன்னோக்கி நகர்ந்ததுடன், தற்போது ஓர் உறுதியான வீட்டுப் பணியாளர் தலைவராக உள்ளார். பல வருட போராட்டங்களின் பின்னர், மார்ச் 2019 இல், இறுதியாக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திடமிருந்து அழைப்பொன்றைப் பெற்றார். அதில், அவரது வழக்கு பாலியல் குற்றங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் (POCSO, 2102 இல் அங்கீகரிக்கப்பட்டு 2019 இல் திருத்தப்பட்டது) கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், தனது தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களுடன், அவர் அந்த வழக்கை மேலும் தொடராதிருப்பதற்குத் தீர்மானித்தார். சுனித்தா போன்ற தைரியமான ஓர் இளம் பெண்ணுக்கும் கூட, தாமதப்படும் நீதி மறுக்கப்படும் நீதியாகவே அநேகம் உள்ளது.

## சவால்கள் மற்றும் முன்னோக்கிச் செல்வதற்கான வழி

நீதிமன்றத்தில் பொலிஸினால் புலன்விசாரணைகளின் நீண்ட செய்முறைகளோடு, அதனை விட மோசமான அத்துமீறும் வகையில், அதிகாரிகளால் ‘இரு விரல் சோதனையை’ (மேலுமொரு மீறலாக, பௌதிக ரீதியாக அவரது பெண்ணுறுப்பைப் பரிசோதித்தல்) பொறுத்துக் கொள்ள வேண்டியதாக இருந்தது. சுனித்தா NDWM காப்பகத்தில் குணமடைந்து வரும் வேளையில் அவர் அவரது ஆண் தொழில் தருனரால் தொல்லைப்படுத்தப்பட்டதுடன் அச்சமயங்களில் அரசாங்கம் எந்தவொரு உதவியோ அல்லது சேவைகளையோ அளிக்கவில்லை. எனினும், சுனித்தா சற்று அதிர்ஷ்டசாலியாக இருந்ததினால் NDWM காப்பகத்தில் தங்கி குணமடைவதற்கு அவரால் முடியுமாக இருந்தது. ஏனெனில், அரசாங்கத்தின் இளையோர் இல்லங்கள், மோசமான பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் வல்லுறவுச் சம்பவங்களால், துஷ்பிரயோகங்களிற்கு ஆளானவர்கள் வந்தடையும் இடமாக சில சமயங்களில் இருந்தது.[1] இதன் காரணமாகவே, துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான வீட்டுப் பணியாளர்களுக்காக தனியாக தங்களது சொந்த காப்பகத்தை NDWM ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்தது.

இனக் குழுக்கள், குறைந்த சாதி மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குழுக்களிலிருந்தான பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோகம், வல்லுறவு மற்றும் கொலை செய்யப்படல் என்பவற்றுக்கு இலகுவில் பலிக்கடா ஆகுகின்றனரென, இந்தியாவிலுள்ள NDWM, சுயதொழில் செய்யும் பெண்களின் சங்கம் (SEWA) மற்றும் ஏனைய பெண்களின், தொழிலாளர்களின் மற்றும் சிறுவர் உரிமைகள் ஸ்தாபனங்கள் பல கண்டறிந்தன. சிலசமயங்களில் இந்தக் கொடூரங்கள் அவை நிகழும் போது பதிவு செய்யப்பட்டு இணையத்தளம் அல்லது காணொலிப் பட்டிகளில் பரவுவதற்கும் விடப்படுகின்றன. உடல்ரீதியான தாக்குதல் மற்றும் வல்லுறவு என்பன இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் சட்ட விரோதமானவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளன, ஆனாலும், நடைமுறையில், பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸில் வழக்கொன்றைப் பதிவு செய்து கொள்வது கடினமானது. ஸ்தாபனமொன்றின் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்கள் வழக்கொன்றைப் பதிவு செய்யும் போது, பொலிஸ் மற்றும்/அல்லது குற்றமிழைத்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் அநேகம் பாதிக்கப்பட்டவர்களை வழக்கை மீளப்பெற்றுக் கொள்வதற்கு அச்சுறுத்துகின்றனர் அல்லது பணம் கொடுக்கின்றனர்.

அதனால், NDWM மற்றும் இந்தியாவிலுள்ள ஏனைய சிறுவர்கள், பெண்கள் மற்றும் மனித உரிமைகள் ஸ்தாபனங்கள் பின்வருபவற்றைப் பரிந்துரைக்கின்றன:

- வல்லுறவு தொடர்பான வழக்குகளை புலன்விசாரணை செய்வதற்கும் மற்றும் வழக்குத் தொடர்வதற்கும் தனியான ஒரு நீதிமன்றம் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

- வல்லுறவு அல்லது பாலியல் ரீதியான தாக்குதல் சம்பவங்களைக் கையாள்வதற்கு ஒரு விசேட பிரிவு அல்லது அலகு ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

- வல்லுறவுகள் அல்லது பாலியல் ரீதியான தாக்குதல் தொடர்பான சம்வங்களில் பாதிக்கப்பட்ட பெண்களின் விடயங்களைக் கவனிப்பதற்கு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

- வல்லுறவு, பாலியல் ரீதியான தாக்குதல் மற்றும் ஏனைய வடிவிலான வன்முறை மற்றும் தொல்லைப்படுத்துதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக பெண்கள் காப்பகங்கள் மற்றும் உளவளச் சேவைகள் என்பன வழங்கப்படுதல் வேண்டும்.

[1] உதாரணத்திற்கு, பார்க்கவும், https://www.aljazeera.com/indepth/features/tragedy-year-girls-raped-shelter-180731081743838.html and https://www.bbc.com/news/world-asia-india-45124802 (accessed 5 January 2020).

## சபீனா குட்டன் மற்றும் GKS, குர்கான், இந்தியா

***எலிசபெத் குஹுமல்லம்பம் (Elizabeth Khumallambam,) அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது***
***Gharelu Kaamgar Sangathan (GKS), குர்கான்***



### துஷ்பிரயோகம்

இந்தியாவின் ஹரியான மாநிலத்தில், குர்கானில் பேரி குடும்பத்தினரின் வதிவிடத்தில் 2014, ஜனவரி 29ஆம் திகதியன்று, சபீனா குட்டானின் உடல், தூக்கில் தொங்கியவாறு கண்டுபிடிக்கப்பட்டது. சபீனா ஒரு வீட்டுப் பணிப்பெண். அவருக்கு வயது 14 மட்டுமே. அவரது பெற்றோர்கள் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்கள். பேரி குடும்பம் வசித்த இடத்திலிருந்து அதிக தொலைவில் இல்லாத, நாத்பூர் கிராமத்திற்கு அவரது முழுக் குடும்பமும் இடம்பெயர்வதற்கு முன் அவரது தந்தை சில காலங்களுக்கு ராஜஸ்தானில் வேலை செய்தார். சபீனா, அவரது குடும்பத்தில் கடைசிப் பிள்ளை, அவருக்கு ஒரு சகோதரனும், சகோதரியும் இருந்தனர். சபீனாவின் தந்தையும், சகோதரனும் கட்டுமானத் தளங்களில் வேலை செய்தனர்.

### DWO மூலோபாயங்கள் மற்றும் நடைமுறை ரீதியான நடவடிக்கைகள்

சபீனா இறந்து போனதாக கண்டு பிடிக்கப்பட்ட நாளன்று, அவரது குடும்பம் உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்வதற்கு முயற்சித்தது. எனினும், பொலிஸ் முறைப்பாட்டை ஏற்காமல் அவர்களை திருப்பி அனுப்பியது. குடும்பம் மிகவும் விரக்தியடைந்ததுடன் வேறு எங்கு செல்வது எனத் தெரியாது தவித்தனர். வீட்டுப் பணியாளரும் மற்றும் GKS (GKS, இந்தியத் தலைநகரான புது டெல்லிக்கு அண்மையிலுள்ள, குர்கானிலுள்ள ஒரு வீட்டுப்பணியாளர்கள் சங்கம்) உறுப்பினருமான ஒருவர் அருகாமையிலுள்ள பகுதிகளில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வரும் வேளையில், இக்குடும்பத்தின் நிலை பற்றி அறிந்து கொண்டார். ஏறத்தாழ அதே சமயம் சபீனாவின் உறவினரொருவரும் GKS ஐ தொடர்பு கொண்டார். அடுத்த நாள், GKS சபீனாவின் குடும்பத்தை சென்று சந்தித்தது. கலந்தாலோசனையின் பின்னர், GKS இன் சட்ட அணி மற்றும் சபீனாவின் இரு குடும்ப உறுப்பினர்களும் இணைந்து சம்பவத்தைப் பதிவு செய்வதற்கு பொலிஸ் தலைமை அலுவலகத்திற்கு சென்றனர். அதன் பின்னரே, சபீனாவின் உடலம் ஓர பிரேத பரிசோதனைக்காக ஒரு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.




பிரேத பரிசோதனை அறிக்கையை வெளியிடுவதற்கு பொலிஸ் ஆரம்பத்தில் மறுத்தது. உடனே, GKS வீட்டுப் பணியாளர்களை வைத்தியசாலையின் முன்பாக ஒன்றுதிரட்டியதுடன் அறிக்கையை வெளியிடக் கோரி கூட்டம் ஒன்றுதிரண்டது. வைத்தியசாலை பிரேத பரிசோதனை அறிக்கையை வெளியிடாவிட்டால், அவர்கள் சபீனாவின் உடலத்தை எடுத்துச் செல்ல அனுமதிக்கமாட்டோம் என GKS உறுப்பினர்கள் தெரிவித்தனர். வைத்தியசாலை நிர்வாகம், ஊழியர் கோரிக்கைக்குப் பணிந்து அறிக்கையை சபீனாவின் குடும்பத்தினரிடம் கையளித்தது. இந்த முதலாவது அறிக்கை, சபீனா மூச்சுத்திணறல் ஏற்பட்டு அதன் காரணமாக இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தது, அதில் துஷ்பிரயோகம் பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. GKS மற்றும் சபீனாவின் குடும்பம் இந்த அறிக்கையை நம்பவில்லை. சபீனாவின் குடும்பத்தின் கூற்றுப்படி, அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட போது அவரது கால்கள் தரையைத் தொட்டபடி இருந்ததுடன், அவரது உடல், முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் காயங்கள் காணப்பட்டதுடன், அவர் உடல்ரீதியாக தாக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டின. வைத்தியசாலையில் எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாக, GKS இன் இரண்டு செயற்பாட்டாளர்கள் குழப்பம் ஏற்படுத்தினர் என்ற பொய்யான குற்றச்சாட்டில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டனர். பின்னர், அவர்கள் நள்ளிரவில் விடுவிக்கப்பட்டனர்.

இதன் பின், GKS மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு முறைப்பாட்டினைப் பதிவு செய்து ஹரியானாவிலுள்ள மற்றொரு வைத்தியசாலையான PGI ரொஹடக் இல் மற்றுமொரு பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்கு கோரியது. மாவட்ட நீதிமன்றம் கோரிக்கைக்கு இணங்கி, உடனடியாக மற்றுமொரு பிரேத பரிசோதனையை மேற்கொள்வதற்கு பொலிஸாரிற்கு கட்டளையிட்டது. இதே சமயம், மரணம் தொடர்பான விசாரணைகளை சபீனாவின் குடும்பம் நிறுத்துமாயின், அவர்களுக்கு இந்திய ரூபாய்கள் 300,000 ஐ (சுமார் US$ 4,178) வழங்குவதற்கு பேரி குடும்பம் முன்வந்தது. இரண்டாவது பிரேத பரிசோதனை அறிக்கை, வேறுபட்டதாக இருந்ததுடன் சபீனா பாலியல் ரீதியாக வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்ற சபீனா குடும்பத்தின் சந்தேகத்தை உறுதி செய்ததினால், பேரி குடும்பம் அளிக்க முன்வந்த பணத் தொகையை சபீனாவின் குடும்பம் ஏற்க மறுத்து முழுமையான நீதியைக் கோரியது. பேரி குடும்பத்தை விசாரணை செய்வதற்கு GKS பொலிசைக் கோரியது. பேரி குடும்பத்தின் - தந்தை, இரண்டு மகன்கள் மற்றும் வாகனச் சாரதி ஆகியோரின் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு DNA பரிசேதனைக்காக அனுப்பப்பட்டன.

2014 பெப்ரெவரியிலிருந்து, முழுமையான மற்றும் துரிதமான ஒரு புலன்விசாரணையைக் கோரி பல்வேறுபட்ட அரசாங்க அலுவலகங்களுக்கு GKS சென்றது. சிறுவர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையகம் (NCPCR), பெண்களுக்கான தேசிய ஆணையகம் (NCW), பொலிஸ் கமிஷனர், புது டெல்லியிலுள்ள சிறுபான்மையினர் ஆணையகத் தலைவர், வெவ்வேறு மட்டங்களிலான பொலிஸ் அதிகாரிகள், அதே போன்று சட்ட மன்ற உறுப்பினர்கள், குர்கான் மாநகர கூட்டுத்தாபன உறுப்பினர்கள் ஆகியோர்களை அவர்கள் அணுகினர். இறுதியில், 2014, நவெம்பர் 11 இல், வீட்டுப் பணியாளர்களுக்கான தேசிய மன்றத்தினால் ஒரு மக்கள் விசாரணை ஏற்பாடு செய்யப்பட்டு, சபீனாவின் வழக்கு அங்கு விசாரிக்கப்பட்டது. மக்கள் விசாரணயின் ஒரு ஜூரி உறுப்பினரான, பெண்களுக்கான தேசிய ஆணையகத்தின் தலைவி, ஸ்ரீமதி லலிதா குமாரமங்கலம், குறிப்பிட்ட வழக்கைத் தான் தீவிரமாகக் கவனத்தில் எடுத்து அவசியமன நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறினார்.

எனினும், இன்னமும் தடயவியல் அறிக்கை சபீனாவின் குடும்பத்திற்கு வெளியிடப்படவில்லை. எனவே, அறிக்கையை வெளியிடுவதற்கு வேண்டி, GKS அரசாங்கத்தின் வெவ்வேறுபட்ட பிரிவுகளை அணுகியது. பெப்ரெவரி 2015 இல், GKS இன் உதவியுடன், சபீனாவின் சகோதரன் ஒரு RTI படிவத்தை (தகவல்களுக்கான உரிமை வேண்டுகோள்), பொலிஸ் புலன்விசாரணை மற்றும் DNA பரிசோதனை அறிக்கை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஹரியானா, பொலிஸ் பணிப்பாளர் நாயகத்திடம் தாக்கல் செய்தார். அடுத்த வருடம், ஜனவரி 2016 இல், இரண்டாவது பிரேத பரிசோதனையின் தடயவியல் ஆய்வுகூட பகுப்பாய்வு அறிக்கையின் வெளியிடுவதிலான தாமதத்தை கேள்விக்குட்படுத்தி, மத்திய புலனாய்வுப் பணியகத்தினால் விசாரணைக்கு சண்டிகார் உயர் நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த முயற்சிகள் அனைத்தின் பின்னர், டசம்பர் 2016 இல், சபீனாவின் குடும்பமும் GKS உம் இறுதியில் FSL ஐ (முதல் தகவல் அறிக்கை) பெற்றனர். அவ்வறிக்கை, பேரி குடும்பத்தின் மகன்களில் ஒருவரான அபூர்வா பேரி மற்றும் அவர்களின் வாகனச் சாரதி ஓம் பிரகாஷ் ஆகியோரின் விந்து மாதிரிகள், சபீனாவின் உடலத்தின் எடுத்த பெண்ணுறுப்பிலிருந்து ஒத்தியெடுத்த சோதனை (swab) மாதிரிகளுடன் பொருந்துவதை தெளிவாகக் குறிப்பிட்டது. இச்சோதனை, குற்றஞ் சாட்டப்பட்ட இவ்விருவரும் சபீனாவை பாலியல் ரீதியாக தாக்கியுள்ளரென நிரூபித்தது. சபீனா பராயமடையாத ஒருவரென்பதால், குற்றச்சாட்டு 2012 ஆம் ஆண்டின் பாலியல் குற்றங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல் சட்டம் (POCSO) இன் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

2017, ஜனவரியில், அபூர்வா பேரி மற்றும் ஓம் பிரகாஷ் ஆகியோரின் கைதுகளுக்காக பொலிஸ் பிடி விறாந்துகளைப் பிறப்பித்த போது, அவர்கள் இருவருமே நாட்டை விட்டுத் தப்பியோடி இருந்தனர். இதேவேளை, 2017 மார்ச்சில், வழக்கை மீளப் பெற்றுக் கொள்வதற்கு சபீனாவின் குடும்பத்தை இணங்க வைப்பதற்கு இந்திய ரூபாய்கள் 800,000 (சுமார் US$11,140) வழங்குவதற்கு முன்வந்தது. ஆனாலும், 2017, மார்ச் 29 அன்று, சண்டிகார் உயர் நீதிமன்ற நீதிபதி வழக்கின் மீளப்பெறுதலை நிராகரித்தார். இருந்த போதிலும், 2017, மார்ச் 30 ஆம் திகதியன்று, சட்டத்தரணிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த போது, மற்றொரு நீதிபதி அதிர்ச்சியளிக்கும் வகையில் வழக்கின் மீளப்பெறுதலை அனுமதித்தார். GKS உடனேயே, வழக்கின் தள்ளுபடியை மீளாய்வு செய்வதற்கு முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு சட்ட நடவடிக்கையைத் தாக்கல் செய்தது. இரண்டு சந்தேக நபர்களும், இந்தியாவை விட்டு தப்பிச் சென்றுள்ளதினால், அறிவுறுத்தலுக்காக வெளிவிவகார அமைச்சை GKS தொடர்பு கொண்டது. நீதிமன்றக் கட்டளையின்றி தங்களால் எதுவும் செய்வதற்கில்லையென அமைச்சு குறிப்பிட்டது. இதனையடுத்து, GKS மீண்டும் நீதிமன்றத்தில் GKS இன் பெயரில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது. மார்ச்/ஏப்பிரல் 2018 இல், நீதிமன்றம், அபூர்வா பேரி இல்லாது, குடும்பத்தின் வீட்டுச் சாரதியான ஓம் பிரகாஷை பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக அறிவித்தது.

GKS, நீதிமன்ற விசாரணையொன்றுக்கு தொடர்ந்து வலியுறுத்தியது. சண்டிகார் உயர் நீதிமன்றம், 2019, மார்ச் 18 அன்று, திகதி அட்டவணைப்படுத்தி விசாரணையொன்றுக்கு ஏற்பாடு செய்தது. எனினும், குறித்த திகதியில், நீதிமன்ற விசாரணைக்கு பட்டியலிடப்பட்ட வழக்குகளில் குறித்த வழக்கு காண்பிக்கப்படவில்லை. அபூர்வா பேரி குற்றவாளியாக ஏன் பிரகடனப்படுத்தப்படவில்லை எனக் கேட்டு, GKS இன் சட்டத்தரணி நீதிமன்றத்தை இன்னமும் வலியுறுத்தி வருகிறார். நீண்ட, ஐந்து வருட காலங்கள் கடந்தும் கூட, இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

பேரி குடும்பம் பண பலம் பெற்றவர்கள் மற்றும் அதனால் அவர்கள் விசாரணையை நிறுத்துவதற்கு அல்லது தாமதப்படுத்துவதற்கு பொலிசாருக்கு அநேகம் இலஞ்சம் அளித்திருக்கலாம். கிராமத்தவர்கள் மௌனமாக உள்ளதினால் குடும்பம் பற்றிய மேலும் தகவல்களை GKS பெற முடியவில்லை. பொலிஸ் புலனாய்வாளர்கள் சபீனாவின் குடும்பம் மற்றும் GKS என்பவற்றுக்கு விரோதம் காண்பிப்பவர்களாக உள்ளனர். பொலிஸின் முதல் அறிக்கை மோசடியானதொன்றாகும், ஒரு முறையான புலன்விசாரணையைக் கோரியும் மற்றும் இரண்டாவது பிரேத பரிசோதனை மற்றும் DNA தடயவியல் அறிக்கைகளை வெளியிடுவதற்கு வேண்டி அது ஸ்தாபனத்தையும் மற்றும் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தையும், ஐந்திற்கும் மேற்பட்ட வருடங்களாக முயற்சிகள் மேற்கொள்ள வைத்துள்ளது.

### சவால்கள் மற்றும் முன்னோக்கிச் செல்வதற்கான வழி

GKS இன் அனுபவங்கள், ஒரு வழக்கை முன்கொண்டு செல்வதற்கு பொலிஸ், நீதிமன்றங்கள் மற்றும் அனைத்து மட்டங்களிலுமான வெவ்வேறு அரசாங்கத் திணைக்களிங்கள் மீது தொடர்ச்சியான அழுத்தங்கள் தேவை என்பதைக் காண்பிக்கின்றன. உறுதியான சாட்சியமின்றி அதிகாரம் நடவடிக்கை எடுக்காதென்பதாலும் மற்றும் செய்முறை மிகவும் காலம் எடுத்துக் கொள்ளுமென்பதாலும், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வெற்றிகரமாக ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்து கொள்வது துரதிர்ஷ்ட வசமாக, ஒரு சாமானியருக்கு இலகுவானதல்ல. மேலும், முறைப்பாடு, ஓர் ஊழல் சார்ந்த விடயமல்லாததாக அறிவிக்கப்படின், தவறான நடவடிக்கைக்காக முறைப்பாட்டை மேற்கொண்டவர் மீதே வழக்கு நடவடிக்கை தொடரப்பட்டு குற்றஞ் சாட்டப்படலாம்.

சிறார் தொழில் (தடைசெய்தல் மற்றும் கட:டப்படுத்தல்) சட்டம், 14 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களின், சிறார் தொழிலை மட்டும் வீட்டுப் பணிகளில் தடை செய்வதினால், வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சபீனாவின் வழக்கு ஓர் அடிப்படைப் பிரச்சினையைச் சுட்டிக் காட்டுவதாக GKS கருதுகிறது. ஆனால், 14 மற்றும் 18 வயதிகுட்பட்ட பராயமடையாதவர்கள் வளரிளம் பருவத்தினராகக் கருதப்படுகின்றரென்பதுடன், சில அபாயகரமான வேலைகளில் அவர்கள் ஈடுபடுவதைத் தடுக்கும் சில குறித்த தடைகள் அதிலுள்ளன. எனினும், வீட்டுப் பணி வளரிளம் பருவத்தினருக்கு ‘அபாயகரமான வேலையாக’ கருதப்படாததினால், 14-18 வயதிற்கிடைப்பட்டவர்கள் வீட்டுப் பணியாளர்களாக பணிக்கமர்த்தப்பட முடியும்.

மற்றைய பிரச்சினை, சட்டத்தின் நடைமுறைப்படுத்தாமை தொடர்பானது. தொழில் பரிசோதகர்கள், தொழிற்சாலைகள் அல்லது உத்தியோகபூர்வமில்லாத ஏனைய வேலைத் தலங்களைப் பரிசோதிப்பதற்கு முடியுமென்பதுடன், சட்டம் மீறப்பட்டிருந்தால், தொழிற்சாலை அல்லது நிறுவனத்தின் அனுமதி இரத்துச் செய்யப்பட முடியும். எனினும், தனிப்பட்ட வீடுகளில் வீட்டுப்பணிகளில் சிறார் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தப்படுவதைப் பரிசோதிப்பதற்கு தொழில் பரிசோதகர்கள் இல்லை. அதனால், வீட்டுப் பணிகளில் சிறார் தொழில் இந்தியாவில் இன்னமும் பரவலாக உள்ளது.




படங்கள்: GKS

சிறுவர்கள் கல்விக்கான உரிமையைக் கொண்டிருக்க வேண்டும், மற்றும் 18 வயதுகளிற்கு கீழ்ப்பட்ட வளரிளம் பருவத்தினர் வீட்டுப் பணிகளல் ஈடுபடுவதிலிருந்து தடைசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் 18 வயதிற்கு கீழ்பட்டோர்களுக்கு வீட்டுப் பணிகளில் ஈடுபடுதல் அபாயகரமான வேலையாக வகைப்படுத்தப்படல் வேண்டுமென்பது GKS இன் உறுதியான கண்ணோட்டமாகும். அத்தோடு, வீட்டுப் பணியாளர்களைப் பாதுகாப்பதற்கு தனியான சட்டம் மற்றும் கொள்கை என்பன இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்களது தொழில் மற்றும் நலனோம்பல் நிலைமைகள் வரையறுக்கப்பட்டும் மற்றும் வீட்டுப் பணியாளர்கள் வேலை செய்கின்ற தனிப்பட்ட குடித்தனங்களில் தொழில் பரிசோதனை உட்பட, தெளிவான விதிமுறைகள் மற்றும் அமுல்படுத்தல் என்பவற்றுடன் அவர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படலும் வேண்டும்.

NDWM (தேசிய வீட்டுப் பணியாளர்கள் இயக்கம், இந்தியா) போன்று, வீட்டுப் பணிகளில் உள்ளவர்கள் உட்பட, சிறுவர்கள் மற்றும் பெண்களின் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் அல்லது வழக்குகளை எடுத்துக் கையாள்வதற்கு தனியான ஒரு நீதிமன்றம் மற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் தனியான பொலிஸ் பிரிவுகள் என்பவற்றை ஏற்படுத்துவதற்கு GKS உம் பரிந்துரைக்கிறது. பாலியல் துஷ்பிரயோகங்ளுக்கு ஆளானவர்களுக்காக, பெரும்பான்மையாகப் பெண்களைக் கொண்ட, சுயாதீனமானதும் மற்றும் விசேடமானதுமான அத்தகைய பிரிவுகள், விசாரணை மற்றும் நீதிச் செய்முறைகளின் துரிதப்படுத்தலுக்கு உதவும்.

சிறுவர் உரிமைகளுக்கான தேசிய ஆணையகம் (NCPCR) மற்றும் பெண்களுக்கான தேசிய ஆணையகம் (NCW) போன்றவை தற்போது அரசாங்கத்திற்கான ஆலோசனை அமைப்புகளாக மட்டுமே செயற்படுகின்றதுடன், அவை அரசாங்கத் திணைக்களங்களிற்கு கட்டளையிடுவதற்கான அதிகாரம் அல்லது நிறுவன ரீதியான பலத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது கவனம் செலுத்தத் தேவையான நிறுவனரீதியான மற்றொரு பலவீனமாக உள்ளது. கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கு அல்லது வழங்குவதற்கு ஆணையகங்கள் கூடுதல் அதிகாரங்கள் அளிக்கப்படுதல் வேண்டும், மற்றும் அவற்றின் பணிப்புரைகள் பிணக்கும் தன்மை கொண்டவையாக இருத்தல் வேண்டும். உதாரணத்திற்கு, ஆணயகம் ஒரு அரசாங்கப் பிரிவை மறுமொழி அளிப்பதற்கு கோரி, அங்கு பதிலிறுத்தல் இல்லையாயின், சம்பந்தப்பட்ட பிரிவை ஆணையகத்திற்கு வந்து விளக்கம் அளிப்பதற்கு தேவைப்படுத்தும் அதிகாரத்தை ஆணையகம் கொண்டிருத்தல் வேண்டும்.

*….14 மற்றும் 18 வயதுகளிற்கிடைப்பட்ட பராயமடையாதவர்கள் வளரிளம் பருவத்தினராகக் கருதப்படுகின்றதுடன், அபாயகரமான சில வேலைகளில் ஈடுபடுவதிலிருந்து அவர்களைத் தடைசெய்வதற்கு சட்டத்தில குறித்த ஏற்பாடுகள் உள்ளன.*

*எனினும், வீட்டுப் பணி வளரிளம் பருவத்தினருக்கு ஒரு 'அபாயகரமான வேலையாக' கருதப்படாததினால், 14-18 வயதுகளிற்கு இடைப்பட்டவர்கள் வீட்டுப் பணியாளர்களாக வேலைக்கமர்த்தப்பட முடியும்.*

## அனோவரா பேகம் மற்றும் NDWWU, டாக்கா, பங்களாதேஷ்

*தேசிய வீட்டுப் பணிப்பெண் தொழிலாளர்கள் சங்க (NDWWU) பொதுச் செயலாளர் முர்ஷிகிட்டா அக்தர் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது*



வீட்டுப் பணியாளர்களின் நேரடியான மற்றும் துரிதமான கூட்டு நடவடிக்கை மூலமாக, 35 வயதுடைய, அனோவரா பேகம், அவரது ஆண் தொழில் தருனரான, ஜாஹிட் என்பவரிடமிருந்து கொடுப்பனவு செய்யப்படாத மூன்று மாத ஊதியத்தை பெற்றுக் கொள்வதற்கு தேசிய வீட்டுப் பணிப்பெண் தொழிலாளர் சங்கம் (NDWWU) உதவியது.

### துஷ்பிரயோகம்

பங்களாதேஷ் தலைநகர், டாக்காவின் டெம்ரா பகுதியிலுள்ள ஜாஹிட் குடும்பத்திற்கு, அனோவரா ஒரு பகுதி நேர வீட்டுப் பணியாளராக, 2018 ஆகஸ்ட் இலிருந்து ஒக்டோபர் வரை பணியாற்றினார். ஆரம்பத்தில், அவரது தொழில் தருனர் இந்த வேலைக்காக மாதமொன்றுக்கு அவருக்கு 1200 டக்கா (சுமார் US$14) கொடுப்பனவு செய்வதாக இணங்கினார். எனினும், அதே மாதச் சம்பளத்திற்கு அவரை முழுநேரமாக சுத்தப்படுத்தல் மற்றும் சலவை செய்வதற்கு ஜாஹிட் நிர்பந்தித்ததுடன், மூன்று மாதங்களாக அவரது வேலைக்காக ஊதியமெதனையும் கொடுப்பனவு செய்யவில்லை.

ஒக்டோபர் 2018 இன் ஆரம்பத்தில், காலை உணவின் பின் பாத்திரங்களைக் கழுவும் போது, அனோவரா ஒரு கண்ணாடிக் குவளையை கை தவறி நிலத்தில் விழுத்தி உடைத்து விட்டார். இதனால், கோபமடைந்த அவரது தொழில் தருனர் ஜாஹிட் உடனடியாகவே அனோவராவை அவரது ஊதியப் பாக்கி எதனையும் கொடுக்காது வேலையிலிருந்து நீக்கியதுடன் மூர்க்கம் கொண்டு அனோவராவை சுமார் மூன்று நிமிடங்கள் வரை மோசமாகத் தாக்கினார். ஜாஹிட், அனோவராவை அறைந்து அவரது பிற்புறத்தில் அடித்ததுடன், தலை மயிரை இழுத்தும் மற்றும் மூன்றாம் மாடியிலிருந்து கீழ்த் தளத்திற்கு தரதரவென இழுத்து வந்து, அவரை கட்டட வளாகத்திலிருந்து துரத்தி விட்டார். அனோவராவிற்கு தலைவலியும் உடல் முழுவதிலுமாக வலியும் ஏற்பட்டது.

## DWO இன் மூலோபாயங்கள் மற்றும் நடைமுறை நீதியான நடவடிக்கைகள்

சம்பவத்தின் பின்னர், NDWWU இன் ஓர் உறுப்பினரான அனோவரா டெம்ரா பகுதியின் NDWWU ஒழுங்கமைப்புச் செயலாளரான ஷஹனூர் பேகத்தை அணுகினார். அடுத்த நாள், NDWWU இன் உதவியுடன், டெம்ரா பகுதியிலிருந்து 50 வீட்டுப் பணியாளர்கள் அனோவராவின் தொழில் தருனரின் வீட்டுக்குச் சென்று அனோவராவிற்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியத்தின் கொடுப்பனவைக் கோரினர். NDWWU பதாகையின் கீழ் ஒரு பெரும் எண்ணிக்கையில் வீட்டுப் பணியாளர்களின் கூட்டத்தைக் கண்டு அச்சம் கொண்ட தொழில் தருனர் ஜாஹிட் உடனடியாகவே ஊதிய நிலுவையைக் கொடுப்பனவு செய்தார். எனினும், அந்த ஊதியக் கொடுப்பனவிலிருந்து உடைத்த கண்ணாடிக் குவளைக்காக 20 டக்காவை அவர் கழித்துக் கொண்டார்.

## சவால்கள் மற்றும் முன்னோக்கிச் செல்வதற்கான வழி

சங்கத்தின் அனுபவத்தில், பங்களாதேஷிலுள்ள அநேகம் 100 சதவீதமான வீட்டுப் பணியாளர்கள் பெண்களாவர் என்பதுடன் அவர்களில் பலர் இதே பிரச்சினைக்கு முகங் கொடுக்கின்றனர். இந்த சம்பவம், அனோவரா ஒரு பெண் என்பதால், ஒரு வீட்டுப் பணியாளர் எவ்வாறு உடல் ரீதியான மற்றும் பொருளாதார - பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு ஆளாகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகிறது. உடல் ரீதியான வன்முறை மூலம் பெண்களைத் துஷ்பிரயோகிப்பதும் மற்றும் ஊதியத்தை அதிகரிக்காது வேலை நேரங்களை அதிகரித்தல், மற்றும் ஊதியக் கொடுப்பனவுகளை பிற்போடுதல் மற்றும் பிடித்து வைத்தல் மூலமாக பெண்களை பொருளாதார ரீதியாகச் சுரண்டுவதும் இலகுவானது.

பங்களாதேஷில், வீட்டுப் பணியாளர்கள் மீதான வன்முறை மற்றும் துன்புறுத்துதலை எதிர்த்துப் போராடுவதற்கான சட்டங்கள், தண்டனைச் சட்டக் கோவை, சர்வதேச தொழில் ஸ்தாபன தரநியமங்களுக்கு அமைவாக 2018 இல் திருத்தம் செய்யப்பட்ட 2006 ஆம் ஆண்டின் பங்களாதேஷ் தொழில் சட்டம், 2000 ஆம் ஆண்டின் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான அடக்குமுறையைத் தடுத்தல் சட்டம் மற்றும் 2013 ஆம் ஆண்டின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் புலம்பெயர்தல் சட்டம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

மேலதிகமாக, 2015 இல் வீட்டுப் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் கொள்கை ஏற்று அங்கீகரிக்கப்பட்டதுடன். 2009 இல், பாலியல் துன்புறுத்துதலை இல்லாதொழித்தல் மற்றும் தடுத்தல் கொள்கை தொடர்பான வழிகாட்டல்களை பங்களாதேஷ் உச்ச நீதிமன்றம் வெளியிட்டது. எனினும், வீட்டுப் பணியாளர்களை உள்வாங்குவதற்கு 2006 ஆம் ஆண்டின் தொழில் சட்டம் இது வரை திருத்தப்படவிலடலை. இதன் காரணமாக, வீட்டுப் பணியாளர்களைப் பாதுகாப்பதற்கான 2015 கொள்கை மற்றும் பாலியல் துன்பறுத்துதலுக்கு எதிரான 2009 வழிகாட்டல்கள் என்பன பயனறுதியான விதத்தில் அமுல்படுத்தப்படவில்லை.

NDWWU ஒழுங்கேற்பாடு செய்வதிலுள்ள பலத்தை நம்புகிறது. கடந்த இரண்டு வருடங்களின் போது, டாக்காவின் வெவ்வேறு பகுதிகள் மற்றும் பங்களாதேஷிலுள்ள ஏனைய நகரங்களில், வீட்டுப் பணியாளர்கள் சங்கம் வீட்டுப் பணியாளர்களை ஒழுங்கேற்பாடு செய்துள்ளதுடன் அவர்களில் சிலருக்கு பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் அதனை எவ்வாறு தடுத்தல் மற்றும் அதன் மீது கவனம் செலுத்துதல் தொடர்பாக வலையமைப்பு செய்தல் மற்றும் ஒழுங்கேற்பாடு செய்தலில் பயிற்சியும் அளித்துள்ளது. நேரடியான மற்றும் நடைமுறை ரீதியிலான இடையீடுகள் மூலமாக ஒழுங்கேற்பாடு செய்தலின் பலத்தை எடுத்துக் காட்ட NDWWU விரும்புகிறது. ஒரு வீட்டுப் பணியாளர் தொழில் தருனருடன் ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுக்கையில், வீட்டுப் பணியாளர்கள் மத்தியிலான துரிதமான வலையமைப்பு ஒரு பெரும் எண்ணிக்கையில் அவர்கள் ஒன்று திரள்வதை தொழில் தருனர்கள் எதிர் கொள்ள வைக்கிறது. வழமையில், ஒரு பெரும் எண்ணிக்கையிலான வீட்டுப் பணியாளர்கள் குழுக்களுடன் அவர்களின் சங்கம் ஒன்று திரண்டு வருவதைக் காணும் பொழுது, தொழில் தருனர்கள் அச்சம் கொள்வதுடன் பேசுவதற்கும் மற்றும் செவி மடுப்பதற்கும் தயாராக இருப்பர். இது, பேச்சு வார்த்தை செய்வதற்கும் மற்றும் நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்கவதற்குமான அழுத்தத்தை தொழில் தருனர்கள் மீது இடுகிறது.

இந்த ஒழுங்கேற்பாடு செய்தல் மற்றும் வலையமைத்தல் மூலோபாயம் பல சந்தர்ப்பங்களில் வெற்றியளித்து, அதன் பயனான பேச்சுவார்த்தைகள் பணியாளர்களுக்கு சாதகமாகவும் மற்றும் அவர்கள் நீதியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததையும், NDWWU கண்டது. மாற்றீடான, சட்ட நடவடிக்கை, காலம் தாமதமாதலையும் மற்றும் செலவையும் ஏற்படுத்தியது. பாதிக்கப்பட்ட வீட்டுப் பணியாளர், விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு வருகை தருவதற்கு பயணச் செலவுகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளவும் மற்றும் தனது நாள் ஊதியத்தை துறக்க வேண்டியும் இருந்ததுடன், இறுதியில், நீதி நிலை நாட்டப்படுமா என்பது பற்றி நிச்சயமற்றும் இருக்க வேண்டியிருந்தது. அதனால், வீட்டுப் பணியாளரொருவருக்கும் அவரது தொழில் தருனருக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், சாத்தியமாகும் தருணங்களில், வீட்டுப் பணியாளரின் நியாயமான, உரிமைபூர்வமான கோரிக்கைகளைத் திருப்திப்படுத்துவதற்கு தொழில் தருனரை குற்றஞ் சாட்டவும் மற்றும் அச்சப்படுத்தவும் குழு நடவடிக்கையை NDWWU தெரிவு செய்தது.

*பங்களாதேஷில் அநேகம் 100 சதவீதமான வீட்டுப் பணியாளர்கள் பெண்களாவர் என்பதுடன் அவர்கள் அனோவரா போன்று அதே பிரச்சினைகளை முகம் கொடுக்கின்றனர்.*

## மரியா மற்றும் SKDWA, குவைத் நகரம், குவைத்

***சன்டிகன் - குவைத் வீட்டுப் பணியாளர்கள் சங்கத்தின் (SKDWA) ஸ்தாபகர் மற்றும் தலைவர் மேரி ஆன் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது***



**https://Unsplash.com/photos/I4vDYnvelbs [Tony Yang]**

### துஷ்பிரயோகம்

மரியா (அவரது உண்மைப் பெயரல்ல), பிலிப்பைன்ஸ், மின்டானோவிலுள்ள சம்போன்கா நகரத்திலிருந்தான ஒரு ஒரு புலம்பெயர் வீட்டுப் பணியாளர் என்பதுடன் நவெம்பர் 2017 இல் வெளிநாடான குவைத் நாட்டில், ஒரு வீட்டுப் பணியாளராக வேலை செய்வதற்கு ஆரம்பித்தார். அவருக்கு வயது 32 வருடங்களாகும். கணவன், மனைவி மற்றும் அவர்களது 13 வருட வயதுடைய மகள் உள்ள ஒரு குடும்பத்தில் வேலை செய்தார். வளைகுடாவில் உள்ள புலம்பெயர் பணியாளர்களைப் போலவே, அவரும் மிரட்டப்பட்டு, உள்ளே வைத்து பூட்டப்பட்டு, நாள் தோறும் அடித்து துன்புறுத்தப்பட்டதுடன், அவரது ஊதியம் முழுமையாக கொடுக்கப்படாதும் இருந்தார்.

வேலைக்கான நேர்காணலின் போது, மரியாவின் பெண் தொழில் தருனர், குவைத் பெண்பொலிசின் ஒரு பொய்யான பதக்கத்தைக் காண்பித்து, தானொரு குவைத் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் என பாசாங்கு பண்ணிய போதிலும், அவரது குடும்பம் குவைத் நகரத்திலிருந்து வரவில்லை. மரியாவின் பணப்பையில் தங்களது மகளின் ஒரு புகைப்படத்தை அவரது தொழில் தருனர்கள் கண்டுபிடித்ததின் பின்னர் மரியா மீதான துஷ்பிரயோகம் ஆரம்பித்தது. சிறுவர் பாலிச்சை கொண்ட ஒருவராக அவர் குற்றஞ் சாட்டப்பட்டதுடன் தங்களது மகள் மீது பாலியல் குற்றங்கள் புரிந்தவராக சந்தேகிக்கப்பட்டார். ஒரு காணொலி கமெரா முன்பாக தங்களது மகள் மீதான அவரது தீய எண்ணத்தை தெரிவிக்கும்படி மரியா அவரது பெண்தொழில் தருனரால் மிரட்டிக், கட்டாயப்படுத்தப்பட்டார். அந்தக் காணொலி, பொலிசிடம் கையளிக்கப்படுமெனவும் அவரது குற்றத்திற்காக அவர் தூக்கில் தொங்க விடப்படுவார் எனவும் அவர் மரியாவிடம் கூறினார்.

மரியா மிகவும் பயந்து போனார். அவரது தொழில் தருனர் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என எண்ணியதால் மரியா அவருக்கு கீழ்படியாதிருப்பதற்கு நினைக்கவில்லை. மறுநாள், ஒரு விரக்தியில், தேநீர் தயாரிப்பதற்கு முன் தேநீர்க் குடுவையிலிருந்த அழுக்குநீக்கும் கலவையை கழுவுவதற்கு மறந்து விட்டார். அதற்கு, அவரது பெண் தொழில் தருனர் தங்களைக் கொலை செய்வதற்கு மரியா எத்தனித்ததாக குற்றம் சாட்ட, மாசடைந்த அந்தத் தேநீரையும் அவ்வாறே போத்தலிருந்த அழுக்கு நீக்கிக் கலவையையும் குடிக்கும்படி மரியா நிர்ப்பந்திக்கப்பட்டார். அதன் பின்னதாக, அவரது தொழில் தருனரால், தினசரி இரும்புக் கம்பி, கத்திரிக்கோல், பசை பீச்சும் கருவி, கத்திகள் மற்றும் தடிகள் என கையில் கிடைக்கும் பொருட்களால் மரியா தாக்கப்பட்டார். அவரது தொழில் தருனர் மரியாவின் கூந்தலை பலவந்தமாக வெட்டி, அலரது தலையில் காயங்களை ஏற்படுத்தியதுடன் அவற்றின் மேல் வினாகிரியையும் ஊற்றி சித்திரவதை செய்தார்.



டிசம்பர் 2019 இலான ஒரு மாநாட்டில் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்த பிலிப்பைனோ புலம்பெயர் வீட்டுப் பணியாளர் தலைவர்கள்.படம் : IDW

## DWO மூலோபாயங்கள் மற்றும் நடைமுறை ரீதியான நடவடிக்கைகள்

ஒரு நாள், மரியாவின் தொழில் தருனர் அவரை ஒரு தடியால் கடுமையாக அடித்தார். அடி அவ்வளவு கடுமையாக இருந்தத்தினால் மரியா தான் இறந்து விடப் போவதாக உணர்ந்தார். அந்தத் தருணத்தில், தொழில் தருனரின் மகளின் டப்லெட் சாதனத்தை உபயோகித்து முகநூலில் ஒரு காணொலியைப் பதிவிடுவதன் மூலமாக உதவியை நாடுவதற்குத் தீர்மானித்தார். அந்தப் பதிவு, சன்டிகன்-குவைத் வீட்டுப் பணியாளர்கள் சங்கத்தின் (SKDWA) கவனத்தை ஈர்த்ததுடன், அவர்கள், குவைத்திலுள்ள பிலிப்பைன்ஸ் தூதரகத்தை உதவிக்கு வேண்டிக் கொண்டனர். தூதரகம் ஒரு பிரதிநிதியை மரியாவின் வேலைத்தலத்திற்கு விஜயம் செய்ய அனுப்பிய போது, தொழில் தருனர் துஷ்பிரயோகத்தை மறுத்து நிராகரித்தார். மரியா மிகவும் பயந்து போய் அவரது துஷ்பிரயோக குடித்தனத்தை விட்டுப் போவதற்கு மறுத்தார். பின், ஏப்பிரல் 2018 இல், தூதரகம், விசாரணைக்காக மரியா பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்படுவதற்கு குவைத் பொலிஸல் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தது.

பொலிஸ் நிலையத்தில், மரியா முழுநேரமும் மௌனமாகவே இருந்தார். SKDWA இன் ஒரு தலைவரான ஆன், மரியாவை சந்திப்பதற்கு பொலிஸ் நிலையம் வந்ததுடன் மரியாவின் காயங்கள் அனைத்தும் அவரது உடைகள் மற்றும் முக்காடு என்பவற்றின் கீழ் மறைந்திருப்பதைக் கண்டார். தான் தாக்கப்படும் போது மரியா தடுப்பதற்கு மரியா தனது கைகளை உபயோகிக்கவில்லை. மரியாவுடன் தனிமையில் பேசுவதற்கு தன்னை அனுமதிக்கும்படி ஆன் தூதரகத்தை வேண்டினார். அதன் பின்னர் மாத்திரமே, மரியா காணொலி தொடர்பான தனது கவலைகளை வெளிக் கூறினார். காணொலியை அவருக்கு எதிராக தொழில் தருனரால் உபயோகிக்க முடியாதென்பதற்கு சட்டத்தரணியொருவர் மரியாவிற்கு உறுதியளித்தார். மறுதலையாக, காணொலிப் பதிவு அவரது தொழில் தருனரை நீதிமன்றின் முன் கொண்டு வருவதறகான ஒரு தடயப் பொருளாக உபயோகிக்கப்பட முடியும். ஒரு மாத தொடர்பாடலின் பின்னர், இறுதியில் மரியா குவைத் பொலிசிடம் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்வதற்கு இணங்கியதுடன் அவர் நாடு திரும்புவதற்கு முடியும் வகையில், குவைத் நீதி நடவடிக்கைகளில் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தனக்காக ஒரு விசேட அற்றோனித் தத்துவம் (SPA) உடையவராக பிலிப்பைன்ஸ் தூதரகத்திலிருந்தான ஒரு சட்டத்தரணிக்கு அதிகாரமும் அளித்தார்.

இருந்த போதிலும், இன்று வரை வழக்கு தொடர்பாக எந்தவொரு செய்தியும் இல்லை. மரியா தனது நாடு திரும்பியதுடன் துஷ்பிரயோகத்தினால் இன்னமும் உள ரீதியாக பாதிப்படைந்தவாராக உள்ளார். அவர் மனவுளைச்சல் கொண்டவராகவும் சலவைக்கான அழுக்கு நீக்கி வாசனையை மணக்கும் போதெல்லாம் அதிகளவிற்கு வாந்தி எடுக்கிறார்.

## சவால்கள்

குவைத்தில், உடல் ரீதியான தாக்குதல் மற்றும் வல்லுறுவு என்பன குற்றவியல் சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்கையில், வேறு நாடுகளிலிருந்து புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் தொழில் வழங்கல், குடிவரவு மற்றும் தொழில் சட்டங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றனர். வீட்டுப் பணியாளர்கள் தொழில் தொடர்பான 68ஆம் இலக்கச் சட்டம், வீட்டுப் பணியாளர்களின் கௌரவத்தை அவமதித்தல் அனுமதிக்கத்தக்கதல்ல என குறிப்பிடுகிறது.

வீட்டுப் பணியாளர்களின் துஷ்பிரயோகங்கள் முறையிடப்படும் போதெல்லாம் குவைத்திய பொலிசார் பொதுவாகவே நடவடிக்கை மேற்கொள்கிறார்களென SKDWA கண்டது. இருந்தபோதிலும், பொலிசிற்கு முறையிடப்பட்ட சில சம்பவங்கள், மொழித் தடைகள் மற்றும் நெருக்கமான பிணைப்புக் கொண்ட சமூகங்களில் தொழில் தருனர்களும் பொலிசாரும் வாழ்வதினால், குற்றமிழைத்த தொழில் தருனர்களின் உறவினர்களாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருக்க முடியுமென்பதால், துஷ்பிரயோகங்களை பாதிக்கப்பட்டவர்கள் முறையிடுவதற்கு பயம் மற்றும் தயக்கம் கொண்டிருந்தமை என்பவற்றைக் கொண்டிருந்தன.

ஏனைய பல நாடுகளைப் போன்றே, குவைத்தின் குடிவரவுச் சட்டங்களும், புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் அவர்களது முதல் தொழில் தருனர் அவர்களைத் துஷ்பிரயோகித்தாலும் கூட, அவரது சம்மதமின்றி அவரை விட்டு விலகி புதிய தொழில் தருனரைத் தேடிக் கொள்வதை தடைசெய்வால், மரியா போன்ற, புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களும் வன்முறை மற்றும் துன்புறுத்துதலை முறையிடுவதற்கு தயங்குகின்றனர்.

## பேபி ஜேன் அலஸ் மற்றும் FADWU, கொவ்லூன், ஹொங்கொங்

*காமெய் லாவ் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது*
*ஆசிய வீட்டுப் பணிப்பெண்கள் சங்கங்களின் ஹொங்கொங் சம்மேளனம் (FADWU)*




**18 ஏப்பிரல் 2019 அன்று தொழில் நியாயசபையில் விசாரணை முடிந்த பின் பேபி ஜேன் அலஸ் மற்றும் FADWU தலைவர்கள் (படம்: FADWU)**

### துஷ்பிரயோகம்

38 வயதான ஒரு பிலிப்பைனோ புலம்பெயர் வீட்டுப் பணியாளரான, பேபி ஜேன் அலஸ், செப்டெம்பர் 2017 இலிருந்து 2019 முற்பகுதியில் அவர் வேலையிலிருந்து நீக்கப்படும் வரை ஜாமில் எனும் ஒரு பெண்ணால், வேலைக்கு அமர்த்தப்பட்டார். ஜாமிலின் குடும்பத்திற்காக வேலை செய்வது கடுமையானதொன்றாக இருந்தது. பேபி ஜேன் ஐந்து வளர்ந்தவர்களையும் மற்றும் ஒரு கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட ஜாமிலின் தந்தையையும் கவனித்துப் பராமரிக்க வேண்டியிருந்தது. வேலை ஒப்பந்தத்திற்கு அமைய அவருக்கு உரித்தான முறையான தங்குமிடம் மற்றும் உணவு என்பன ஜேனுக்கு வழங்கப்படவில்லை. எஞ்சிய உணவு மீதிகள் அல்லது பிஸ்கெட்கள் போன்றவையே வழங்கப்பட்டதுடன் படிக்கட்டுகளின் பின்னாலுள்ள களஞ்சிய அறையில், ஒரு மடக்கு கட்டிலிலேயே அவர் படுத்தார்.

நாய்களை நடைக்கு கூட்டிச் செல்வது, சுத்தம் செய்வது, மற்றும் அவரது ஓய்வு நாளில் குடும்பத்துக்கு சேவை செய்வதென, பேபி ஜேன் ஒவ்வொரு வாரமும் ஒரு முழுமையான ஓய்வை அனுபவித்ததில்லை. ஹொங்கொங் தொழில் கட்டளைச்சட்டத்தின் உறுப்புரைகள் 2 மற்றும் 17 இன் படி, ஒவ்வொரு ஏழு நாட்களில் ஒரு ஓய்வு நாள் ஒரு பணியாளருக்கு வழங்கப்படுதல் வேண்டுமெனவும், ஓர் ஓய்வு நாள் என்பது குறுக்கீடுகளற்ற 24 மணித்தியால காலங்களைக் கொண்டது என அர்த்தப்படுத்துகிறது. எனினும், பல வேலை தருனர்கள் சட்டத்தை மீறுகின்றனர். அவர்கள், தங்களது புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களை ஞாயிற்று கிழமைகளிலோ அல்லது ஏனைய ஓய்வு நாட்களில் அவர்கள் போவதற்கு முன் காலை உணவைத் தயார் செய்வதற்கும், பின் மாலை 6 அல்லது 7 மணியளவில் சுத்தப்படுத்துவதற்கு திரும்ப வருவதற்கும் தேவைப்படுத்தினர்.

சில காலமாக தான் சுகவீனமுற்றுள்ளதாக உணர்ந்த நிலையில், ஜனவரி 2019 இல், பேபி ஜேன் ஒரு வைத்தியரைச் சென்று சந்தித்தார். வைத்தியர், ஜேனுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாகவும், அது மூன்றாம் கட்ட நிலையில் உள்ளதாகவும் கண்டறிந்தார். ஜேனுக்கு ஒரு மூன்று வாரம் சுகவீன விடுமுறை அளிப்பதற்கு பரிந்துரைத்து ஒரு மருத்துவச் சான்றிதழையும் வழங்கினார். எனினும், இந்த விடயத்தை ஜேன் தனது தொழில் தருனரிடம் கூறிய போது, அவர் உடனடியாகவே ஜேனை வேலையிலிருந்து நீக்கியதுடன், அதற்கான வேலை நீக்க கடிதத்தையும் வழங்கினார்; கடிதத்தில் வேலை நீக்கத்திற்கான காரணம் 'கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்' கண்டறியப்பட்டது என தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

தனது வேலை இழத்தல் என்பது, ஹொங்கொங்கில் ஒரு பிலிப்பைனோ வீட்டுப் பணியாளராக அவர் உரித்துக் கொண்ட அனைத்து உரிமைகளையும் தான் இழந்ததை, ஜேனுக்கு அது அர்த்தப்படுத்தியது. அதில், முதலாவது, தொழில் கட்டளைச் சட்டத்தின் கீழ் (பிரிவு 33, அத்தியாயம் 57) அவர் உரித்துக் கொண்ட சுகவீன நாட்களுக்கான உரிமையை அவர் இழக்க வேண்டியிருந்தது. இரண்டாவது, வீட்டுப் பணியாளர்களுக்கான நியம ஒப்பந்த பத்திரத்தில் (உறுப்புரை 9, ID 407) குறிப்பிடப்பட்டிருந்த தொழில் காலத்தின் போது மருத்துவ சிகிச்சையின் இலவச ஏற்பாடுக்கான உரிமையையும் அவர் இழந்தார். இந்த ஒப்பந்தம், தொழில் தருனர்கள் தங்களது வீட்டுப் பணியாளர்களுக்காக இலவச மருத்துவ சிகிச்சைக் கட்டணம் வழங்குவதைத் தேவைப்படுத்துகின்றதுடன், தங்களது வீட்டுப் பணியாளர்களுக்காக மருத்துவக் காப்புறுதியை கொள்வனவு செய்வதற்கு அதிகாரிகள் அவர்களுக்கு ஆலோசனை அளித்தனர்.

பேபி ஜேனின் வேலை நீக்கம், நீண்ட காலத்திற்கான எதிர்மறைத் தாக்கங்களைக் கொண்டிருந்தது. ஒரு செல்லுபடியாகும் வேலை விசா மற்றும் வேலை ஒப்பந்தம் என்பவற்றுடனான புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் ஹொங்கொங்கின் வதிவிட அந்தஸ்துடனான ஒரு அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வர். வேலை முடிவுறுத்தலின் பின்னான இரண்டு வார காலத்தில் இந்த அடையாள அட்டை செல்லுபடியற்றதாகி விடும். அதனால், பேபி ஜேன் தனது வேலையை இழந்தது மட்டுமன்றி வேலை நீக்கத்தின் பின் இரண்டு வாரத்திற்குள் ஹொங்கொங்கில் தனது வதிவிட அந்தஸ்தையும் கூட அவர் இழந்தார்.

### துஷ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கை

பேபி ஜேன், குடிவரவுத் திணைக்களத்திடமிருந்து ஒரு விருந்தினர் அந்தஸ்தைப் பெற்றுக் கொள்வதற்கு இயலும் வகையில், அவரது தொழில்தருனருக்கு எதிராக முறைப்பாடொன்றைப் பதிவு செய்தார். இது, அவர் ஹொங்கொங்கில் தங்கி அவரது வழக்கைத் தொடர்வதற்கு ஜேனை அனுமதித்தது. எனினும், ஒரு விருந்தினர் அந்தஸ்துடன், பொதுச் சுகாதாரச் சேவைகளை உபயோகிப்பதற்கோ அல்லது வேலை செய்வதற்கோ பேபி ஜேன் அனுமதிக்கப்படவில்லை.

பேபி ஜேன் உதவிக்காக, ஹொங்கொங்கில் வீட்டுப் பணியாளராக வேலை செய்யும் தனது சகோதரியான மேரி ஆனிடம் கேட்டுக் கொண்டார். மேரி ஆன் மற்றும் அவரது தொழில் தருனரான ஜெசிக்கா ஆகியோரால் உதவப்பட்ட நிலையில், பேபி ஜேன் ஜாமிலின் வீட்டை விட்டு வெளியேறி ஜெசிக்காவின் வீட்டில் அவரது சகோதரி மேரி ஆனுடன் தங்குவதற்கு வந்தார். ஜெசிக்கா, பேபி ஜேனின் தங்குதல் மற்றும் வாழ்வாதாரத்திறகு தனது முழு ஆதரவையும் அளித்ததுடன் அவரது மருத்துவக் கட்டணைங்களுக்காக நன்கொடை பிரச்சாரங்கள் மூலமாக நிதியும் சேகரித்தார்.

### DWO மூலோபாயங்கள் மற்றும் நடைமுறை ரீதியான நடவடிக்கைகள்

அவரது சகோதரியின் தொழில் தருனர் ஜெசிக்கா மற்றும் FADWU இன் உதவியுடன், பேபி ஜேன் இரண்டு வெவ்வேறான முறைப்பாடுகளைத் தாக்கல் செய்தார். முதலாவது, தொழில்வாய்ப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அவரது பணி நீக்கம் சட்டவிரோதமானது மற்றும் இரண்டாவது, உடலூன பாரபட்ச கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 487) இன் கீழ் பணி நீக்கம் தொழில் பாரபட்சமானது என அவை விபரித்தன. முதலாவது முறைப்பாடு தொழில் திணைக்களத்திலும், இரண்டாவது சம வாய்ப்புகள் ஆணையகத்திலும் (EOC) தாக்கல் செய்யப்பட்டன.

முறைப்பாடு கிடைக்கப் பெற்றதும், ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் சாத்தியத்தை ஆராய்வதற்காக தொழில் தருனர் மற்றும் பணியாளர் ஆகியோருக்கிடையில் ஒரு சந்திப்புக்கு தொழில் திணைக்களம் ஏற்பாடு செய்தது. பேபி ஜேனின் முன்னாள் தொழில் தருனரான ஜாமில், தான் சுகவீனமுற்றிருப்பதாகத் தெரிவித்து, இந்த சந்திப்பிற்கு வருகை தரவில்லை. இரண்டு சட்டத்தரணிகளால் அவர் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட வேளையில், ஒரு புற்றுநோய் நோயாளியான பேபி ஜேன், இச்சந்திப்பிற்கு நேரில் வருகை தந்திருந்தார். பேபி ஜேனின் தாய் மொழி டகலொக் (Tagalog) என்பதுடன் அவரது ஆங்கில மொழிப் பரிச்சயம் மட்டுப்பாடுடைய காரணத்தால், சாதி பாரபட்ச கட்டளைச் சட்டக் கோட்பாட்டின் கீழ் (தலைப்பு 602) அரசியல் சாசன மற்றும் பிரதான நில விவகாரங்கள் பணியகத்தின் (CMAB) இனத்துவ சமத்துவத்தின் முன்னேற்றுதல (வழிகாட்டல்கள்) தொடர்பான நிர்வாக வழிகாட்டல்களில் குறிப்பிட்டவாறு ஓர் உரைபெயர்ப்பாளர் அவரிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். எனினும், அது நடைபெறவில்லையாதலால், ஆங்கிலத்தில் நடைபெற்ற சந்திப்பினை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு பேபி ஜேனிக்கு கடினமானதாக இருந்தது. எனினும், அவர் தனது தரப்பு நியாயத்தை வெற்றிகாரமாக எடுத்துரைத்தார்.

இணக்கப்பாட்டு சந்திப்பில் ஒரு தீர்வு எட்டப்படாதினால், முறைப்பாடு, தொழில் நியாயசபைக்கு பாரப்படுத்தப் பட்டதுடன், இந்தத் தடவை, அவருக்கு நீதிமன்ற உரைபெயர்ப்புச் சேவை அளிக்கப்பட்டது. பேபி ஜேன் FADWU பிரதிநிதியும், ஹொங்கொங் வீட்டுப் பணியாளர்களின் முன்னேற்ற தொழில் சங்கத்தின் தலைவர் ஷீலா எஸ்டிராட அவர்களை தனது சங்கப் பிரதிநிதியாக தொழில் நியாய சபை விசாரணையில் செயற்படுவதற்கு அதிகாரமளித்தார். ஷீலா தனது சங்க பிரதிநிதித்துவத்திற்கான ஆவணங்களை சமர்ப்பித்திருந்த போதிலும், தலைமை உத்தியோகத்தர் விசாரணைக்காக அவரை அமைப்பதற்கு மறுத்து விட்டார். பதிலுக்கு, அவரது சங்க பிரதிநிதியின் பிரசன்னமின்றி பேபி ஜேன் கேள்வி கேட்கப்பட்டார். இழப்பீட்டுக்கான மூலக் கோரிக்கை HKD$47,000 தொகையாக இருக்கையில், அவ்வுத்தியோகத்தர் பேபி ஜேன் HKD$30,000 (சுமார் US$3,846 தொழில் தருனரால் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு) தொகையை இழப்பீடாக பெற்றுக் கொள்ளும் வகையிலான தீர்வை ஏற்றுக் கொள்வதற்கு கடுமையாக அழுத்தம் கொடுத்தார்.

### சவால்கள் மற்றும் முன்னோக்கிச் செல்வதற்கான வழி

ஹொங்கொங்கில் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ளர். உடல் ரீதியான தாக்குதல் மற்றும் வல்லுறவு என்பன குற்றவியல் சட்டத்தின் கீழ் வருகின்றதுடன், புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களின் தொழில் குடிவரவு மற்றும் தொழில் சட்டங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.





ஹொங்கொங்கில், 1968 ஆம் ஆண்டின் தொழில்வாய்ப்பு கட்டளைச் சட்டம் (தலைப்பு 57) வீட்டுப் பணியாளர்களுக்கு பிரயோகமாகின்றதுடன், புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களின் தொழில்வாய்ப்புக்கான ஒரு நியம ஒப்பந்தம் (ID407) புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் தொழில் தருனர்களால் பூர்த்தி செய்யப்பட்டு கைச் சாத்திடப்பட்டிருத்தலும் வேண்டுமெனத் தெரிவிக்கிறது. பால், சாதி, உடலூனம், மற்றும் குடும்ப அந்தஸ்து தொடர்பான பாரபட்சங்களுக்கு எதிரான விசேட கட்டளைச் சட்டங்களும் கூட ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டங்கள் ஒவ்வொன்றுக்குமாக, சட்டங்களைின் அமுல்படுத்தலுக்கு உதவுவதற்காக ஒரு நடைமுறைக் கோவை வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், ஹொங்கொங்கில், புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் அனுபவிப்பதற்கான தொழில் உரிமைகள், அவர்களது தொழில் ஒப்பந்தங்கள் முடிவடைந்ததும் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே ஹொங்கொங்கில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கும் ‘இரண்டு வார விதி’ போன்ற வீட்டுப் பணியாளர்கள் மீதான குடிவரவு மட்டுப்பாடுகளால் பலவீனமடைகின்றன. அவருக்கு புற்றுநோய் ஏற்பட்டதினால் பேபி ஜேனின் தொழில் தருனர் அவரை நியாயமற்ற வகையில் பணியிலிருந்து நீக்கினார். சட்டத்தின் கீழ் நீதி நடவடிக்கையைத் தொடர்வதற்கு ஹொங்கொங்கில் தங்கியிருப்பதற்கு அவர் அனுமதிக்கப்பட்ட போதிலும், பணியிலிருந்து நீக்கப்பட்டமையால் பொதுச் சுகாதாரப் பராமரிப்புக்கான வழிவகையை அவர் இழந்தார். அவர் தொடர்ந்து வேலை செய்து ஒரு வருமானம் ஈட்டுவதற்கும் அனுமதிக்கப்படவில்லை. அவரது சகோதரி மற்றும் சகோதரியின் தொழில் தருனரின் முழுமையான ஆதரவு மற்றும் தனியார் மருத்துவப் பராமரிப்பை நாடுவதற்கு நிதிரீதியான அவரது உதவி என்பவற்றின் காரணமாகவே பேபி ஜேனால் ஹொங்கொங்கில் தங்குவதற்கு முடிந்தது.

பேபி ஜேன் முறைப்பாட்டை பதிவு செய்த பின்னர் தொழில்வாய்ப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் முரண்பாட்டு தீர்வு நடைமுறைகள் கரிசனத்திற்காக இடப்பட்டன, ஆனாலும் பிரச்சினைகளின்றி அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. முதலாவது இணக்கப்பாட்டு சந்திப்பில், அவர் உரித்துடையதான உரைபெயர்த்தல சேவை பேபி ஜேனுக்கு அளிக்கப்படவில்லை, மற்றும் தொழில் நியாய சபையில் தலைமை அதிகாரி பேபி ஜேனின் சங்க பிரதிநிதியை அனுமதிக்காது விசாரணையிலிருந்து விலக்கியமை மற்றும் இழப்பீட்டு மூலக் கோரிக்கையை விடக் குறைவான ஓர் இழப்பீட்டுத் தொகையை நிதித் தீர்வாக ஏற்று இணங்குவதற்கு பேபி ஜேனிற்கு அழுத்தம் பிரயோகித்தமை என்பன இதில் அடங்கும்.

பேபி ஜேனின் இச்சம்பவக் கதை, புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் நோய் வாய்ப்படுகையில் பாதுகாப்பு தொடர்பாக ஹொங்கொங்கில் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுக்கிடையில் பெரும் இடைவெளி இருப்பதை எடுத்துக் காட்டுகின்றது. FADWU இற்கு பின்வருபவை, அவசரமான விடயங்களாக முன்னுரிமை அளிக்கப்பட்டு கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களாக உள்ளன:

- இரண்டு வார விதியின் நீக்கம்.
- சட்ட நீதிமன்ற வழக்குகளை புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் தொடர்வதற்கு இயலும் வகையில் அரசாங்க உதவி மற்றும் சேவைகள்.
- நியாயமற்ற பணிநீக்க சந்தர்ப்பங்களில், தொழில்வாய்ப்புக் காலத்திற்குள் மட்டுமன்றி, அதன் பின்னாகவும் கூட, புலம்பெயர் வீட்டுப் பணியார்களுக்காக முழு மருத்துவக் காப்புறுதி மற்றும் பொதுச் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள்.

இதனை எழுதும் வேளையிலும், பேபி ஜேன் தனது வழக்கை EOC உடன் உடலூன பாரபட்ச கட்டளைச் சட்டத்தின் கீழ் தொடர்வதுடன், அவரது வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு காத்திருக்கிறார். தொழில் தருனர்கள் நியாயமற்ற வகையில் வேலைகளை முடிவுறுத்தும் போது புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் பொதுச் சுகாதாரப் பராமரித்தலுக்கு வழிவகை கொண்டிருப்பதற்கான ஒரு பிரச்சாரத்தை FADWU ஆரம்பித்துள்ளது. அது ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்து பேபி ஜேனின் துர்ப்பாக்கிய நிலைமையை எடுத்துச் சொல்லி பிரச்சாரத்திற்கு ஆதரவைத் திரட்டுகிறது. இந்த நடவடிக்கைகள், உள்நாட்டு மற்றும் சர்வதேசம் ஆகிய இரண்டு வகை ஊடகங்களின் கணிசமான கவனத்தை ஈர்த்துள்ளன. ஏப்பிரல் 2019 இன் நடுப்பகுதியில் சட்டவாக்க சபையின் மனிதவலு தொடர்பான குழுவில் ஒரு விசாரணையும் ஏற்பாடு செய்யப்பட்டது.[2] எனினும், அதன் பின்னர், முக்கியமாக ஹொங்கொங் அரசியல் குழப்பம் காரணமாக பிரச்சாரம் உறுதியான பெறுபேற்றுக்கு இட்டுச் செல்லவில்லை.

---

[2] https://www.legco.gov.hk/yr18-19/english/panels/mp/agenda/mp20190416.htm எனும் இணையத்தள இணைப்பில் மனிதவலு தொடர்பான 16 ஏப்பிரல் 2019 கூட்டத்தில், நிகழ்சிநிரல் IV இன் கீழ் “சுகாதாரப் பராமரிப்பு சேவைகளுக்கு வெளிநாட்டு வீட்டு உதவியாளர்களின் அணுகுவழி” என்பதைப் பார்க்கவும்

## பகுப்பாய்வு மற்றும் கலந்துரையாடல்

### பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதல்

வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பது ஒருவரின் விருப்புக்கு எதிராக புரியப்படும் ஏதேனும் நடவடிக்கையாக கருதப்படுகின்றது. இங்கே எடுத்துரைக்கப்பட்ட சம்பவங்களின் கதைகள் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பன வீட்டுப் பணியாளர்களுக்கு எதிராக அதிகார துஷ்பிரயோகம் பற்றியவை என்பதை எடுத்துக் காட்டுகின்றன. எட்டு சம்பவங்களின் கதைகளில் ஆறில், ஒன்று அல்லது மேற்பட்ட தொழில் தருனர்கள் அவர்களுக்காக வேலை செய்த வீட்டுப் பணியாளர்களுக்கு எதிராக வன்முறை மற்றும் துன்புறுத்துதலை புரிந்துள்ளனர். பிலிப்பைன்ஸில் நிகழ்ந்த சம்பவத்தில், வேலைவாய்ப்பு முகவரமைப்பின் உரிமையாளர் ரிசாவைத் துன்புறுத்தினார், கம்போடியாவில், ஸ்ரே மம் ஒரு வீட்டுப் பணியாளராக வேலை செய்த குடும்பத்தில் திருமணம் செய்து கொண்ட பின்னர் அவர் அக்குடும்பத்தினால் துஷ்பிரயோகிக்கப்பட்டார்.

தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரோதமான, அச்சுறுத்தலான மற்றும் அவமதிப்பான வேலைச் சுற்றாடலை உருவாக்குகின்றதுடன் அவர்களது நன்னிலை மற்றும் தொழில் உறவுகளைப் பாழ்படுத்துகின்றது. வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பவற்றுக்கான அச்சுறுத்தல்களும் கூட வன்முறை நடவடிக்கைகளேயாகும். அவ்வாறான அச்சுறுத்தல்கள் அநேகம் மிரட்டல்கள் வடிவில் 'அதைச் செய்தால் இதைச் செய்வேன்' என்ற ரீதியிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதலாக உள்ளன. இது, வீட்டுப்பணியாளரின் தொழில்வாய்ப்புடன் தொடர்புபட்டதாக ஒரு தொழில் தருனர், அல்லது அதிகாரத்திலுள்ள இன்னொரு நபர், வீட்டுப் பணியாளரைத் தொழிலில் வைத்திருப்பதற்கு அல்லது அவர் தொழில் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, அவரிடமிருந்து மேலதிக சேவைகளைக் கோரும் பொழுது நடைபெறுகிறது. இது நியாயமற்ற கோரிக்கைகளுக்கு விட்டுக் கொடுத்தல் அல்லது தனது வேலையை அல்லது தொழில் நன்மைகளை இழத்தல் என்பவற்றுக்கிடையில் தெரிவு செய்வதற்கு வீட்டுப் பணியாளரை நிர்ப்பந்திக்கிறது.

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் உடன்படிக்கை 190 'தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்துதலை' பின்வருமாறு வரையறுக்கிறது: "தனியொரு நிகழ்வாக அல்லது திரும்பத் திரும்ப நிகழ்கின்ற, ஒரு வகைகளிலான ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைகள் மற்றும் நடைமுறைகள், அல்லது அச்சுறுத்தல்கள், என்பதுடன் அவை:

- உடல், உள, பாலியல் அல்லது பொருளாதார ரீதியான தீங்கை விளைவிக்கும், அல்லது விளைவிக்கும் சாத்தியமான இலக்கைக் கொண்டவை, மற்றும்
- பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதலை உள்ளடக்குகின்றன" (உறுப்புரை 1).

**உடல் ரீதியான வன்முறை மற்றும் துன்புறுத்துதல்** என்பது யாரேனுமொருவரின் உடலிற்கு தீங்கு விளைவிப்பது பற்றியதாகும். சம்பவங்களின் கதைகள் வீட்டுப் பணியாளர்கள் கொலை செய்யப்படுகின்றமை, அடிக்கப் படுகின்றமை, குத்தப்படுகின்றமை, சூடு வைக்கப்படுகின்றமை அல்லது படிக்கட்டுகளில் தள்ளி விடப்படுகின்றமை பற்றிச் சொல்கின்றன. இந்தியா, இந்தோனேஷியா. பிலிப்பைன்ஸ் மற்றும் குவைத் நாடுகளிலிருந்தான சம்பவங்களில் நிகழுமாற் போல், வீட்டுப் பணியாளரொருவரைப் பட்டினி போடுதல், அல்லது தண்டனையாக பூனையின் மலத்தை அல்லது சலவைப் பதார்த்தத்தை உண்ண வைத்தல், அல்லது அவரின் தலையை சவரம் பண்ணுதல் மற்றும் வடுக்களை ஏற்படுத்தி வினாகிரியை அதன் மேல் ஊற்றுதல், என்பன சித்திரவதைக்குச் சமனானதும் மற்றும் உயிர் அச்சுறுத்தல் கொண்டதுமான அனைத்து வடிவங்களிலுமான உடல் ரீதியான வன்முறைகளாகும். ஹொங்கொங்கில் பேபி ஜேன், அவரது தொழில் தருனர் அவரை நோய்வாய்ப்புற்றார் என அறிந்தவுடன் பணி நீக்கம் செய்ததினால் கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய்க்கெதிராக போராடுவதற்கான மருத்துவச் சிகிச்சை உரிமையை துறக்க வேண்டி ஏற்பட்டது.

உடல் ரீதியான வன்முறை மற்றும் துன்புறுத்துதல் ஆழமான அவமதித்தல் தன்மை கொண்டதினால் அவை எப்போதும் ஒரு உளவியல் ரீதியான பரிமாணத்தைக் கொண்டுள்ளன. வல்லுறவு அல்லது ஏனைய உடல் ரீதியான பாலியல் குற்றங்கள் போன்றவற்றில் உடல் ரீதியான வன்முறை பாலியல் ரீதியானவையாகவும் இருக்க முடியும். வீட்டுப் பணியாளர் ஒருவரை போதுமான ஓய்வின்றி அளவுக்கு மிஞ்சி அதிக மணித்தியாலங்கள் வேலை செய்வதற்கு நிர்ப்பந்திப்பதன் மூலம் அவரின் உறக்கத்தை மறுப்பது, அல்லது உறங்குவதற்கு கண்ணியமான இடத்தை வழங்காதிருப்பது என்பனவும் கூட உடல் மற்றும் உள ரீதியான வன்முறை மற்றும் துன்புறுத்துதலை உருவகிக்கின்றன.

**உள ரீதியான வன்முறை மற்றும் துன்புறுத்ததல்** என்பது எவரேனினதும் மனம் மற்றும் ஆன்மாவை அச்சுறுத்தல், வதைத்தல், தீய நோக்குடன் பின்தொடரல், வன்முறை மற்றும் ஏனைய வாய் வார்த்தை மூலமான துஷ்பிரயோக அச்சுறுத்தல்களைக் கருதுகிறது. இந்தோனேஷியாவில், 12 வயதான முர்னி மற்றும் அவரது குடும்பத்திடம் தொழில் தருனர்கள் முர்னி மேலும் கல்வியைத் தொடர்வதற்கு தாங்கள் கொடுப்பனவு செய்வதாக வாக்குறுதி அளித்தது போன்று, பொய்யான வாக்குறுதிகளை அநேகம் உள்ளடக்குகிறது.

அந்தரங்கம் இல்லாமை, உதாரணத்திற்கு, உடன் வாழும் ஒரு வீட்டுப் பணியாளர் அவரது அறைக் கதவை மூடுவதற்கு முடியாமை அல்லது அவர் சமையலறையில், படிக்கட்டுகளின் கீழ் அல்லது ஏனையவர்களின் படுக்கையறையில் படுத்துறங்குவதற்கு வைத்தல் என்பவையும் கூட உள ரீதியான துன்புறுத்துதலாகக் கருதப்படுகின்றன. இந்தோனேஷியாவிலிருந்தான கதைச் சம்பவத்தில் சொல்லப்பட்டவாறு, வீட்டுப் பணியாளர்கள் வீட்டை விட்டு வெளிச் செல்வதைத் தடை செய்தல் அல்லது தங்கள் குடும்பம் அல்லது நண்பர்களுடன் தொடர்பாடுவதை முடியாததாக அல்லது கடினமானதாக ஆக்குதல் போன்ற வகையிலான தனிமைப்படுத்தல் வீட்டுப் பணியாளர்களின் நன்னிலைகளை எதிர்மறையாகப் பாதிக்கின்றன.

குவைத்திலிருந்து மரியாவின் சம்பவக் கதை உளவியல் ரீதியான வன்முறையின் தன்மை பற்றி எடுத்துக் காட்டுகிறது. முதலில், மரியாவை மிரட்டுவதற்கு, வேலைக்கான நேர்காணலின் போது தான் பெருமளவிற்கு அதிகாரம் கொண்ட ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என அவரது தொழில் தருனர் பொய் கூறினார். இரண்டாவது, அவரது மகளின் புகைப்படம் மரியாவின் பணப்பையில் இருந்த ஒரேயொரு காரணத்திற்காக மரியா அவரது மகள் மேல் பாலியல் இச்சை கொண்டுள்ளதாக குற்றஞ் சாட்டினார். மூன்றாவது, தொழில் தருனர் மரியாவிற்கு தீய நோக்கு இருந்ததாக காணொலியில் ஒத்துக்கொள்வதற்கு கட்டாயப்படுத்தினார், மற்றும் இந்தக் காணொலிப் பதிவுடன், தொழில் தருனர், தனது துஷபிரயோகம் மற்றும் வன்முறை நடவடிக்கைகளுக்கு அடிபணிந்து போவதற்கு மரியாவை அச்சுறுத்தினார்.

**பாலியல் வன்முறை மற்றும் துன்புறுத்துதல்** என்பது ஒருவரின் விருப்பத்திற்கு எதிராக புரியப்படும், பாலியல் தன்மையான ஏதேனும் நடவடிக்கை எனக் கொள்ளப்படும். ஒது நபரொருவரை அவரது விருப்பத்திற்கு எதிராக பாலியல் நடவடிக்கைகளுக்கு உட்படவோ அல்லது அவற்றை மேற்கொள்வதற்கோ நிர்ப்பந்திப்பது பற்றியதாகும். கூட வாழும் வீட்டுப் பணியாளர்கள், பகல் மற்றும் இரவு என, அவர்களின் தொழில் தருனர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு அருகாமையில் வேலை செய்தும் மற்றும் வாழுவதாலும், விசேடமாக அவர்கள் கூடுதலான இடரேதுநிலைகளில் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

பாலியல் வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளானவர்களில் கூடுதல் பெரும்பாலானவர்களாக இளம் சிறுமிகள் மற்றும் எல்லா வயதிலுமான பெண்களாக இருந்தனர். பையன்கள், சில சமயம் ஆண்களும் கூட பாலியல் வண்முறை மற்றும் துன்புறுத்தலில் பாதிக்கப்பட்டவர்களாக வந்தனர். வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை புரிந்தவர்களாக தொழில் தருனர்களின் குடித்தனங்களில் உள்ளவர்களாக அல்லது தொடர்பு பட்டவர்களாக மற்றும் பெரும்பாலும் ஆண்களாகவும் இருந்தனர். இந்தியா மற்றும் இந்தோனேஷியாவிலிருந்தான மூன்று கதைச் சம்பவங்கள் கூட்டு வல்லுறவுக்கான உதாரணங்களைத் தந்தன. இந்தியாவில், 14 வயதான சபீனா, அவளது ஆண் தொழில் தருனர்கள் ஒருவரினாலும் மற்றும் மற்றொரு ஆண் வீட்டுவேலையாளரான, குடும்பத்தின் வாகனச் சாரதியால் கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டார. அதன் பின்னர், அவர் கொலை செய்யப்பட்டார்.

ஏனைய இரண்டு கதைச் சம்பவங்கள், எவ்வாறு மனைவிகள் அல்லது தாய்மார்கள் போன்று, இந்த ஆண்களுக்கு நெருங்கிய பெண்களும் கூட, அநேகம் ஆண்கள் பக்கம் சேர்ந்து கொண்டு, வன்முறை புரிவதில் அவர்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டதைக் காண்பித்தது. இந்தியாவில், சுனித்தா, அவரது ஆண் தொழில் தருனரால், பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டதுடன் அவரது மனைவி இல்லாத சமயங்களில் மீண்டும் மீண்டும் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார். சுனித்தா தொழில் தருனரின் மனைவியிடம் தெரிவித்த போது, அவ்விரண்டு தொழில் தருனர்களும் ஒன்றுசேர்ந்து சுனித்தாவை நையப்புடைத்துள்ளனர். இந்தோனேசியாவில், பெண் தொழில் தருனர் தனது கணவர் மேல் பாலியல் இச்சை கொண்டுள்ளதாக முர்னியைக் குற்றஞ் சாட்டியதுடன் அதனை அவருக்கு எதிராக வன்முறை நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு பாவித்தார. இரண்டு ஆண் வீட்டுப் பணியாளர்களை, குடித்தனத்திலிருந்த இளையவரான பெண் வீட்டுப் பணியாளரை வல்லுறவு செய்வதற்கு நிர்ப்பந்தித்ததின் மூலம், வல்லுறவை ஒரு தண்டிக்கும் முறையாக அவர் உபயோகித்தார்.

**பொருளாதார வன்முறை மற்றும் துன்புறுத்துதல்,** தொழில் தருனர்கள் வீட்டுப் பணியாளர்களுக்கு ஊதியம் எதனையும் கொடுப்பனவு செய்யாத போது அல்லது மிகக் குறைவான ஊதியத்தை வழங்கும் போது, கொடுப்பனவுகளை தள்ளிப்போடும் போது, அல்லது போதுமான இழப்பீடின்றி அவர்கள் மித மிஞ்சிய வேலை நேரங்கள் அல்லது வழமையான கடமைகளுக்கு அப்பால் வேலைகளை நிர்ப்பந்தித்துத் தேவைப்படுத்தும் போது நிகழ்கின்றது. இது வீட்டுப் பணியாளர்களை அவர்கள் தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும், மற்றும் அவர்களை கூடுதலாகவும் மற்றும் கடுமையாகவும் வேலை செய்தற்கு நிர்ப்பந்திக்கிறது.

கதைச் சம்பவங்கள் பலவற்றில் வீட்டுப் பணியாளர்கள் பொருளாதார வன்முறை மற்றும் துன்புறுத்துதலை அனுபவித்தனர். இந்தோனேஷியாவில் முர்னி, மற்றும் இந்தியாவில் சுனித்தா, தங்களின் சுய பேணுதலுக்கு மட்டும் பணியாற்றியதைத் தவிர ஒரு போதும் ஊதியம் எதனையும் பெறவில்லை. குவைத்தில், மரியா அவரது ஊதியத்தை முழுமையாகக் கொடுப்பனவு செய்யப்படவில்லை. பங்களாதேஷில், அனோவரா பகுதி நேர சுத்தம் செய்யும் வேலை செய்வதற்கே இணங்கியிருந்த போதிலும், அவரது தொழில் தருனர், இணங்கிக் கொண்ட பகுதி நேர வேலைக்கான அதே சம்பளத்தில் முழு நேர வேலை செய்வதற்கு நிர்ப்பந்தித்தது மட்டுமன்றி மூன்று மாதங்களுக்கான அவரது சம்பளத்தை பிடித்தும் வைத்திருந்தார். அவர் ஒரு கண்ணாடிக் குவளையை உடைத்தமைக்காக கொடுப்பனவு ஏதுமின்றி வீட்டை விட்டு வெளியே துரத்தப்பட்டார்.

பொருளாதார வன்முறைக்கு மற்றொரு பொதுவான உதாரணம் வேலைவாய்ப்பு முகவரமைப்புகள் ஒரு வேலையைத் தேடிக் கொடுப்பதற்கு வீட்டுப் பணியாளர்களிடம் வசூலிக்கும் மித மிஞ்சிய கட்டணமாகும். இது, அநேகம் வீட்டுப் பணியாளர்கள் கடன்களில் சிக்குவதற்கும், சில சமயங்களில் மீளக் கொடுப்பனவு செய்வதற்கு சாத்தியமற்றதாகவும் இட்டுச் செல்கிறது. பொருளாதார மற்றும் பாலியல் வன்முறை என்பன அநேகம் ஒன்று சேர்ந்து பாலியல் ரீதியான அச்சுறுத்தல் வடிவத்தில் வருகின்றன. உதாரணத்திற்கு, தொழில் தருனர் ஒருவர், வீட்டுப் பணியாளர் பாலியல் ரீதியான சேவையை அளித்தாலன்றி ஊதியத்தை பிடித்து வைப்பதாகவும் அல்லது உணவு அளிக்கப்படாதெனவும் அச்சுறுத்துதல்.

**பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதல்** என்பதை சர்வதேச தொழில் உடன்படிக்கை 190 இல், ''நபர்களின் பால் அல்லது பால்நிலை, அல்லது ஒரு குறிப்பிட்ட பால் அல்லது பால்நிலைச் சமனின்மை காரணமாக அவர்கள் குறித்தான வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பதுடன் பாலியல் ரீதியான துன்புறுத்து தலையும் உள்ளடக்குகிறது'' (உறுப்புரை 1) என வரைவிலக்கணப்படுத்துகிறது. பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பது பல சமுதாயங்களிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையில் இருக்கக் காணப்படும் சமனற்ற அதிகாரத் தொடர்புகளில் வேரூன்றியுள்ளது. இந்த சமனற்ற அதிகாரத் தொடர்பு, ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையிலான உண்மையான உயிரியல் ரீதியான வேறுபாடுகளுடன் தொடர்புடைய தன்று, மாறாக அது, சமூகம் மற்றும் சமூக ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான வாழ்வில் இரண்டு பால்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பால்நிலை வகிபாகங்களுக்கு தொடர்புடையதாகும். பல சமுதாயங்களில் வீட்டுப் பணி ஒரு குறைவான அந்தஸ்து, குறைந்த ஊதியம், பெண்களின் குறைந்த வேலைத் திறன் கொண்ட பணியாக நோக்கப்படுகிறது. அதனால் தொழில் தருனர்கள் பலரினதும்

குடித்தனங்களில் அது அவசியமான ஒரு பணியாக இருந்த போதிலும் கூட, வீட்டுப் பணி குறைவாக மதிப்பிடப்படுதுடன் புலனாகாத பணியாகவும் உள்ளது.

**பாரபட்சத்தின் ஏனைய அடிப்படைகள்.** வசதி குறைந்த மக்கள் குழுக்களிலிருந்து வரும் வீட்டுப் பணியாளர்களில் பலரும், அவர்களின் பால் மற்றும் பால்நிலை என்பவற்றால் மட்டுமன்றி அவர்களின் சாதி, இனம், அல்லது நிறம், மதம், சமூகம், தேசம் அல்லது கிராமத் தோற்றுவாய், உடலூனம், வயது, தேசியம், புலம்பெயர் அந்தஸ்து, பாலியல் சார்புநிலை அல்லது பாலியல் அடையாளம் என்பவற்றாலும் கூட பாரபட்சங்களிற்கு முகங் கொடுக்கின்றனர். பாரபட்சத்திற்கான அடிப்படைகள் ஒன்றாக வருமிடத்து – உதாரணத்திற்கு, வீட்டுப் பணியாள ரொருவர், அவர் சுதேசிய இனத்தைச் சேர்ந்த பெண் என்ற காரணத்தால் பாரபட்சபடுத்தலுக்கு உள்ளாகும் பொழுது – அவர் மீது வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கான இடரேதுநிலை அதிகரிக்கின்றது. சம்பவங்களின் கதைகள் இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந்தியாவில், சுனித்தா ஒரு சுதேசிய இனக் குழுவிலிருந்து வந்தவராவர். இந்தோனேஷியாவில், முர்னி அவரது 12 வயதில் வேலை செய்வதற்கு ஆரம்பித்ததுடன், அவர் மற்றும் பிலிப்பைன்ஸிலிருந்து வந்த ரிசா ஆகிய இருவரும் கிராமப் பகுதிகளிலிருந்து வந்தவர்களாவர். இந்தியாவில் சபீனா, ஓர் உள்நாட்டுப் புலம்பெயர் குடும்பத்திலிருந்து வந்தவர் என்பதுடன், அவர் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்படும் போது அவருக்கு 14 வயது மட்டுமேயாகும். மரியா மற்றும் பேபி ஜேன் ஆகிய இருவரும் பிலிப்பைன்ஸிலிருந்து முறையே குவைத் மற்றும் ஹொங்கொங் நாடுகளுக்கு பணி செய்வதற்காக புலம்பெயர்ந்தனர்.

ஆண் ஓரினச் சேர்க்கையாளர், பெண் ஓரினச் சேர்க்கையாளர், இருபாலினர் அல்லது திருநராக உள்ள வீட்டுப் பணியாளர்கள், அவர்கள் இயல்பான பாலுணர்வுச் சமூக நியதியுடன் இசையாது, வேறுபட்ட பாலியல் நாட்டம் அல்லது பால்நிலை அடையாளத்தைக் கொண்டுள்ள காரணத்தினால் அவர்கள் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பவற்றின் பாதித்தல் கொண்டவர்களாக வருவதற்கு அதிக இடரேதுநிலை உடையவர்களாக உள்ளனர்.

**வீட்டுப் பணியாளர்கள் மீது வன்முறை மற்றும் துன்புறுத்துதலின் தாக்கங்கள் -** அவர்களது தொழில் தருனர்களுடன் இயல்பான சமனற்ற அதிகார உறவு காரணமாக, வீட்டுப் பணியாளர்கள் அவர்களது வேலை இழத்தல் பயத்தினால் இலகுவாக அடிபணிந்து போவதற்கு அச்சுறுத்தப்பட முடீயும். அநேகமான வீட்டுப் பணியாளர்கள் பால்நிலை குறித்து ஒருதலைப்பட்சம் மற்றும் பாரபட்சம் கொண்டவர்களாக வளர்கின்றதுடன், கல்வி வழிமுறையற்றவர்களாகவும் உள்ளனர். இந்த நிலைமை அநேகம் குறைந்த சுயமதிப்பு நிலை மற்றும் அதிகாரத்திற்கு அடிபணிந்து செல்லுதலை ஏற்படுத்துகிறது. துன்புறுத்துதல் மற்றும் வன்முறைகளுடன் பொறுத்துப் போதல், அவர்களில் பலருக்கும் வாழ்க்கையில் மற்றொரு யதார்த்தமாக உள்ளது. எனினும், சம்பவங்களின் கதைகளில் கண்டவாறு, வன்முறை மற்றும் துன்பறுத்துதலுக்கு ஆளாகுதல் வீட்டுப் பணியாளர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியங்களைச் சிதைப்பதற்கும், அவர்களது தன்னம்பிக்கை மற்றும் நன்னிலை என்பவற்றை அச்சுறுத்தி, அவர்களது வாழ்க்கையைக் கூட அழிப்பதற்கு முடியும்.

வீட்டுப் பணியாளர்கள் சம்பவங்களின் கதைகள், அவர்கள் நீதியை நாடுவதற்கு முடியாமலும் மற்றும் அதற்காகத் தப்பிக்கவும் முடியாதும், பல வருடங்களாக துஷ்பிரயோகங்களினால் துன்பப்படலாமென்பதை எடுத்துக் காட்டு கின்றன. இந்தியாவில், சபீனா வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார், சுனித்தா வல்லுறவு செய்யப்பட்ட பின், தப்பிச் செல்வதற்கு முன் தாக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார். இந்தோனேஷியாவில், முர்னி இறுதில் தப்பிச் செல்வதற்கு முடியுமாக இருந்த பொழுது அவர் 25 கிலோக்கள் மட்டுமே நிறையுடையவராக இருந்தார். குவைத்தில், மரியா அவரது தொழில் தருனரால் துஷ்பிரயோகிக்கப்படும் போது தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மற்றும் அவற்றை எதிர்ப்பதற்குமான அடிப்படை உள்ளு ணர்வை இழந்தார். இறுதியில், அவர் தனது சொந்த நாடான பிலிப்பைன்ஸிற்குத் திரும்பிய போதும், சலவைப் பதார்த்த வாசனையை மணக்கும் ஒவ்வொரு தடவையும் வாந்தி எடுக்கும், மன உளைச்சல் கொண்டவராக இருந்தார்.

துஷ்பிரயோகம் மற்றும் நீதியை அணுகுவதற்கு வழிவகைகள் இல்லாமையும் விரக்தி, உளவியல் மற்றும் மனோ ரீதியான நோய்கள், மற்றும் வேலைவாய்ப்புத் தன்மை மற்றும் வருமானம் என்பவற்றின் இழப்புக்கும் இட்டுச் செல்ல முடியும். கம்போடியாவில், ஸ்ரே மம், அவர் திருமணம் செய்து கொண்ட குடும்பத்தால் புரியப்பட்ட வீட்டு வன்முறையால் பாதிப்படைந்த பின் நோய்வாய்ப்பட்டவரானார். அதே போன்று, பிலிப்பைன்ஸில், ரிசா அவரது வேலைவாய்ப்பு முகவரின் துன்பறுத்துதலால் துயருற்ற பின் மனவுளைச்சலுக்கு உள்ளானார். அவர் அச்சம் கொண்டிருந்த காரணத்தால், முகருக்கு எதிராக ஒரு முறைப்பாட்டைப் பதிவதற்கு விரும்பவில்லை. தனது கிராமத்தில், வீட்டிற்கு திரும்புவதை மட்டுமே அவர் விரும்பினார்.

- ஆனால், கதைச் சம்பவங்கள், வீட்டுப் பணியாளர்கள் ஸ்தாபனங்களிடமிருந்து (DWO) உதவிகளைப் பெறின், வீட்டுப் பணியாளர்கள் எவ்வாறு இப்பாதிப்புகளிலிருந்து மீண்டு வரமுடியுமென்பதையும் கூட எடுத்துக் காட்டுகின்றன.

- JALA PRT இடமிருந்தான உதவியுடன், இந்தோனேஷியாவில் முர்னி பாடசாலைக்கு மீண்டும் சென்று தனது பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்து கொண்டார்.

- இந்தியாவில் சுனித்தா மனவுளைச்சலிற்கு உள்ளாகியருந்த போதிலும் அவர் மனமுடைந்து போய்விடவில்லை. NDWM இடமிருந்தான ஆதரவுடன், அவர் நீதிக்காக தைரியமாகப் போராடி ஒரு வீட்டுப் பணியாளராக மற்றொரு வேலையையும் பெற்றுக் கொண்டார். அவர் தனது கல்வியை நிறைவு செய்து கொண்டு, தற்போது ஒரு வலுவான வீட்டுப் பணியாளர் தலைவியாக உள்ளார்.

- பங்களாதேஷில், NDWWU இல் ஏற்கனவே ஓர் அங்கத்தவராக இருந்த, அனோவரா, சங்கத்தின் கிளைத் தலைவரொருவரை தொடர்பு கொண்டதும், அவர் ஏனைய NDWWU அங்கத்தவர்களுக்கு அனோவராவின் நிலை குறித்து அறிவித்தார். நீதியை நாடி அவர்கள் ஒன்று திரண்டதுடன், அவர்களது குழு நடவடிக்கை

தொழில் தருனருடன் வெற்றிகரமான பேச்சுவார்த்தைக்கு வழி வகுத்தது. அனோவராவிற்கு, அவருக்கு உரித்தான ஊதியம் கொடுப்பனவு செய்யப்பட்டது.

### பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கு எதிராக செயற்படுவதிலுள்ள சவால்கள்

சமுதாயம் மற்றும் பொலிஸ், சட்டத்தை அமுல்படுத்தும் அமைப்புகள், மற்றும் நீதித்துறை போன்ற அதன் நிறுவனங்களில் வசதிகுறைந்த மக்கள் குழுக்களிலிருந்து வரும் பெண்கள் மற்றும் இளம் பெண்களுக்கு எதிராக வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பன எந்தளவிற்கு ஆழமாக ஊடுருவியுள்ளன என்பதை அனைத்து கதைச்சம்பவங்களும் விளக்குகின்றன. வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான **வன்முறை மற்றும் துன்புறுத்துதல்** அநேகம் **'சாதாரணமானதாக', 'எங்கள் வாழ்க்கையின் ஓர் அம்சமாக அல்லது எங்கள் கலாச்சாரத்தின் ஓர் அம்சமாக'** அதிகளவிற்கு நோக்கப்படுகிறது. சில சமயங்களில் வீட்டுப் பணியாளர்கள் தாங்களாகவே அத்தகைய கருத்துப்பாடுகள் மற்றும் கண்ணோட்டங்களை ஏற்றுக்கொண்டும் அவற்றை இயல்பானதாகவும் ஆக்கிக் கொள்கின்றனர், ஆனாலும் அவை குற்றவிலக்குடன் வன்முறை மற்றும் துன்புறத்துதலில் ஈடுபடும் தொழில்தருனர்கள் மத்தியிலேயே விசேடமாகப் பொதுவாகக் காணப்படுகிறது. சட்டத்தை நிலைநாட்டுவதற்குப் பொறுப்பானவர்கள் அநேகம் அத்தகைய கருத்துப்பாடுகள் மற்றும் கண்ணோட்டங்களை பாதுகாப்பதுடன், பாதிக்கப்பட்டவர்கள் வசதிகுறைந்த மற்றும் பாரபட்சப்படுத்தப்பட்ட குழுக்களிலிருந்தான பெண்கள் மற்றும் இளம் பெண்களாயின் தங்களின் கடமைகளை புறக்கணிக்கவும் முயல்கின்றனர். சமுதாயத்தில் பெரும் அளவிற்கு தொழில் தருனர்கள் மற்றும் அவ்வாறே சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய நிறுவனங்கள் மத்தியில் வீட்டுப் பணியாளர்களுக்கான மதிப்பு மற்றும் மரியாதையின்மையால் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பவற்றிலிருந்து வீட்டுப் பணியாளர்களைப் பாதுகாப்பது ஒரு கடினமான சவாலாகும். **வீட்டுப் பணியாளர் ஸ்தாபனங்களுக்கு, அத்தகைய கருத்துப்பாடுகள் மற்றும் கண்ணோட்டங்களை மாற்றுவது முன்னுரிமைக்குரிய ஒரு நடவடிக்கையாகும்.**

எட்டு கதைச் சம்பவங்களில் ஐந்து வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான கடுமையான உடல், பாலியல் மற்றும் உள ரீதியான தாக்குதல்கள் பற்றியவையாகும் என்பதுடன் இந்தியா, இந்தோனேசியா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளைப் பொறுத்தவரை அவை தண்டனை அல்லது குற்றவியல் கோவைச் சட்டங்கள், அவ்வாறே பராயமடையாதவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் என்பவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களாகும். முர்னி மற்றும் JALA PRT (இந்தோனேஷியா), ஸ்ரே மம் மற்றும் ADW (கம்போடியா) சபீனா மற்றும் GKS, அவ்வாறே சுனித்தா மற்றும் NDWM (இந்தியா) ஆகியோரின் கதைச் சம்பவங்கள் நீதியை நாடுவதிலான நீண்ட மற்றும் கடினமான நடைமுறைகள், மற்றும் அதிகாரம் மிக்க தொழில் தருனர் குடும்பங்களால் மருத்துவம், பொலிஸ் மற்றும் நீதித்துறை அதிகாரிகளுக்கான இலஞ்சம் சட்டத்தின் அமுல்படுத்துதலையும் மற்றும் குற்றம் புரிந்தவர்களின் தண்டனைகளை எவ்வாறு தடுக்க முடியுமென்பதையும் விளக்குகின்றன. குவைத்தில், SKDWA, குவைத் பொலிஸ் மற்றும் பிலிப்பைன்ஸ் தூதரகம் என்பவற்றின் அயராத முயற்சிகள் மரியாவை மீட்டு அவர் தாய் நாட்டிற்கு திரும்பிச் செல்வதற்கு வழிவகுத்தன, அனாலும் அவரது வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளது.

**நீதியைப் பெற்றுக் கொள்வதில் வீட்டுப் பணியாளர்களுக்கு உதவுவதில் DWO களின் முக்கியமான வகிபாங்களை** சம்பவங்களின் கதைகள் காண்பிக்கின்றன.

- பொலிசாரின் பயனுறுதியான நடவடிக்கை, முர்னிக்கான தனிப்பட்ட உதவி Jala PRT மற்றும் பெண்களின் சட்ட மையம் என்பவற்றினாலான பரந்த ஆதரவு என்பன இறுதியில் முர்னியின் தொழில் தருனர்களுக்கு சிறைத் தண்டனையைப் பெற்றுக் கொடுத்தது.

- இந்தியாவில் சுனித்தாவும் ஹொங்கொங்கில் பேபி ஜேனும் முறையே NDWM மற்றும் FADWU என்பவற்றின் உதவியுடன் சில நிதி வடிவிலான இழப்பீடுகளைப் பெற்றுக் கொண்டனர்.

- குவைத்தில், மரியாவின் இணையத்தளத் தகவலுக்கு பதிலிறுத்த SKDWA அவரைத் தொடர்பு கொண்டு அவரது காயங்கள் மற்றும் வடுக்களுக்கான காரணம் பற்றி அறிந்து கொள்வதை வற்புறுத்தியது. பங்களாதேஷில், அனோவரா மற்றும் NDWWU தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் குழு நடவடிக்கை அவரது கொடுப்பனவு நிலுவையின் கொடுப்பனவிற்கு வழிவகுத்தது.

- குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்படாத போதிலும் கூட, ஐந்து வருடங்களுக்கும் மேலாக, GKS மற்றும் சபீனாவின் குடும்பத்தின் உறுதியான நடவடிக்கை சபீனாவை வல்லுறவுக்குட்படுத்திக் கொலை செய்தவர்கள் அடையாளம் காணப்படுவதை ஏற்படுத்தியது.

பாதிப்படைந்த வீட்டுப் பணியாளர்களைப் பயனுறுதியான வகையில் வன்முறை மற்றும் துன்புறுத்துதலிருந்து பாதுகாப்பதில் இருக்கின்ற சட்டங்களும் மற்றும் அமுல்படுத்தல் பொறிமுறைகளும் போதாதிருந்தன என்பதை சம்வங்களின் கதைகள் தெளிவாகக் எடுத்துக் காண்பித்தன. நாடுகள் பலவற்றில், உடல் மற்றும் பாலியல் ரீதியான தாக்குதல் போன்ற, கடுமையான துஷ்பிரயோகங்களுக்கு எதிராக பரிகாரங்களை நாடுவதற்கு தண்டனை அல்லது குற்றவியல் கோவை மட்டுமே பிரயோகிக்கப்பட முடிகிறது.

- கம்போடியா மற்றும் இந்தோனேஷியாவில் வீட்டு வன்முறைக்கு எதிராக சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. எனினும், கம்போடியச் சட்டம் ஒர நடைமுறைப்படுத்தும் பொறிமுறை மற்றும் கால வரையறை என்பன இல்லாமையால், அது அமுல்படுத்தப்படக்கூடியதாக இல்லை. இந்தோனேசியாவில், இச்சட்டத்தில் வீட்டுப் பணியாளர்கள் குடித்தன உறுப்பினர்களாக தெளிவான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். ஆயினும், சட்டம் பற்றி பரவாலான விழிப்புணர்வின்மை மற்றும் சட்ட அமுலாக்க அமைப்புகள் மற்றும் நீதித்துறை, மற்றும் அது போன்றே சமூகத்தினுள் பால்நிலைப் பக்கச்சார்பு நிலை உள்ளதின் காரணமாக சட்டம் பயனுறுதியான வகையில் அமுல்படுத்தப்படவில்லை. அதனால், Jala PRT மற்றும் ஏனைய பெண்கள் - சிறுவர்களின் மினத உரிமைகள் ஸ்தாபனங்கள் இரு முனைப் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளன: அதில் முதலாவது, வேலையில், பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதலுக்கு எதிரானது, மற்றையது, வீட்டுப் பணியாளர்களை பாதுகாப்பதற்கு குறித்த சட்டத்தினை விருத்தி செய்தல்

மற்றும் அங்கீகரித்தல் என்பதாகும்.

- இந்தியாவில், பாதிப்படைந்த வீட்டுப் பணியாளர் தொடர்பில், கொலை உட்பட, உடல் மற்றும் பாலியல் ரீதியான தாக்குதல் சம்பவங்களில் பரிகாரம் வழங்குவதற்கு தண்டனைக் கோவையே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. பாலியல் ரீதியான குற்றங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு, சிறார் தொழிலை தடைசெய்வதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கு, வேலைத் தலத்தில் பெண்களுக்கு பாலியல் ரீதியான துன்புறுத்துதலைத் தடுத்தல், தடைசெய்தல் மற்றும் பரிகாரம் அளித்தல் என்பவற்றுக்கு பல்வகையான ஏனைய சம்பந்தப்பட்ட சட்டங்களும் கூட இயற்றப்பட்டுள்ளன. ஏனைய சட்டங்கள் குறிப்பாக தகவல், ஊழல் தடுப்பு மற்றும் குற்றம் பரிந்தவர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடியதால் அவர்களை மீளவும் நாடு கடத்துவதற்கான சட்டம் என்பன GKS மற்றும் சபீனாவின் குடும்பம் வழக்கில் எழுப்பப்பட்டன. எனினும், சுனித்தா மற்றும் NDWM வழக்கில் நடந்தவாறு, சட்டச் செயன்முறைகள் பல வருடங்களை எடுத்ததுடன், கணிசமான நேரம் மற்றும் பணத்தைத் தேவைப்படுத்தியது. பல வருட போராட்டங்களின் பின்னர், சபீனாவின் குடும்பம், இழப்பீட்டு அடையாளமாகக் கருதப்படக் கூடிய ஒரு தொகையை இறுதியில் ஏற்றுக்கொண்டது.

நடைமுறையில், இந்தியாவிலுள்ள சட்டங்கள், வீட்டுப் பணியிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கு பரிகாரம் அளிப்பதில் நன்கு செயற்படுவதில்லை. GKS மற்றும் NDWM வீட்டுப் பணிகளில் பெண்கள் மற்றும் சிறுவர்களை சிறந்த முறையில் பாதுகாப்பதற்கு சட்டங்கள் மற்றும் அமுல்படுத்தும் நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு பால்நிலை குறித்ததான நடைமுறைகளுக்காக கோரி வருகின்றன. அத்தகைய நடைமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- சிறுவர்களுக்கு அது அபாயகரமானதென்பதால், சிறுவர்கள் மற்றும் 18 வயதிற்கு கீழான இளைஞர்களுக்கு வீட்டுப் பணியை சட்ட விரோதமாக்குதல்,
- பாலியல் ரீதியான வன்முறை வழக்குகளைக் கையாள்வதற்கு பெண் ஊழியர்களுடன் தனியான பொலிஸ் பிரிவுகள் மற்றும் நீதிமன்றங்களை ஸ்தாபித்தல் போன்ற, பால்நிலை சார்ந்த பதில் நடவடிக்கைகளை ஆக்கல், மற்றும்
- பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகளின் பாதுகாத்தல் என்பவற்றுக்கான தேசிய ஆணையகங்களின் நிறைவேற்று அதிகாரத்தை வலுப்படுத்துதல், அதனால் சட்ட அமுல்படுத்தும் அமைப்புகள் போன்ற ஏனைய அரசாங்கத் திணைக்களங்களுக்கு அவர்களது பணிப்புரைகள் பிணிக்கும் தன்மை கொண்டவையாகும்.

தண்டனைக் கோவைகள் மற்றும் ஏனைய குற்றவியல் சட்டங்கள் அதிகபட்ச சாட்சி நிரூபணங்களுக்கான பொறுப்பைத் தேவைப்படுத்துகின்றதுடன் குற்றவியல் நடைமுறைகள் அநேகம் காலம் எடுப்பவையாகவும் செலவு மிக்கவையாகவும் அமைகின்றன. வீட்டுப் பணியாளர்கள் சிலர், பொதுவான அல்லது குறிப்பான தொழில் மற்றும் வேலைவாய்ப்புச் சட்டங்களின் கீழ் வன்முறை மற்றும் துன்புறுத்துதலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர்.

- அத்தகைய சட்டங்கள், அறிவித்த வரையில் பங்களாதேஷ் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் இன்னமும் பயனுறுதி கொண்டவையாக இல்லை.

- பிலிப்பைன்ஸ் மட்டுமே, வீட்டுப் பணியாளர்களுக்கு தொழில் மற்றும் சமூகப் பாதுகாப்பு வழங்குவதற்கான நடைமுறைப்படுத்தல் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் ஒரு விரிவான தேசிய வீட்டுப் பணியாளர்கள் சட்டத்தைக் கொண்ட ஒரேயொரு நாடாக உள்ளது. இந்த நாட்டில், சுதேசிய சமூகம் மற்றும் மாவட்ட மட்டங்களில் சட்டத்தின் பயனறுதியான அமுல்படுத்துதல் சவாலானது, ஏனெனில் இங்கே தொழில் தருனர்கள் மற்றும் மாவட்ட அதிகாரிகளும் உறவினர்காளக இருக்கலாமென்பதுடன் உள்நாட்டு அரசாங்களில் மனித மற்றும் நிதி வளங்கள் அரிதானவையாகும்.

- ஹொங்கொங்கில், புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் வேலைவாய்ப்பு மற்றும் சமத்துவச் சட்டங்களினால் காக்கப்பட்டுள்ளனர், அதனால் அவர்கள் தொழில் முரண்பாட்டுத் தீர்வுப் பொறிமுறை மற்றும் சமத்துவப் பொறிமுறைகள் போன்ற சம்பந்தப்பட்ட அமுல்படுத்தும் பொறிமுறைகளை அவர்கள் அணுகுவதற்கு முடியும். முரண்பாட்டுத் தீர்வுப் பொறிமுறை பிரயோகத்தில் இருந்ததுடன் உபயோகிக்கப்பட்டது என்பதை பேபி ஜேனின் கதைச் சம்பவம் காண்பித்தது. சில இழப்பீடுகளை கொடுப்பனவு செய்வதற்கு அவரது தொழில் தருனர் கட்டளையிடப்பட்ட போதும், நடைமுறைரீதியான அமுல்படுத்தல் எப்படியோ அவருக்கு பிரதிகூலமாகத் திசைதிரும்பியது.

எனினும், பேபி ஜேனின் நிலைமை நடைமுறையிலுள்ள சட்டங்களிலுள்ள ஒரு பெரும் ஓட்டையை சுட்டிக் காட்டுகிறது. இங்கு, தொழில்வாய்ப்புக் காலத்தின் போது மட்டுமே புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடளிக்க தொழில் தருனர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனரேயன்றி, புலம்பெயர் வீட்டுப் பணியாளரின் வேலை நீக்கம் சடுதியானதாகவும் மற்றும் நியாயமற்றதாகவும் இருந்தாலும் கூட, பணி முடிவுறுத்தலின் பின்னல்ல. பேபி ஜேன், அவருக்குப் புற்றுநோய் ஏற்பட்டதின் காரணத்தினால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார் என்பதுடன் அவரது இரண்டாவது முறைப்பாடான உடலூன பாரபட்சக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொழில் பாரபட்சம், இன்னமும் EOC இல் நிலுவையிலுள்ளது.

மேலதிகமாக, ஹொங்கொங்கின் குடிவரவு சட்ட ஏற்பாடுகள், தொழில் தருனரின் குடித்தனங்களில் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கு வன்முறை மற்றும் துனபுறுத்தலின் இடரேது நிலைகளை அதிகரிக்கிறது. இது, வீட்டுப் பணியாளர்கள் தங்களது தொழில் தருனர்களின் வீட்டு வளாகங்களில் தங்குவதற்கு கட்டாயப்படுத்தும் கூட வாழும் விதி, அவர்களது வேலை ஒப்பந்தம் முடிவடைந்ததின் பின்னர் இரண்டு வாரங்களினுள் ஹொங்கொங்கை விட்டு வெளியேறுவதற்குத் தேவைப்படுத்தும் இரண்டு வார விதி என்பவற்றை உள்ளடக்குகின்றன.




FADWU ஊர்வல அணி, ஹொங்கொங் [படம்: IDWF]

## முடிவுரை மற்றும் முன்னோக்கிச் செல்வதற்கான வழி

### முடிவுரை

வீட்டுப் பணியார்களுக்கு எதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதல் ஆசியாவில் பெரும் கரிசனத்திற்குரிய ஒன்றாக உள்ளது. சம்பவங்களின் கதைகள், வீட்டுப் பணியார்களுக்கெதிரான உடல், உள, பாலியல் மற்றும் பொருளாதார ரீதியிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதல்களின் பொது வடிவங்கள், மற்றும் வீட்டுப் பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் நன்னிலைகள் மீதான இவற்றின் கடுமையான தாக்கங்கள் என்பவற்றுக்கான உதாரணங்களைத் தருகின்றன. துஷ்பிரயோகங்கள் பொறுத்துக் கொள்ள முடியாதளவிற்கு வந்தாலன்றி, தங்களது வேலையை இழக்கும் அச்சம், மற்றும் மாற்றுத் தெரிவுகள் இல்லாமை என்பவற்றினால், வீட்டுப் பணியாளர்கள் அவர்களால் முடிந்த வரை துஷ்பிரயோகங்களுக்கு அநேகம் சமாளித்துப் போகின்றனர். சிலர் தப்பிச் செல்வதற்கான வழியை முயற்சிக்கின்றனர். சிலர் நோய் வாய்ப்பட்டவர்களாவதுடன் அவர்கள் மீட்கப்பட்ட பின்னரும் கூட தொடர்ந்து நோயுற்றவர்களாக உள்ளனர். எனினும், வீட்டுப் பணியாளர்கள் ஓர் உதவி செய்யும் வலையமைப்பைக் கொண்டுள்ள போதும், கல்வி மற்றும் மற்றுமொரு வேலை போன்ற சாத்தியமான மாற்றீடுகள் வழங்கப்படும் போது, அவர்கள் பழைய நிலைக்கு மீள்வதுடன், பதிலுக்கு பங்களாதேஷ், இந்தியா மற்றும் இந்தோனேஷியாவில் காண்பிக்கப்பட்டவாறு வீட்டுப் பணியாளர்கள் அமைப்புகளை இல்லது இயக்கங்களை வலுப்படுத்துவதற்கும் முடியும்.

வீட்டுப் பணிகள் கட்புலனாகதவையாக உள்ளதினால், அது ஒரு ‘நிஜமான வேலை’ எனக் கருதப்படுவதில்லை, மற்றும் அவ்வாறே வீட்டுப் பணியாளர்கள் ‘நிஜமான’ வேலையாளர்களாகக் கருதப்படுவதில்லை என்பதால் வீட்டுப் பணியாளர்கள் வன்முறை மற்றும் துன்புறுத்துதலிற்காளாகும் ஒரு விசேட இடரேதுநிலையைக் கொண்டுள்ளனர். திறன்கள் தேவையற்ற ‘பெண்களின் ஒரு வேலையாக’ வீட்டுப் பணிகள் பொதுவாக ஒரு குறைந்த அந்தஸ்து உடையவையாக உள்ளன. பால்நிலைப்பாரபட்சங்களுக்கு முகங் கொடுக்கும் வீட்டுப் பணியாளர்களில் அநேகமானவர்கள் பெண்கள் மற்றும் இளம்பெண்களாவர். அவர்கள் வசதிகுறைந்த கிராம அல்லது சுதேசிய இனப் பிரதேசங்களிலிருந்து வருபவர்கள் மற்றும் குறைந்த அல்லது பின்தங்கிய சாதிகள் இல்லது இனம் அல்லது மத ரீதியான சிறுபான்மையைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், மற்றும் அநேகம் கல்வி வசதிகளுக்கு குறைந்த வழிவகை கொண்டவர்களாகவும் இருப்பதினால், அவர்கள் ஏனைய பல வடிவங்களிலான பாரபட்சங்களுக்கும் முகங் கொடுக்கின்றனர். அவர்களது தொழில் தருனர்கள், நகரப் பகுதிகளில் உள்ளவர்களாகவும், செல்வந்தர்களாக, உயர்ந்த வகுப்பு அல்லது சாதியிலிருந்து வந்தவர்களாகவும், நல்ல கல்வி கற்றவர்களாகவும் மற்றும் ஏனைய வீட்டுப் பணியாளர்களை விட அதிக அதிகார பலம் கொண்டவர்களாக உள்ளனர். இது அதிக கைத்தொழில் மயமான நாடுகள் மற்றும் பிரதேசங்களுக்கு தங்களது சொந்த நாட்டிலிருந்து புலம்பெயரும் வீட்டுப் பணியாளர்களைப் பொறுத்தவரை உண்மையானதாக உள்ளது.

வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்துதல் ஒரு விதிவிலக்கான நிலைமையல்ல. இது, ஒரு தொழில் தருனரால் ஒரு குறித்த இடம் மற்றும் நேரத்தில் ஒரு வீட்டுப் பணியாளருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒரு தனியான செயல் என்பது பற்றியதல்லை. இங்கே, வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பது ஒரு ‘முறைமைக்குள் கட்டமைக்கப்பட்டுள்ளது’. இது ஒரு திட்ட முறையிலமைந்த நிகழ்வு, வீட்டுப் பணி ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விதம், சட்டங்கள் மற்றும் விதிகள் எவ்வாறு வீட்டுப் பணியாளர்களுக்கு பிரயோகிக்கப்படுகின்றது, மற்றும் இந்தச் சட்டங்கள் மற்றும் விதிகள் அமுல்படுத்தப்படும் போது வீட்டுப் பணியாளர்கள் சார்பாக எவ்வாறு அரசாங்க நிறுவனங்கள் செயற்படும் விதமென; சமுதாயத்தின் சமூக மாதிரிகளில் ஆழமாகப் பொதிந்துள்ளது.

சம்பவங்களின் கதைகள் பின்வருபவற்றைக் காண்பிக்கின்றன:

- விழிப்புணர்வின்மை மற்றும் வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான பால்நிலை மற்றும் ஏனைய வகைகளிலான பாரபட்சங்களின் தொடர்தல் என்பன இருக்கின்ற சட்டங்களின் பயனுறுதியான அமுல்படுத்துதல் மற்றும் புதிய சட்டங்களின் உருவாக்குதல் என்பவற்றையும், அதே போன்று அரசாங்க சேவை வழங்குனர்கள் (பொலிஸ், நீதித்துறை, தொழில் மற்றும் சுகாதார அதிகாரிகள் போன்றனர்), சமூகத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்களால் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான வீட்டுப் பணியாளர்களுக்கு உதவி மற்றும் ஆதரவளித்தலின் ஏற்பாடுகள் என்பவற்றையும் தடைகளுக்கு உள்ளாக்குகின்றன.

- தண்டனை மற்றும் குற்றவியல் சட்டங்கள் கொலை, உடல் மற்றும் பாலியல் ரீதியான தாக்குதல் சம்பவ சந்தர்ப்பங்களின் போது மாத்திரமே வீட்டுப் பணியாளர்களுக்குப் பரிகாரங்களை வழங்குகின்றன. சட்டத்தை பிரயோகித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரங்கள் அளித்தல், மற்றும் குற்றம் புரிந்தவர்களைத் தண்டித்தல் என்பவற்றுக்கு பயனுறுதியான பொறிமுறைகளின் அமுல்படுத்துதலில் ஒரு பெரும் குறைபாடு உள்ளது. வீட்டுப் பணியாளர்கள் ஸ்தாபனங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் நீதியை நாடுவதில் பல வருடங்களுக்கு மனித மற்றும் அரிதான நிதி மூலங்களை செலவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். துஷ்பிரயோகம் மிகக் கடுமையாக இருக்கும், விசேட சந்தர்ப்பங்களின் போது மாத்திரமே, குற்றம் புரிந்தவர்களுக்கான தண்டனையை வீட்டுப் பணியாளர்கள் ஸ்தாபனங்கள் மற்றும் ஏனைய சிவில் சமூகங்களினால் - இணைப்புகளை உருவாக்கி, சம்பந்தப்பட்ட அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் சிவில் சமூகங்களை ஒருங்கிணைத்து, மற்றும் தொடர்ச்சியான பரிந்துரைத்தல் மூலமாக பொதுமக்கள மத்தியில் ஒரு கண்டனக் குரலெழுப்புதல் என்பவை மூலமாக, வெற்றிகரமாக நாடுவது சாத்தியமாக உள்ளது.

- அநேகமான நாடுகளில் பாதுகாப்பான தொழில், சமத்துவம் மற்றும் சமூகப் பாதுகாப்பு சட்டங்களிலிருந்து வீட்டுப் பணியாளர்கள் விலக்கப்பட்டுள்ளனர். இது, தண்டனை மற்றும் குற்றவியல் கோவைகளின் வரையறைக்கு வெளியே நிகழும் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் எனடபவற்றின் பல வடிவங்களுக்கு எதிராக அவர்கள் அரிதாகவே பாதுகாக்கப்படுகின்றனர் என்பதையே இது அர்த்தப்படுத்துகிறது. மேலும், இந்த சட்டங்களின் கீழ் ஏற்பாடளிக்கப்பட்டுள்ள முறைப்பாடு, புலன்விசாரணை மற்றும் முரண்பாட்டுத் தீர்வுப் பொறிமுறை என்பவற்றால் வீட்டுப் பணியாளர்கள் மற்றும் அவர்களது தொழில் தருனர்கள் நன்மை அடைவதற்கு முடியாது.

**வலுவான வீட்டுப் பணியாளர்கள் சங்கங்கள் மற்றும் ஸ்தாபனங்களை (DWOs) ஒழுங்கமைத்து மற்றும் உருவாக்குவது வீட்டுப் பணியாளர்களுக்கு** மிகவும் முக்கியமானதென்பதையே, ஈற்றில் சம்பவங்களின் கதைகள் காண்பிக்கின்றன. வன்முறைகளிலிருந்து துயருறும் வீட்டுப் பணியாளர்களுக்கு வலுவான வீட்டுப் பணியாளர் சங்கங்கள் எவ்வாறு உயிர்நாடியாக இருந்தன என்பதை சம்பவங்களின் கதைகள் எடுத்துக் காட்டுகின்றன. அவை தங்குமிடம் மற்றும் சட்ட உதவி என்பவற்றை வழங்கின, பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு அவை தொழில் தருனர்கள் அல்லது அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தின, மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் துஷ்பிரயோகங்களிலிருந்து தப்பியவர்களாகவும் மற்றும் வீட்டுப் பணியாளர் தலைவர் களாகவும் வருவதற்கு உதவின. நேரடியான உதவிச் சேவைகளை அளிப்பதற்கப்பால், பெண்கள் மற்றும் சிறுவர், வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறையைத் தடுத்தல் மற்றும் பரிகாரம் என்பவற்றுக்கான பரிந்துரைத் தலிலும் அவை ஈடுபட்டுள்ளன. அவை தங்களது உறுப்பினர்கள் மற்றும் ஏனைய வீட்டுப் பணியாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு அவற்றை ஒன்று திரட்டின.

வீட்டுப் பணியாளர் ஸ்தாபனங்கள், அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற பங்காளர்களுடன் மூலோபாயச் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுகின்றன. வீட்டுப் பணியாளர்கள் - சிறுவர்கள் மற்றும் வயது வந்தவர்கள் - மற்றும் சமுதாயங்களிலுள்ள ஏனைய இடரேது நிலை கொண்ட குழுக்களுக்கு எதிரான வன்முறையைத் தடுத்தல் மற்றும் பரிகாரம் என்பவற்றுக்கான சட்டச் சீர்திருத்தம் மற்றும் பயனுறுதியான அமுல்படுத்தல் பொறிமுறை போன்ற நீண்ட காலத் தீர்வுகளுக்கு அவை முயல்கின்றன. அனைத்து மனிதப் பிறவிகளும் வாழ்வதற்கான உரிமையையும், வன்முறை மற்றும் துன்புறுத்துதல் அற்ற வேலையைக் கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்கு வீட்டுப் பணியாளர்கள் ஸ்தாபனங்களின் இணைதல், உள்ளூரிலிருந்து தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் பெண்களின், பணியாளர்களின் மற்றும் மனித உரிமைகள் இயக்கங்களின் ஒரு பகுதியாகவும், மற்றும் அவற்றை வலுப்படுத்துவதாக அமைவதையும் சம்பவங்களின் கதைகள் காண்பித்தன.

**முன்செல்வதற்கான வழி**

*“தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் என்பவற்றைத் தடுத்தல் என்பது பாரபட்சத்தை முடிவுறுத்தல், சமத்துவத்தை முன்னேற்றுதல் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பை விரிவாக்கல் என்பவற்றுடன் பிரிக்க முடியாத வகையில் தொடர்புபட்டுள்ளது”*

**NDWWU, பங்களாதேஷ் மற்றும் SEWA, இந்தியா.**[3]

[3] IDWF, தொழில் உலகில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்துதல் மீதான கோரிக்கைகளின் தளம், ஜெனீவா, 2018

வீட்டுப் பணியாளர்களுக்கு கண்ணியமான வேலை தொடர்பான சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் C189 மற்றும் R 201, மற்றும் தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் தொடர்பான C 190 மற்றும் R 206 என்பன வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்துதலை எவ்வாறு தடுத்தல் மற்றும் இல்லாதொழித்தல் தொடர்பான சர்வதேச தொழில் தரநியமங்களை அளிக்கின்றன. C 190 சர்வதேச தொழில் ஸ்தாபன உறுப்பு நாடுகளை பின்வருபவற்றுக்கு கோருகின்றது:

- தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்துதலை தடுப்பதற்கும் மற்றும் முடிவுறுத்துவதற்கும் ஒரு பால்நிலை- பதிலுணர்வு அணுகுமுறையை அங்கீகரித்தல். அத்தகையதொரு அணுகுமுறை பால்நிலை குறித்த ஒரேமாதிரியான எண்ணங்கள், பல்தன்மையானதும் மற்றும் இடைவெட்டும் பாரபட்ச வடிவங்கள் மற்றும் சமனற்ற பால்நிலை அடிப்படையிலான அதிகார உறவுகள் உட்பட, அடிப்படையான காரணிகள் மற்றும் இடரேதுநிலைக் காரணிகள் என்பவற்றை சமாளித்துக் கையாளுதல் வேண்டும்.

- வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கு எந்தப் பணியாளர்கள் கூடுதலாக வெளிப்படுத்தப்படுகின்றனர் என துறைகள், தொழில்கள் மற்றும் வேலை ஏற்பாடுகளை இனங் காணுதல், மற்றும் இடரேதுநிலை மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

- தொழில் உலகில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்தலின் பாதிக்கப்பட்டவர்கள் பால்நிலை – பதிலுணர்வு, பாதுகாப்பானதும் மற்றும் பயனுறுதியான முறைப்பாடு மற்றும் முரண்பாடுத் தீர்வுப் பொறிமுறைகள், ஆதரவு, சேவைகள் மற்றும் பரகாரங்கள் என்பவற்றுக்கு பயனுறுதியான வழிவகைகளைக் கொண்டிருப்பதை உறுதிசெய்தல்.

அரசாங்கங்கள் C 189 மற்றும் C 190 என்பவற்றை அங்கீகரிப்பதற்கும் மற்றும் இந்த உடன்படிக்கைகளை R 201 மற்றும் R 206 என்பவற்றுக்கு அமைவாக அமுல்படுத்துவதையும் ஆதரித்து IDWF அதன் இணைந்த அமைப்புகளுடன் தொடர்ந்து ஆதரவளித்து மற்றும் கூட்டாக செயற்படும். IDWF உடன் இணைந்த அமைப்புகள் பல நாடுகளில் வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதலை ஒரு முன்னுரிமையாகக் கொண்டு அதனை இல்லாதொழித்துள்ளன.

இந்த கதைச் சம்பவங்களின் வெளியிடுதல், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் மற்றும் ஆசியாவில் வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்துதவை எவ்வாறு எதிர்த்து போராடுவது தொடர்பாக வீட்டுப் பணியாளர் ஸ்தாபனங்கள் மத்தியில் அறிவைப் பகிர்ந்து கொள்வதிலான ஒரு முதல் படியாகும்.

இரண்டாவது படி, அனைத்து வீட்டுப் பணியாளர்களுக்குமாக கண்ணியமான வேலை மற்றும் வன்முறை மற்றும் துன்புறுத்துதலற்ற வேலைத் தலம் என்பவற்றை பயனுறுவதற்கு வீட்டுப் பணியாளர்கள் மற்றும் அவர்களது ஸ்தாபனங்கள் அவை தொடர்பான அறிவையும், திறன்களையும் கொண்டிருப்பதற்கு ஒரு **'பயிற்சி நூல்: வன்முறை மற்றும் துன்புறுத்துதலுக்கு எதிராக வீட்டுப் பணியாளர்களை ஒழுங்கமைத்தல்'** உருவாக்குதல் மற்றும் உபயோகித்தல் என்பதாகும்.

## ஆதார மூலங்கள்

IDWF, *தொழில் உலகில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்தல் தொடர்பான கோரிக்கைகளுக்கான தளம்,* ஜெனீவா, 2018.

IDWF, *பால்நிலை அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான தீர்மானம்,* இரண்டாவது உலக IDWF மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது, கேப் டவுன், 2018.

IDWF, *வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான IDWF மதிப்பாய்வு அறிக்கை, ஆசியா,* பிரெட் போர் த வேர்ல்ட் அன்ட் லேர்ண் (Bread for the World and LEARN) உடனான பங்குடமை, பிலிப்பைன்ஸ், ஹொங்கொங், ஜனவரி 2018.

ILO, *தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்துதல் தொடர்பான உடன்படிக்கை இல. 190 மற்றும் பரிந்துரை இல. 206 ,* ஜெனீவா, 2019.

ILO, *உலகம் முழுவதிலுமான வீட்டுப் பணியாளர்கள்: உலக மற்றும் பிராந்திய புள்ளிவிபரம் மற்றும் சட்டப் பாதுகாப்புக்கான அளவு,* ஜெனீவா, 2013.

ILO, *வீட்டுப் பணியாளர்களுக்கு கண்ணியமான வேலை தொடர்பான உடன்படிக்கை இல. 189 மற்றும் பரிந்துரை இல. 201,* ஜெனீவா, 2011.

ILO, *கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவில், பணியில் சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மை, வழிகாட்டல்,* பாங்கொக், 2011.

ILO மற்றும் IDWF, *ஆசியா மற்றும் பசுபிக்கில் வீட்டுப் பணியாளர்களுக்கு கண்ணியமான வேலை, பயிற்றுனர்களுக்கான கைநூல்,* பாங்கொக் மற்றும் ஹொங்கொங், 2012.

**பின்னிணைப்பு**

நேர்காணல் வழிகாட்டி

1. உங்களது சங்கத்தால் கையாளப்பட்ட பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் ஒரு முக்கியமான சம்பவத்தை தயவுசெய்து பகிர்ந்து கொள்ளவும்: பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான கோரிக்கைகளின் IDWF தளத்தைக் குறிப்பிடவும், வன்முறைகள் உடல், உள, பொருளாதார/நிதி மற்றும் கலாச்சார ரீதியிலான வன்முறையின் வடிவங்களாக இருக்க முடியும்.
2. பாதிப்படைந்தவருக்கு நீதியைப் பெற்றுக் கொள்வதிலான சவால்கள் மற்றும் இடைவெளிகள் தொடர்பான உங்களது பகுப்பாய்வுகள்.்.அவதானித்தல்களை தயவுசெய்து பகிரவும். அத்தகைய சம்பவங்களைக் கையாள்வதில் உங்களது சங்கம் என்ன நடவடிக்கையை எடுத்தது? **இதனை அதிக பட்சமாக 400 சொற்களில் சுட்டிக் காட்டுவதற்கு முயலவும்.**

## தரவு சரிபார்த்தல் அட்டவணை

| | | |
|---|---|---|
| குழுவின் விபரம் | ஸ்தாபனத்தின் பெயர்<br>முகவரி<br>ஸ்தாபனத்தின் வகை | பூரணமானது (✓)<br>/பூரணமற்றது (✕) |
| எழுதியவர் | பெயர்<br>தொடர்பு இலக்கங்கள் (அலைபேசி/வட்ஸ்அப்)<br>மின்னஞ்சல் | |
| **சம்பவ அறிக்கை** | | |
| யார் | பாதிப்படைந்தவர்:<br>பெயர், வயது, பால்நிலை, பிறந்த நாடு,<br>வேலை செய்த வருடம்<br><br>குற்றம் புரிந்தவர்:<br>பெயர்<br>வயது<br>பால்நிலை<br>பிறந்த நாடு<br>வேலைக்கமர்த்திய வருடம் | |
| எங்கே | வீடு (சமையலறை, படுக்கையறை, கூடம், முன்பகுதி)<br>நகரம்<br>நாடு | |
| எப்பொழுது | நிகழ்தகவு:<br>எந்தளவிலான நிகழ்தகவு? (நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம்)<br>திகதி & வருடம்:<br><br>நேரம்:<br>இரவு (நள்ளிரவு))<br>பகல் (காலை, மாலை) | |
| என்ன | பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் தன்மை:<br>உணர்வு ரீதியானது/உடல் ரீதியானது/பொருளாதாரம் & நிதி ரீதியானது/கலாச்சார ரீதியானது<br><br>வன்முறையின் விபரணம்:<br>செயல்கள்<br>நடவடிக்கைகள்<br><br>அது பால்நிலை அடிப்படையிலானதா?<br>தயவுசெய்து விளக்கவும். | |

| | | |
|---|---|---|
| எப்படி | பிரச்சினை/முரண்பாடு என்ன? ?<br>வாக்குவாதம்<br>உடன்பாடின்மை<br>தவறு<br><br>பிரச்சினைக்கான காரணம் (கள்) என்ன?<br><br>ஏன் அது பால்நிலை அடிப்படையிலானதா?<br>தயவுசெய்து விளக்கவும் | |
| **பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் தாக்கம்** | | |
| பாதிப்படைந்தவர் மேல் | உள ரீதியாக<br>உடல் ரீதியாக<br>உணர்வு ரீதியாக<br>நிதி ரீதியாக<br>சமூக ரீதியாக (குடும்பம்) | |
| குற்றம் புரிந்தவர் மேல் | உள ரீதியாக<br>உடல் ரீதியாக<br>உணர்வு ரீதியாக<br>நிதி ரீதியாக<br>சமூக ரீதியாக (குடும்பம்) | |
| **பாதிப்படைந்தவரின் பதிலுணர்வு** | | |
| பதில் நடவடிக்கை/உடனடியான பதிலுணர்வு | | |
| மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | | |
| நடவடிக்கைகளின் விளைவுகள் | | |
| முகங் கொடுத்த சவால்கள் | | |
| **அமைப்பு ரீதியான உதவி** | | |
| குழு/சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | | |
| நடவடிக்கைகளின் விளைவுகள் | | |
| முகங் கொடுத்த சவால்கள் | | |
| வெற்றியான சம்பவங்கள் | | |
| கற்றுக்கொண்ட பாடங்கள் | | |
| பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் மீள் நிகழ்தலைத் தடுப்பதற்கான சிறந்த நடவடிக்கைகள் மீதான பிரதிபலிப்புகள் | | |
| **சட்டக் கட்டமைப்பு (சட்டங்கள் & கொள்கைகள்)** | | |
| மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கை | | |
| விசாரணை | | |
| விசாரணையின் விளைவு | | |
| பாதிப்படைந்தவர் மீதான தாக்கம் | | |
| குற்றம்புரிந்தவர் மீதான தாக்கம் | | |
| முகங்கொடுத்த சவால்கள் | | |
| மாற்றத்திற்கான யோசனைகள் | | |

**ஸ்தாபனங்களின் தொடர்பு விபரங்கள்**

### JALA PRT, இந்தோனேஷியா

தொ.பே: +62 81247200500
செயலக முகவரி: Jl. kalibata Utara I no.38 a, rt.1/rW.2, kalibata, kec. pancoran, kota Jakarta selatan, Daerah khusus Ibukota Jakarta 12740, Indonesia
மின்னஞ்சல்: jala_prt@yahoo.com
blog: http://www.tungkumenyala.com/ Facebook: Jala prt

### ADW — கம்போடியா

தொ.பே: +855 078 711 494/098 575 174/097 55 92 109
முகவரி: #1h, street 907, sangkat toul sangker, khan reosey kao, phnom penh, cambodia
மின்னஞ்சல்: adwcambodia@gmail.com
முகநூல்: association of Domestic Workers -aDW

### UNITED — பிலிப்பைன்ஸ்

தொ.பே: +63(02) 332-1434
முகவரி: 94 scout Delgado, laging handa, quezon city, philippines
மின்னஞ்சல்: unitedphildomworkers@gmail.com
முகநூல்: United Domestic Workers of the Philippines

### NDWF Patna — இந்தியா

தொ.பே: + 91 9708809122
முகவரி: 5b 1 kulharia complex, ashok rajpath, bankipur, patna 4, India
மின்னஞ்சல்: indiandwf@gmail.com

### GKS — Gurgaon, இந்தியா

தொ.பே: +91 9560352313 / 7042310055
முகவரி: house no 375, Dada wala mohalla, behind mcD school, kapashera, south West Delhi, India
மின்னஞ்சல்: gksgurgaon@gmail.com




**NDDWU— பங்களாதேஷ்**

தொ.பே: +88-01718683331
முகவரி: 31/F, topkhana road, Dhaka-1000,
bangladesh
மின்னஞ்சல்:murshida_ndwwuakter@yahoo.cm

**SKDWA – குவைத்**

மின்னஞ்சல்: sandigankw@gmail.com
முகநூல்: Sandigan Kuwait Domestic Workers Association

**FADWU — ஹொங்கொங்**

தொ.பே: +852 2770 8668 / 9163 3734
முகவரி: 19/F 557-559 nathan road, kowloon, hongkong
மின்னஞ்சல்: fadwu.hk@gmail.com
முகநூல்: @HKFADWU




# வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்துதல்:

## ஆசியாவிலிருந்தான சம்பவங்களின் கதைகள்

வீட்டுப் பணியாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் (IDWF)

**IDWF தொடர்கள்**
International Domestic Workers Federation (IDWF)

**Workshop No. 13, 13/F, Kwai Cheong Centre,**

**No. 50 Kwai Cheong Road, Kwai Chung, N.T.**

**Hong Kong**

மின்னஞ்சல்: info@idwfed.org

www.idwfed.org

முகநூல்: IDWFED